# சட்டப்பொருள் விளக்கம்

## (INTERPRETATION OF STATUTES)




பெ. ராஜாராம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—799

# சட்டப் பொருள் விளக்கம்

ஆசிரியர்

**பெ. ராஜாராம்,** எம். எல்.,
இளநிலைப் பேராசிரியர்,
சென்னைச் சட்டக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1978
No. of Copies—2000

T.N.T.B.S. (C.P.) No. 799

© Government of Tamilnadu

**INTERPRETATION OF STATUTES**

P. RAJARAM

*Price Rs.* 2-10

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
GANESA PRINTING WORKS,
55, Muthumari Chetty Street,
Madras-600 001

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினே ழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங் கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவை யான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளி யியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல் களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **சட்டப் பொருள் விளக்கம்** என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 799 ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 834 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களை யும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங் களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறை வேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங் களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக!

**செ. அரங்கநாயகம்**

# அறிமுகம்

முறையான சட்ட விளக்கம் காணும் அறிவு சட்டம் பயிலும் மாணவர்களுக்கு அத்தியாவசியமானது என்ற 'இந்தியச் சட்ட அறிஞர்கள் கழக'த்தின் (Bar Council of India) பரிந்துரை மிகவும் வரவேற்கப்பட்டுச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. மிருக இச்சைகளிலிருந்து (Animal instincts) மனிதன் விடுபட்டுச் சமுதாய அமைப்பை ஏற்படுத்தி அதில் சீரான அமைதியான வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொள்ள அனைவரும் ஒப்புக் கொண்ட சட்ட திட்டங்களை வகுத்த அந்த நாள் முதல் இத் துறை வளர்ச்சியடைந்து வருகிறது. சமுதாய அமைப்புகளும், சீரிய சட்ட முறைகளும் குறிப்பிட்ட சில நாடுகளில் தோன்றிப் பின் பிற நாட்டு மக்களை வந்தடைந்தன என்ற கருத்து மிகவும் போலி யானது என்பது மட்டுமன்று, மற்ற இனத்து மக்களிடையே நிலவி வந்த பழக்கவழக்கங்களையும், நாகரிகத்தையும், சீரிய கோட் பாடுகளையும் ஆராய்ந்து அறியாமை அல்லது அறிந்தும் அவற் றைத் தாழ்மைப்படுத்தும் முயற்சி என்பது வெளிப்படை.

விஞ்ஞான முன்னேற்றத்தால் மிகச் சுருங்கிவிட்ட உலகத் தின் ஒரு கோடியில் அமைந்துள்ள ஒரு நாட்டில் ஏற்படும் எந்த ஓர் அறிவியலிலும், கலையிலும் அல்லது நாகரிகத்திலும் ஏற்படு கின்ற வளர்ச்சி அல்லது மாற்றம் மற்றொரு கோடியில் உள்ள நாட்டை மறுகணமே வந்தடைவது அல்லது அறிந்து புறக்கணிக் கப்படுவது வியப்புக்குரியது அன்று. ஆயின், தங்களைத் தவிர இந்த உலகில் வேறு பல மனித சமுதாயங்களும் வாழ்ந்துகொண்டிருக் கின்றன என்ற உண்மையே தெரியாத அளவுக்கு ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்றுப் போயிருந்த அந்தப் பண்டைக் காலத்தில் ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் மற்றொன்றைப் பாதிப்பது (Influence) என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்த அந்தக் காலத்திலும் மனித அறிவு பல துறைகளில் ஒரே மாதிரியாகச் செயல்பட்டிருக்கிறது என்ற உண்மை மிகவும் வியப்புக்குரியது என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது. அவரவர்களின் தேவைகளுக்கு ஏற்றபடியும், பல இயற்கைக் காரணங்களினாலும் ஒரு துறையில் ஏற்படும் வளர்ச்சி பல

சமுதாயங்களில் காலச் சக்கரத்தில் முன்பின் அமைந்திருக்கலாமே ஒழிய, ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு துறையிலும் சுயமாகச் செயல்பட்டுத் தங்களுக்கேற்ற ஒரு முறையை வகுத்துக் கொண்டது என்பது சரித்திர ஆசிரியர்கள் ஆய்ந்து தெளிந்த உண்மை.

தங்களை வழிநடத்திச் செல்ல எவ்வாறு ஒரு சமுதாயம் தனக்கேற்ற கோட்பாடுகளைச் சுயமாக வகுத்துக்கொண்டதோ அதேபோல் அந்தச் சட்ட திட்டங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் காலப் போக்கில் விளக்கங்களும் விதி விலக்குகளும் அளித்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் இயல்பாகவே வந்தது. ஏனெனில், எந்த ஒரு பழக்கவழக்கத்தையும், துறையையும் கட்டுப்படுத்தி ஆட்சி செய்யும் சட்ட திட்டங்கள் அந்தப் பழக்க வழக்கங்கள் ஏற்படும் முன்பாகவே இயற்றப்படுவது இல்லை. எந்த ஒரு சட்டமும், அதன் ஆளுகைக்கு உட்பட்ட மனித நடவடிக்கைகள் சமுதாயத்தில் நன்மை தீமைகளை ஏற்படுத்தும் அளவுக்கு வளர்ந்த பின்புதான் இயற்றப்படுகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. அந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் குறிப்பிட்ட அந்தச் செயல்கள் என்னென்ன நன்மை தீமைகளைச் செய்திருக்கின்றன என்பதைப் பொறுத்தே சட்டம் அமைகிறது. இவை காலப்போக்கில் வளர்ந்துகொண்டே இருக்குமேயல்லாமல், இயற்றப்பட்ட சட்டத்தின் எல்கைகளுக்குள்ளேயே நிலைத்து நிற்பதில்லை.

சட்டம் இயற்றப்பட்ட பின் அதன் ஆட்சிக்குட்பட்ட வழக்குகளின் சில தனிப்பட்ட அம்சங்களுக்குத் தீர்வுகாண அந்தச் சட்டத்தில் வழிவகைகள் வெளிப்படையாக இல்லாது போவது இயற்கையே. ஆகவே, இயற்றப்பட்டிருக்கும் சட்டத்திற்கு விளக்கம் கண்டு, அதில் பொதிந்திருக்கும் உண்மை நோக்கத்தின்மூலம் தீர்வுகாண வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மேலும் தனிப்பட்ட சில வழக்குகள், அந்தச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டுவருபவையா என்ற ஐயங்கள் எழுப்பப் படும்போதும் நீதிமன்றங்கள் சட்டங்களுக்கு விளக்கம் காண முற்பட வேண்டியதிருக்கிறது. குடியாட்சி முறையில் சட்ட மன்றங்கள் சட்டங்களை இயற்றும்போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள் வாய்ப்புகள் (Circumstances and instances) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுன நிகழ்ச்சிகள் அவற்றைத் தீர்ப்பதற்குண்டான வழிவகைகளை நூற்றுக்குநூறு சதவிகிதம் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டால் நீதிமன்றங்களின் பணி

மிகவும் எளிதாகிவிடும். ஆயின் இது இயலாத ஒன்று. எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் வாய்ப்புகள் இருந்து விட்டாலும், அவற்றை எளிதான நடையில் எழுதிச் சந்தேகமில்லாமல் செய்வது அசாதாரணமான, இயலாத பணி. மேலும் அது மிகப் பரந்தும் பொதுவான கருத்தும் கொண்டதாக (Wide and general meaning and makes it difficult for particular application) அமைந்துவிடுவதால், எடுத்தாள்வது எளிதாக இருப்பதில்லை.

சட்டங்களுக்கு விளக்கம் காண முயலும் இந்த அறிவியல், மாணவர்களுக்கு மிகவும் மாறுபட்ட ஓர் அனுபவமாக இருக்கும். ஏனெனில், நாம் இங்கே எந்த ஒரு சட்டத் துறையைப்பற்றியோ எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தைப் பற்றியோ ஆராயப் போவதில்லை. சட்ட மன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியில் நீதிமன்றங்கள் கையாளும் நியதிகளையே கற்கின்றோம். நீதிமன்றங்களுக்கு, சட்ட மன்றங்கள் ஒரு வரைமுறையையே (guidelines) கொடுக்கின்றன. Statutes are mere guidelines to the Courts. They are not exhaustive in the sense that they do not contain every possible cases and circumstances and solutions for them, so that whenever a case arises before the court, the statute has a provision catering completely to the given case. அதாவது ஒரு வழக்கு நீதிமன்றத்தின்முன் வரும்போது, முற்றிலும் அந்த வழக்குக்கு உரித்தான முறையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பகுதி (provision) சட்டத்தில் இருப்பதில்லை. அப்படி இருப்பின் நீதிமன்றத்தின் பணி மிகவும் இயந்திரமயமாகியிருக்கும் (Simple and automatic).

இவ்வாறாகத் தொன்றுதொட்டு அத்தியாவசியமானதொன்றாக இருந்துவரும், இந்தச் சட்டப் பொதிவுக் காண்பியல், பல்வேறு இக்கட்டான நிலைகளைத் தாண்டி, இப்போது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட, ஒப்புக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குள் இயங்கும் அறிவியலாகத் திகழ்கிறது.

இந்திய வழக்கறிஞர்கள் கழகம் பரிந்துரைத்தபடி இவ்வறிவியல் நான்கு பகுதிகளாகப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவையாவன: முதலாவது, சட்ட விளக்கம் அல்லது சட்டப் பொதிவுக் காண்பியல் (Interpretation of Statutes). இரண்டாவது சட்டமியற்றுவதற்கான நியதிகள் (Principles of Legislation). மூன்றாவது சட்டம் வரைதல் (Legislative Drafting). நான்காவது சட்டத்தில் கிடைக்கும் தீர்வழிகள் (Legal Remedies). மேற்கண்ட பகுதிகளின்படியே இந்நூலும் எழுதப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


பக்கம்

**பகுதி ஒன்று**

1. சட்டப் பொருள் விளக்கம் ... 1
2. பொதுவான சொற்களைக் கையாளுதல் ... 13
3. வரையறு பொருள்கோள் முறை ... 16
4. பிடி நழுவல் தவிர் பொருள்கோள் முறை ... 23
5. அதிகார வரம்புகள் பற்றிய அனுமானங்கள் ... 26

**பகுதி இரண்டு**

1. சட்டமியற்றுவதன் அடிப்படைக் கோட்பாடுகள் (அரசியல் கோட்பாடு) ... 50
2. மதிநுட்ப உயர்வுநிலை ... 52
3. எளிமைக் கோட்பாடு ... 57
4. விருப்பு வெறுப்பு அடிப்படை ... 60
5. இன்ப துன்பம்-பலவிதம் ... 64
6. சந்தர்ப்பங்களின் ஆதிக்கத்தில் உணர்வுநிலை ... 66
7. அரசியல் நன்மை தீமை ... 70
8. ஏன் சில செயல்கள் குற்றமெனக் கருதப் படல் வேண்டும்? ... 73
9. தார்மீகக் கோட்பாடுகளும் சட்டமியற்றுதலும் ... 75
10. சட்டமியற்றுதலில் தகுதியற்ற காரணங்கள் ... 77

**பகுதி மூன்று**

1. சட்டம் வரைதல் ... 78

**பகுதி நான்கு**

1. சட்டத் தீர்வழிகள் ... 81

பகுதி ஒன்று

# 1. சட்டப் பொருள் விளக்கம்

## சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கை
## (Legislative Intention)

முன்னுரையில் சட்டப் பொருள் விளக்கம் காண்பதற்கான அவசியத்தையும் அதன் வளர்ச்சியையும் கண்டோம். 'சட்ட மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை இயற்றும்போது ஓர் உள்ளக்கிடக்கையுடன் (intent) ஒரு பொது நோக்கும் கொண்டிருந்தது' என்ற கருத்தை மையமாகக்கொண்டே சட்டப் பொருள் விளக்கம் காண்போர் செயல்படுகின்றனர்.

ஆனல், சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கை என்னும் கருத்து மிகவும் நுண்ணிய, சிக்கலான ஒரு விஷயமாகவே (a delicate subject) கருதப்பட்டுவருகின்றது. இதன்பால் சட்ட விற்பன்னர்களும், புகழ்பெற்ற நீதிபதிகளும் பல்வேறு கருத்து கொண்டவர்களாக இருக்கின்றனர்.

'நோக்கம்' என்னும்சொல் மனநிலை சம்மந்தப்பட்ட ஒன்றையே குறிக்கிறது. மனநிலை தொடர்பு இன்றி எழுதப்படும் எந்த ஒரு சொல்லும், வாக்கியமும் அல்லது சட்டமும் எவ்விதக் கருத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்க முடியாது. எனவே, நோக்கம் எனும்போது உள்நோக்கம், மனநிலை சார்ந்த நோக்கம் என்பதே பொருள்படும். ஆகையினல், மனநிலை சார்ந்த நோக்கத்தை அறிய மனேதத்துவம் பயின்றிருக்க வேண்டும். ஆனல், நீதிபதிகள் சட்டத்தில் தேர்ந்தவர்களேயன்றி மனேதத்துவத்தில் தேர்ந்தவர்களாகக் கருத முடியாது. எனவே, சட்டத்தின் உள் நோக்கை ஆராயும் பணியில் நீதிபதிகளின் திறமை அல்லது தகுதி போதுமானதா என்பது ஐயப்பாட்டிற்கு இடமளிக்கிறது என்று மனேதத்துவ நிபுணர்கள் சாடுகின்றனர். இம் மாதிரியான விமரிசனம் முதற்கட்டமாக எழுந்த ஒன்ருகும்.

இரண்டாவது, கட்டத் தாக்குதல் சட்டமன்றம் நோக்கம் கொண்டிருந்தது என்ற அடிப்படைக் கருத்தையே பலவீன

மாக்கும் முயற்சியில் அமைந்துள்ளது. இந்த விமரிசகர்களின்படி, ஒரு தனிநபர் ஒரு கருத்தைக் கூறும்போதோ எழுதும்போதோ ஓர் உள்நோக்குடன் அதைச் செய்தார் என்று கூறுவதில் உண்மை இருக்கமுடியும். ஆனால், எப்படி பல்வேறுபட்ட தனி மனிதர்கள் அங்கம் வகிக்கும் ஒரு சட்டமன்றம் இயற்றும் ஒரு சட்டம் எவ்வாறு ஓர் உள்ளக்கிடக்கை கொண்டிருக்க முடியும்? எனவே, சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கை என்பது ஒரு மாயை; இல்லாத ஒன்றை இருப்பதாகக் கருதித் தேடிச் செல்லும் நீதிபதிகள் மாயமான் பின் செல்பவர்களே !

மூன்றாவதாகக் கூறப்படுவது, இலக்கண இலக்கிய ரீதியாக ஒரு கருத்தை வெளியிடும் வாக்கியத்திற்கு, அதனுடைய கர்த்தா வின் உள்ளக்கிடக்கையின் ரூபத்தைக் கொடுக்கும் முயற்சி எப்போதுமே தனித் தன்மைகொண்டே (independent of the author's motives) இருக்கும்.

நான்காவது, 'சட்டம் மேலெழுந்தவாரியாக, ஆனால் நிச்சய மாக ஒரு விஷயத்தைக் கூறும்போது, அதனுடைய உள் நோக்கத்தை விளக்கிக் காண்பது எளிதான செயல்தான். சட்டப் பொருள் விளக்கம் காண்போர் இத்துடன் நின்றுவிடுவதில்லை. சட்டமன்றம் நினைத்தே இராத, இயற்றப்பட்ட சட்டத்தில் இலேசாகக் கோடிட்டுக்கூடக் கூறப்படாத ஒரு விஷயத்தை, அது சட்டமன்றத்தின் கவனத்தில் இருந்திருந்தால் எவ்வாறு தீர்வு காணப்பட்டிருக்கும் என்று ஆராயும் அளவுக்குச் செல்லு கின்றனர். முற்றிலும், நடைபெறாத அனுமானத் தன்மை (hypothetical) சார்ந்த இந்த முயற்சி (step) அபத்தம் என்பதோடு ஆபத்தாகவும் முடியும்' என்ற விமரிசனமாகும்.

இத்தகைய விமரிசனங்கள் Dean Pound, Prof. Julias Stone, Prof. Gray போன்ற சட்ட நிபுணர்களாலும், Justice Oliver Wendell Holmes, Justice Cardojo, Justice Frankfurter போன்ற புகழ்பெற்ற நீதிபதிகளாலும் கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே, சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கை என்ற கருத்தை இத்தகைய குறைநிறைகளுடன் ஏற்றுக்கொண்டு சட்டப்பொருள் விளக்க முயற்சியில் கையாளப்படும் விதிமுறைகளை அடுத்து வரும் பக்கங்களில் காண்போம்.

## சட்டப் பொருள் விளக்க முறைகள்
### (Various Methods Involved in Interpretation of Statutes)

ஆங்க்லோ-சேக்ஸன் (Anglo-Saxon) சட்ட இயல் வழி இயங்கும் நீதிமன்றங்கள் சட்டப் பொருள் விளக்க முயற்சியில்

சட்டமன்றங்களின் நோக்கத்தைக் கண்டறிவதை முதன்மையாகக் கொண்டிருக்கின்றன. அதற்காக மூன்று முக்கிய வழிமுறைகளை வகுத்திருக்கின்றனர். அவையாவன :

1. இலக்கன மரபு குன்றுப் பொருள் விளக்கம் (Literal Interpretation).
2. சட்டத்தின் இலட்சியத்திற்கு ஊறு விளைவிக்கா தாராள மான பொருள் விளக்கம் (Liberal Interpretation).
3. பொன் விதி (Golden Rule).

ஆனால், இம் மூன்று விதிகளும் முடிவானவையல்ல. இம் மூன்றை மட்டுந்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இம் மூன்றினுள் ஏதாவது ஒன்றையாவது கடைப்பிடிக்க வேண்டும் என்ற வரம்பும் இல்லை. இது தொடர்பாக நீதிமன்றங் களின் சுதந்திரம் பறிக்கப்படவில்லை. இவற்றை இப்போது தனித்தனியாகக் கவனிப்போம்.

## 1. இலக்கண மரபு குன்றுப் பொருள் விளக்கம்

முதன்மையானதும் அடிப்படையானதுமான இவ் விதி யாதெனில், சொற்களும் சொற்றொடர்களும் இலக்கண மரபு குன்றுமல் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். உபயோகிக்கப்பட்டிருக்கும் சொற்றொடரில் வேறுவிதமாகப் பொருள் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லாத பட்சத்தில், அதை இலக்கண முறைப்படியே பொருள் கொள்ள வேண்டும். இக் கருத்தை மேலும் விளக்கும்போது லார்டு எவர்ஷெட் (Lord Evershed, M.R.,) 'அதிக விளக்கங்களும், மிகவும் நீளமாகும் உள்ள நவீன சட்டங்கள் இலக்கண மரபு குன்றுமல் விளக்கம் கொள்ளும் இந்த முறை எவ்வளவு பாது காப்பானது என்பதை மிகவும் எடுத்துக்காட்டியிருக்கின்றன' என்று கூறுகிறார்.

மேலும், பேரல் எதிர் போட்ரீ (Barrell *Vs.* Fordree) என்ற வழக்கின்போது லார்டு வாரிங்டன் (Lord Warrington) கூறிய கருத்தாவது : 'இவ் விதியைக் கையாளும்போது, கையிலிருக்கும் வழக்கின் தன்மையைப் பார்க்காமல், சொற்களின் இயற்கை யான அர்த்தத்தைக் கொள்வதுதான் மிகவும் சரியானதும் பாது காப்பானதுமான முறையாகும்'.

சுற்றிவளைக்காமல், சிக்கலில்லாமல், மிகவும் தெள்ளத் தெளி வாக, ஒவ்வொரு வாக்கியமும் ஒரேஒரு கருத்தைத் தவிர வேறு

கருத்துகளுக்கு இடங்கொடுக்காமல், ஒரு சட்டம் இயற்றப்பட முடியுமேயானால், அந்தச் சட்டத்தை அமலாக்கும்போது விளைவுகள் எவ்வளவு கடுமையானவையாகவும், அடி முட்டாள்தனமாகவும், சாதாரணப் பொது அறிவுக்குப் புறம்பாகப்பட்டாலும், அது அமலாக்கப்பட்டே தீரவேண்டும்.

சட்டப்பொருள் விளக்கம் காணும் முறையை, நீதிமன்றம் தன்முன் வாதிடுபவர்கள் எது நீதியானது, முறையானது, தற்போதைய வழக்கிற்குப் பொருத்தமானது என்று கூறுவதிலிருந்து எடுத்துக்கொள்ளக் கூடாது என்று Coleridge, J., Gwynne *Vs.* Burnell (1840) என்ற வழக்கின்போது கூறுகின்றார்.

சொற்களை அவற்றின் அர்த்தத்திற்குப் புறம்பாக, சிலவற்றை விட்டுவிட்டோ அல்லது சிலவற்றை சேர்த்துகொள்ளும் ரீதியில் பொருள் கொள்ளக்கூடாது. ஏன் இவற்றை அவ்வாறு சேர்த்துக் கொள்ளக் கூடாது அல்லது விட்டுவிடக் கூடாது என்பதற்குத் தகுந்த முகாந்திரம் எதுவும் இல்லை என்பதைக் காரணம் காட்டக்கூடாது (Whitehead *Vs.* James Stott Ltd,).

இலக்கண ரீதியாகப் பொருள் கொள்ளுதல் என்ற இந்த மேற்கண்ட விதிக்கு உதாரணமாகச் சில வழக்குகளைப் பார்க்கலாம்.

**பாலே எ. வார்டால்** (Pawley *Vs.* Wharldall, 1966) : மோட்டார் வாகனச் சட்டப்படி கவனமில்லாமல், பாதையை உபயோகப்படுத்தும் மற்ற நபர்களுக்குக் குந்தகம் விளைவிக்கும்படி ஒரு வாகனத்தைச் செலுத்துதல் குற்றமாகும். இந்த மற்ற நபர்கள் என்ற சொல் தான் ஓட்டிச்சென்ற வாகனத்திற்குள் இருக்கும் நபர்களை உள்ளடக்கியதாகாது என்றும் வாகனச் சட்டத்தின் முக்கிய நோக்கம் வாகனத்திற்கு வெளியே நெடுஞ்சாலையை உபயோகிப்பவர்களைப் பாதுகாப்பதுதான் என்றும் ஓட்டுநரின் சார்பில் இந்த வழக்கில் வாதிடப்பட்டது. ஆனால், நீதிமன்றம் மற்ற நபர்கள் என்ற சொல் அதனுடைய இலக்கண ரீதியில் ஓட்டுநரைத் தவிர மற்ற அனைவரும் என்று பொருள் கொள்ளப்பட்டு, வாகனத்திற்குள் இருக்கும் நபர்களை அச்சுறுத்தும் வகையில் ஓட்டியது குற்றம் என்று தீர்ப்பளித்தது.

மற்றுமொரு நல்ல உதாரணமாக Miller *Vs.* Salomons (1853) என்ற வழக்கைக் கூறலாம். சட்டப்படி ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் 'உண்மையான ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டான

நம்பிக்கையுடன்' உறுதிமொழி எடுத்துக்கொண்ட பின்தான் ஒட்டளிப்பதற்கு உரிமையுடையவர் ஆகின்றார் என்ற விதி அதனுடைய இலக்கண அர்த்தத்துடன் நீதிமன்றத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு 'Jew' மதத்தவர் பாராளுமன்ற உறுப்பின ராவதைத் தடை செய்தது என்றும் 'உண்மையான கிறிஸ் தவனுக்குண்டான நம்பிக்கை' என்னும் சொல் உறுப்பினரின் விசுவாசத்தைச் சோதிப்பதற்கு இயற்றப்பட்டதே அன்றி, அவர் களின் மத சம்மந்தப்பட்டதன்று என்று சட்டமியற்றப்பட்ட சரித்திரம் காட்டுகின்றது.

மற்றுமொரு வழக்கில், 'குத்தகைப் பணம் செலுத்தாததற் காக, குத்தகை விட்டவர் (lessor) உடமை மீட்புரிமைக்காக (Right of Re. Entry) வழக்குத் தொடரும் பட்சத்தில், குத்தகை எடுத்தவர் (lessee) ஐந்து தினங்களுக்குள் குத்தகை பாக்கியை யும், செலவுத் தொகைகளையும் நீதிமன்றத்தில் செலுத்திவிட்டால், வழக்கு நிறுத்தப்படவேண்டும்' என்ற சட்டப் பிரிவு அதனுடைய இலக்கண அர்த்தத்தில் நீதிமன்றம் எடுத்துக்கொண்டு, ஓர் அன்னியர் அந்தப் பாக்கியை நீதிமன்றத்தில் செலுத்தியிருப்ப தால் வழக்கு தீர்ந்துபோனதாகக் கருதவில்லை (Matthews *Vs.* Dobbins, 1963).

**இல்லாமையைக் கற்பித்தல் கூடாது** (Omissions not to be Inferred) இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதிக்கு உப விதியாக இவ் விதி கருதப்படுகிறது. சட்டமன்றம் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மனத்தில் கொண்டிருந்தது. ஆனால், சொல்வடிவம் கொடுக்காமல் விட்டுவிட்டது என்பதை நிரூபிப்பதற்குத் தக்க முகாந்திரங்கள் இல்லாத பட்சத்தில் சட்டத்தில் எதையும் சேர்க்கவோ அல்லது எடுக்கவோ கூடாது என்பது இந்த உப விதியின் முக்கியப் பொருளாகும். இதையே Lord Loreburn, L. C., 'சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள்ளேயே தகுந்த கார ணங்கள் காணப்பட்டாலன்றி, சட்டத்தில் புதிதாக சொற்களைப் புகுத்திச் சேர்த்து வாசிப்பதற்கு நமக்கு எந்தவித உரிமையும் கிடையாது' என்று கூறுகிறார்.

Felix *Vs.* Thomas (1967) என்ற வழக்கில் 'எந்த விதமாகவும் அல்லது எந்த இடத்திலும் தன்னுடைய ஆட்சிக்குள் ஒரு நபர் வைத்திருக்கும் பொருள் திருடப்பட்டது என்று அரசு காவலர் சந்தேகிக்கும் பட்சத்தில், அந்த நபரைப் பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்' என்ற சட்டப் பிரிவை ஆராய்ந்த Trinidad

உயர் நீதிமன்றம் 'எந்த இடத்திலும்' என்ற சொல்லை 'எந்தப் பொது இடத்திலும்' என்று எடுத்துக்கொண்டது. அவ்வாறு 'பொது' என்ற சொல்லை புகுத்தி வாசித்தது தவறு என்று 'Privy Council' தீர்ப்பளித்து அவ்வாறு செய்ததற்கான அவசியம் எதுவும் இல்லை, ஏனெனில் அந்தச் சட்டப்பிரிவு மிகவும் தெள்ளத் தெளிவாக இருக்கிறது என்று கூறியது.

**2. சட்டத்தின் இலட்சியத்திற்கு ஊறு விளைவிக்காத தாராள மான பொருள் விளக்கம்** (Liberal Interpretation)

இந்த முறைப்படி, சட்டத்தின் அடிப்படை இலட்சியத் திற்கும் (spirit) அதனுடைய காரண காரியங்களுக்கும், குந்தகம் ஏற்படாவண்ணம் மேலும் எந்தத் தீமைகளை அழிக்கவும் அல்லது திருத்தவும் சட்டம் முயலுகிறதோ அந்த முயற்சிக்குத் தடங்கல் ஏற்படாமலும் சட்டத்திற்கு விளக்கம் காணலாம். ஆனால், எந்த ஒரு சூழ்நிலையிலும், சட்டத்தின் தோரணைக்குப் பொருத்தமில்லா மலும், எதிர்மாறாகவும் (inconsistant and contrary to the language used by the legislators) இருத்தல் கூடாது.

மேற்கூறப்பட்ட பொது நியதி (Heydon's case) என்று கூறப் படும் நான்கு முக்கிய கோட்பாடுகளால் நன்கு விளக்கப்பட் டுள்ளது. அவையாவன:

1. **செய் சட்டம்** (Act) இயற்றப்படுவதற்கு முன்னால், **இயற்றுச் சட்டம்** (Common Law) எவ்வாறிருந்தது ?

2. இயற்றுச் சட்டத்தால் விடப்பட்ட குற்றங் குறைகள் யாவை ?

3. எவ்வாறு அந்தச் சட்டத்தின்மூலம் அக் குறைகளை நிவர்த்தி செய்ய நினைக்கிறது ?

4. அந்தத் தீர்வழி அல்லது நிவர்த்தியின் (remedy) நோக்கம் யாது ?

மேற்கூறிய நான்கு கோட்பாடுகள் குற்றந்தவிர் (Mischief Rule) விதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

Smith *Vs.* Hughes என்ற வழக்கு இதற்குத் தக்க உதாரண மாகக் கருதப்படுகிறது. விலைமாதர்கள் தெருவில் இருந்து கொண்டு ஆடவரைக் கவர முனைவது குற்றம் என்று ஒரு சட்டப் பிரிவு கூறியது. இந்த வழக்கில், விலைமாது தன் வீட்டின்மேல் மாடத்திலிருந்தும் பலகணி வழியாகவும் ஆடவரை அழைத்தது

குற்றமாகாது என்றும், ஏனெனில் 'தெருவிலிருந்து' என்ற சொல் இதற்குப் பொருந்தாது என வாதிடப்பட்டது. ஆயின் அதைக் குற்றம் எனத் தீர்ப்பளித்த Lord Parker, C.J.-யின் வாக்கியங்களைக் கவனிப்போம்: 'சட்டம் எந்தக் குற்றத்தைக் (Mischief) களைவதற்கு விரும்பியது என்ற நிலையிலிருந்து நான் இந்தப் பிரச்சனையை அணுகுகிறேன். விலைமாதுகளின் தொந்தரவுகள் இல்லாமல் மக்கள் தெருக்களில் கண்ணியமாக நடந்து செல்வதற்கு வழி செய்வதே இதன் நோக்கம். எனவே, அந்த நிலையில் இருந்து பார்க்கும்பொழுது ஒரு விலைமாது தெருவில் நடந்து செல்லும் ஆடவரைக் குறிப்பாக எந்த இடத்தில் இருந்து கூப்பிட்டாள் என்று கவனிப்பது அநாவசியமானதும், பொருத்தமில்லாததுமாகும்.'

அடக்குமுறை வணிக வழக்கங்கள் சட்டத்தை (Restrictive Trade Practices Act – Newspaper Proprietors Agreement (1962) என்ற வழக்கு சம்மந்தமாக ஆராய்ந்த Lord Denning, M.R. என்பவரின் கருத்தைப் பார்க்கலாம்: 'இந்தக் குறிப்பிட்ட சட்டம், நீதிமன்றத்தின்முன் கொண்டுவரப்பட்டிருக்கும் நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்களைப்பற்றியே பேசுகிறது என்றாலும் அதனுடைய (சட்டத்தின்) ஷரத்துகளைக் காலாவதியான அல்லது நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் செயல்படுத்துவதில் தவறேதும் இல்லை. சட்டம் எந்தக் குற்றத்தைத் தவிர்ப்பதற்காக இயற்றப்பட்டது என்ற நிலையிலிருந்து நான் பார்க்கும்பொழுது காலாவதியான ஒப்பந்தங்களுக்கும் சட்டம் செல்லும் என்றே நான் நினைக்கிறேன்'.

### 3. பொன் விதி (Golden Rule)

பொன்விதி என்றழைக்கப்படும் கீழ்வரும் விதி உண்மையில் 'இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியின்' (Literal Interpretation) ஒரு மாறுபட்ட நிலையே ஆகும்.

இலக்கண மரபு குன்றாமல் சட்டத்திற்குப் பொருள் கண்டு ஒரு வழக்கிற்குத் தீர்வு காண எத்தனிக்கும்போது அத் தீர்ப்பு சட்டமன்றத்தின் நோக்கத்திற்கு மாறுபாடு விளைவிக்குமேயானால் அல்லது ஓர் அடிமுட்டாள்தனத்துக்கு (absurdity) அழைத்துச் செல்லுமேயானால், தகுந்தவாறு பொருள் கொள்ளலாம். ஆனால், அதற்கு மேலே செல்லக்கூடாது.

Lee *Vs*. Knapp என்ற வழக்கில், விபத்துக்குண்டான வாகன ஓட்டுநர், விபத்து நிகழ்ந்தபின் வாகனத்தைச் சிறிது நிறுத்தி

விட்டு, பின் ஓட்டிச் சென்றுவிட்டார். பின் வழக்கின்போது, சட்டம் கூறியது போலவே விபத்து நிகழ்ந்தவுடன் வாகனத்தைத் தாம் நிறுத்திப் பின் சென்றதாகவும், எனவே சட்டத்தை மீறியதாகக் கருதமுடியாது என்றும் வாதிட்டார். 'சட்டப் பிரிவின் இலக்கண அர்த்தத்தில்' ஓட்டுநர் அதை மீறியதாகக் கூறமுடியாது; ஆயின் சட்டத்தின் உள்ளக்கிடக்கைக்கு முரணாகவும், இலக்கண அர்த்தம் பார்த்து மேற்கொள்ளும் பட்சத்தில் அபத்தமாகவும் முடிகிறது.'நிறுத்திச் செல்லவேண்டும்' என்றால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வந்து, விபத்துக்கான காரண காரியங்களை ஆராய்ந்து, அவர்களுக்குத் தேவையான விவரங்களைக் கொடுத்து முடியும்வரை 'நிறுத்த வேண்டும்' என்று பொருளே தவிர 'நிறுத்திவிட்டுச் சென்று விடலாம் என்பதன்று' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## மற்றும் பல நியதிகள்

**சட்டத்தின் கருப்பொருளுக்கேற்பச் சொற்கள் பொருள் கொள்ளப்பட வேண்டும்** (Reading words in their context-External Aspects)

செய் சட்டத்தின் சொற்கள் ஐயத்திற்கு இடமளித்தால் அதன் சரியான பொருள் விளங்காமல் போகலாம். அவ்வாறு நேரும் நேரங்களில் செய் சட்டத்தின் கருப்பொருளுக்கேற்பச் சொற்கள் பொருள் கொள்ளப்பட வேண்டும். கருப்பொருளை விளங்கவைக்கும் வகையிலேயே, சொற்களின் அர்த்தம் தொனிக்க வேண்டும். ஒரே சொல் பல செய் சட்டங்களில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால், அவை அனைத்துக்கும், ஒரே பொருளைக் கற்பிப்பது தவறு. எல்லாச் செய்சட்டங்களும் ஒரு கருப்பொருளைத் தாங்கி நிற்பவை அல்ல; அவற்றின் நோக்கங்கள் வேறு; இலட்சியங்கள் வேறு; அவை இயற்றப்பட்ட சூழ்நிலைகள் வேறு. அவை களைய நினைக்கும் குற்றங்குறைகள் செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் மாறுபட்ட தன்மை கொண்டவை. எனவே, ஒரு சொல் பல சட்டங்களில் இடம் பெற்றிருக்கிறது என்பதற்காக ஒரே பொருளைக் கொண்டிருக்கிறது என்று கூற முடியாது. சொற்களுக்கு அர்த்தம் காணும் முயற்சியில் சட்டத்திற்கு அப்பாற்பட்ட சிலவற்றையும் (external aspects) கவனிக்க வேண்டும். அவையாவன:

**1. சரித்திரப் பின்னணி** (Historical Setting)

Sir George Jessel, M. R., கூறுவதாவது: 'நீதிமன்றம், சட்டத்தினுடையவும் சட்டமியற்றியதனுடையவும் (Law and

Legislation) சரித்திரத்தை மறந்துவிடல் கூடாது. சட்டமன்றத்தை உந்தியதாக (influence) நினைக்கப்படும் நோக்கங்களைக்கொண்டு அது இயற்றிய சட்டங்களை ஆராய்வதற்கு நீதிமன்றத்திற்குச் சுதந்திரம் இல்லையானாலும், சட்டத்தினுடையதும் சட்டமியற்றுதலினுடையதுமான சரித்திரம், மற்றும் முந்தைய தீர்ப்புகள், நீதிமன்றத்துக்கு இவைதான் சட்டமன்றத்தின் அறுதிக் கொள்கை என்று தெளிவாக்கும் பட்சத்தில், நீதிமன்றம் அதே பாதையில் சென்று சட்டப் பிரிவுகளுக்கு விளக்கம் காணவேண்டுமே தவிர நினைக்கப்படாத புதியவற்றுக்கு விரித்துச் செல்லக் கூடாது'.

Ceylon Bribery Act, 1954 என்ற சட்டத்துக்கு Judicial Committee விளக்கம் கண்டபோது, 'இலங்கை, இங்கிலாந்து நாடுகளின் பாராளுமன்றங்களினிடையே நிலவிய சரித்திரத் தொடர்புகளைப் பார்க்கும்போது, ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையை ஆட்சி செய்யும் பழக்க வழக்கங்கள் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை உதவிக்கு எடுத்துக் கொள்வது முற்றும் பொருத்தமானதே' என்று கூறியது.

## 2. அரசாங்க வெளியீடுகள் (Government Publications)

இதில் சட்டமியற்றப்படுவதற்குமுன் அரசினரால் நியமிக்கப்பட்ட கமிஷன்கள், கமிட்டிகள் ஆகியவற்றின் அறிக்கைகளும், மற்றும் பல ஆவணங்களும் (documents) அடங்கும்.

கமிஷன்கள் மற்றும் கமிட்டிகளின் அறிக்கைகளைச் சட்டப் பொருள் விளக்கம் காண்பதற்கு உதவியாகக் கொள்வது பத்தொன்பதாவது நூற்றாண்டு காலத்தில் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பின்னல் ஏற்பட்ட சில வழக்குகளில் சட்டமியற்றப்படுவதற்கு முன்னேடியாக அமைக்கப்பட்ட கமிட்டிகளின் அறிக்கையை நீதிமன்றத்தில் எடுத்தாள்வது பொருத்தமானதே என்ற கருத்து நிலவியது.

Assam Railways and Trading Co. Ltd., *Vs.* I R C (1935) என்ற வழக்கின்போது 'House of Lords' முன்பாகக் கூறப்பட்ட வாதத்தில் Finance Act, 1920-ல் ஏற்படுத்தப்பட்ட சில திருத்தங்கள் Royal Commission of Income Tax-னுடைய பரிந்துரைக்கு ஏற்பவே வரையப்பட்டது. எனவே அப் பரிந்துரையை ஏன் சட்டமன்றத்தின் நோக்கமாகக் கொள்ளக்கூடாது? என்ற வினு எழுப்பப்பட்டது. இதை 'Lord Wright' மற்றுமிரு அங்கத்தினர்களோடு ஏற்க மறுத்துக் கூறிய தீர்ப்பில், 'கமிஷன்

களுடைய அறிக்கைக்கும், சட்டமன்றத்தின் நோக்கத்திற்கும் வெகுதூரம் இருக்கிறது; அறிக்கையில் கூறப்படும் பரிந்துரைகள், காரண காரியங்கள் யாவும் சட்டமன்றத்தினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூற இயலாது' என்றனர்.

இந்த வழக்கிற்குப்பின், அறிக்கைகளின் உதவியைப் பெறுவது சம்மந்தமாகப் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவின. பெரும்பாலான வழக்குகளின் அறிக்கைகள் நீதிமன்றத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதற்காக நாடப்படாமல், சட்டம் எந்தக் குறைபாடுகளையும் தீமைகளையும் களைய நினைத்தது என்பதை அறிவதற்காக நாடப்பட்டது.

'கமிட்டிகளின் அறிக்கையை உதவியாகக் கொள்வது நியாயமானதே. சட்டமியற்றப்பட்டதின் பின்னணியையும், சூழ்நிலைகளையும், உண்மைகளையும் அறிவதற்கு இது உதவுகிறது. ஆனுல், அறிக்கை என்ன பரிந்துரைக்கிறது என்பதைக் கவனிக்கக் கூடாது. அப்படி நீங்கள் பார்க்கும் பட்சத்தில் அதனுல் நீங்கள் உந்தப்படும்படி (influence) விட்டுவிடக் கூடாது. ஏனெனில், பரிந்துரையில் கூறப்படும் வழி முறைகளையே சட்டமன்றம் பின்பற்றுவது கிடையாது. பல சமயங்களில் வேறுவழி முறைகளைச் சட்டத்தில் ஏற்படுத்துகிறது' (Lord Denning, M.R., in Letang *Vs.* Cooper, 1965).

### 3. அனைத்துலகப் பொது விதிகள் (International Conventions)

சட்டத்தின் விதிகள் தெளிவாக இல்லாத பட்சத்தில் அனைத்துலக விதிகளின் உதவியை நாடலாம். ஆனுல், சந்தேகங்களுக்கு இடமளிக்கும் சந்தர்ப்பங்கள் இல்லாத கணங்களில் இவற்றை நாடுவது சரியல்ல.

### 4. அகராதிகளும் மற்றப் புத்தகங்களும் (Dictionaries and Text books)

சட்டமன்றங்களினுல் இயற்றப்பட்ட சட்டங்களில் உபயோகிப்படுத்தப்பட்டிருக்கும் சொற்களுக்குப் பொருள் காண மொழியியல் அகராதிகள் சிறந்த மார்க்கமாகக் கருதப்பட முடியாவிட்டாலும், சொற்கள் முதலாவதாக அவற்றின் சாதாரண அர்த்தங்களில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற நீதிமன்றங்களின் பொது நியதிக்குத் துணை செய்ய அகராதிகள் மிகவும் பயன்படுகின்றன. மேற்கண்ட கருத்தை 'Lord Coleridge' ஒரு வழக்கில் 'Credit' என்ற சொல்லுக்கு 'Webster's' அகராதியைப் பயன்படுத்திப் பொருள் கண்டபோது கூறினுர். அதேபோல்

'park' 'rubbish' 'document' 'practicable' 'machinery' 'hardware' போன்ற சொற்களுக்குப் பொருள் காணப் பல சமயங்களில் அகராதிகளின் உதவி நாடப்பட்டிருக்கிறது.

மேலும், பெரும்பாலான மக்களால் போற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதும், வெகு காலமாகப் புனித நூல்களாகவே மதிக்கப்பட்டு வந்து, பல நீதிபதிகளாலும் எடுத்தாளப்பட்டுவரும் புத்தகங்களின் துணையைச் சட்டப் பொருள் விளக்கம் காணும் முயற்சியில் பயன்படுத்துவது உண்டு. ஆனால், மேற்கூறியவாறு இருக்கும் சிறந்த நூல்களை (authoritative books) அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் வாதங்களை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ எப்போதும் நீதிமன்றங்களுக்கு உரிமை இருக்கிறது.

5. **நீதிமுறை, நிர்வாக, வணிகப் பழக்கங்கள்** (Practice: Judicial, Administrative and Commercial)

நீதிமுறைப் பழக்க வழக்கங்கள் சட்டப் பொருள் விளக்க முயற்சியில் மிகவும் செல்வாக்குப் படைத்தவையாக இருக்கின்றன.

ஆனால், நிர்வாகப் பழக்க வழக்கங்கள் நீதிமுறைப் பழக்கத்தைப்போல் அவ்வளவு பலம் கொண்டவை அல்ல. நிர்வாக யந்திரம் ஒரு குறிப்பிட்ட பழக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அது, சட்டத்தையோ சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் உரிமைகளையோ மீறுவதாக இருந்தால் அதை நீதிமன்றம் ஏற்க மறுக்கலாம்.

வணிகப் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**சொற்களைக் கருப்பொருளுடன் வாசித்தல் - சட்டமுறை** (Reading words in their context – Statutory Aspect)

1. தனிப்பட்ட சொற்களை அவற்றின் தனிமையில் பொருள் கொள்ளக் கூடாது. அந்தச் சொல் சேர்ந்துவரும் சொற்றொடர் முழுவதையும் கவனத்தில் கொண்டுதான் பொருள் கொள்ளப்பட வேண்டும். அதேபோல் சொற்றொடர்களின் பொருள் சட்டப் பகுதியின் முழுமையைக் கருத்தில் கொண்டே காணப்பட வேண்டும்.

2. சட்டத்தின் ஒரு பிரிவினுடைய (section) பொருள் அதே சட்டத்தில் உள்ள மற்றொரு பிரிவினால் ஆளப்படுவதாக இருக்கலாம்.

3. சட்டத்தின் ஒரு பிரிவினுடைய விளக்கத்தின்கீழ் மற்ெறாரு பிரிவை எடுத்தாள்வது தவறு என்பதற்குச் சில சமயங்களில் தகுந்த காரணங்கள் இருக்கலாம். உதாரணம்: நெடுஞ்சாலைச் சட்டத்தின் ஒரு பிரிவு, சாலை ஓரத்தில் கட்டடம் இருப்பவர்களுக்கு, நெடுஞ்சாலையில் நுழைவதற்கான உரிமையைக் கொடுத்திருந்தது. ஆனால், மற்றொரு பிரிவு நகரசபைக்குப் பாதசாரிகள் தங்குமிடம் கட்டுவதற்கு உரிமை அளித்தது. தங்களுக்கு நெடுஞ்சாலையில் நுழையும் உரிமை தரும் சட்டப் பிரிவின் விளக்கத்திற்கு உட்பட்டே அதே சட்டத்தில் நகரசபைக்கு உரிமை அளிக்கும் பிரிவு கையாளப்பட வேண்டும் என வாதிடப்பட்டது. ஆனால், இவ் வாதத்தை ஏற்க மறுத்து நகரசபையின் உரிமையை நிலைநாட்டித் தீர்ப்பளித்த 'House of Lords' கூறியதாவது, 'இவ் வாதத்தை ஏற்றுக்கொள்வதாயிருந்தால் நகரசபைக்கு உரிமை அளிக்கும் பிரிவினுடைய தன்மை எதுவென்றே தெரியாமல் போகும். தனி நபர் உரிமைகளைப் பாதுகாக்கும் பிரிவுகளில் அதிகக் கவனம் காட்டப்படுவது இயற்கையே. பொது நன்மைக்காக ஏற்படுத்தப்படும் பிரிவுகளில் அந்த வன்மை இல்லாமல் போகலாம்'. (Ching Garage Ltd., *Vs.* Chingford Corporation, 1961).

4. **சட்ட ஆவண விதிகள்** (Statutory Instruments): சட்டங்கள் உயர்ந்தவையாகவும், அதன் ஆட்சிக்குட்பட்டு அமைக்கப்பட்ட விதிமுறைகள் (Rules or Statutory Instruments) அதற்குக் கட்டுப்பட்டனவாகவும் இருப்பதால், விதிமுறைகளுக்கு விளக்கம் காணச் சட்டத்தை நாடலாம். ஆனால், சட்டத்திற்கு விளக்கம் காண அதன் அதிகாரத்தின்கீழ் நிர்வாக இயந்திரத்தினால் இயற்றப்பட்ட விதிமுறைகளின் துணையை நாடுவது சரியானதா என்பதில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. James and Mellish, J. J. என்ற நீதிபதிகள் இதை ஆதரித்தும் (*1871*) Upjohn, L. J., (*1964*) எதிர்த்தும் கருத்துகள் தெரிவித்துள்ளனர்.

# 2. பொதுவான சொற்களைக் கையாளுதல்
## (Treatment of General Words)

**இடம் பொருள் ஏவலுக்கு ஏற்பச் சொற்கள் பொருள் கொள்ளப் படல் வேண்டும்** (Words understood according to the subject matter)

Bearmans Ltd., *Vs.* Metropolitan Police District-Receiver என்ற வழக்கில் (*1961*) Deviln, L. J. கூறுவதாவது: 'பொருள் கொள்ளப்பட வேண்டிய சட்டத்தின் உபபிரிவு, 'interested' என்ற சொல்லின் பொருள் என்ன என்பதைச் சார்ந்து இருக்கிறது. ஒரு சொல்லின் இயற்கையானதும் பிரசித்த மானதுமான பொருளைக் கண்டுபிடித்தவுடன் அதற்குமேல் சிரமப்படாமல் விட்டுவிடக் கூடிய ஒரு விஷயமன்று இது. 'Interested' என்ற சொல்லுக்கு வரையறுக்கப்பட்ட பொருள் எதுவும் கிடையாது. இதற்குப் பொருள் என்ன என்று யாரைக் கேட்டாலும், அவர் உடனே, அது எந்த இடத்தில் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றுதான் கேட்பார். அது நேரடி 'financial interest' ஆக இருக்கலாம். அல்லது ஒரு நிகழ்ச்சி யில் ஒருவனுக்கு உள்ள 'interest' ஐக் குறிக்கலாம். சாதாரண ஒரு பேச்சின் பொருளைக் கொள்வதற்கு அதன் இடம், பொருள், ஏவலை வினவுவது போலவே பாராளுமன்றத்தின் சட்டத்தில் இருக்கும் ஒரு சொல்லின் பொருளைக் காண்பதற்கு அதனுடைய எல்லைகளையும் நோக்கங்களையும் அறியவேண்டியது அவசிய மாகிறது'.

சட்டத்தில் இருக்கும் ஒரு சொல்லின் பொருள்பற்றிச் சந்தே கங்கள் வரும்போது, அவை சட்டத்தின் சாராம்சத்திற்கு இசைந்து போகக்கூடிய வகையிலேயே பொருள் கொள்ள வேண்டும். இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைக்கொண்டு புரிந்துகொள்வதைப்போல் கடுமையான இலக்கண வரை யறைக்குள் அல்லது மொழியின் தொன்மையைக் கொண்டு, அல்லது பிரசித்தமான உபயோகத்தைக் கொண்டு புரிந்து கொள்வது இருக்காது. இலக்கண ரீதியாகச் சொற்கள் தம்

எல்லைக்குள் சில பொருள்களை வைத்திருக்கலாம். ஆனால், ஒரு சட்டத்தையோ அல்லது ஆவணத்தையோ எப்போது பொருள்கொள்ள நேர்ந்தாலும், சொற்களுக்கு அவைகளின் சாதாரண பொருளைக் கொடுப்பதோடு நின்றுவிடக் கூடாது. அந்தச் சாதாரண பொருளை அது உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைச் சேர்த்துக் காண வேண்டும். உதாரணமாகத் தெருவில் ஒரு நற்செயலுக்காகப் (charity) பணம் சேகரிக்கும் நபரைப் 'பிச்சைக்காரர்' என்று கொள்ளுதல் தவறு.

'சாக்கடை வடிகுழாய்' (Sewer) எனும் சொல் 'கட்டடங்களில் அசுத்த நீரை வெளியேற்ற **உபயோகப்படுத்தப்படும்** குழாய்' என்று வர்ணிக்கப்பட்டு (defined) இருந்தது. இங்கு 'உபயோகப்படுத்தப்படும்' என்ற சொல் தற்சமயம் உபயோகத்தில் இருப்பதை மட்டுமல்லாமல், அசுத்த நீரை வெளியேற்றும் நோக்கம் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுப் பின் உபயோகத்தில் இல்லாமலிருக்கும் பகுதியையும் சேர்த்தே குறிப்பிடுவதாகும் (Black town Properties Ltd., *Vs.* Ministry of Housing and Local Government, 1967).

**சொற்களின் பிரசித்தமான உபயோகம் (Words used in popular sense)**

பொதுமக்களைப் பொருத்த விஷயங்களில் சட்டங்கள் உபயோகப்படுத்தும் சொற்கள் அவற்றின் சாதாரண பொருளில் உபயோகப்படுத்தப்படுகின்றன என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது சட்ட ரீதியான எண்ணங்களும் தொழில் நுட்பமான விஞ்ஞாபனங்களும் (technical sense) கைவிடப்படுகின்றன. எனவே, சொற்களுக்குப் பொதுவான வழக்கில் உள்ள பொருளே கொள்ளப்படுகின்றன.

எதற்கும் எப்படி வேண்டுமானாலும் பொருள் கற்பிக்கலாம் என்ற ரீதியில், இறந்தோரை எரிக்கும் மயானம், 'பொருள்களையும் மூலப்பொருள்களையும் எந்த ஒரு மாற்றத்துக்கும் உட்படுத்தும்' (subjection of goods or materials to any process) தொழிலாக, வருமான வரிச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவர வாதிடப்பட்டது. இதைக் கேட்ட நீதிபதி தம் தீர்ப்பில் இந்த வாதம் எவ்வளவு எரிச்சலூட்டியிருக்கிறது என்பதை உணர்த்தியிருக்கிறார். 'இது ஆங்கில மொழியைச் சிதைப்பது ... ஆங்கில மொழியைக் குறிப்பாகச் சாதாரணமான ஓர் ஆங்கிலச் சொற்றொடரைக் குளறுபடியாக்கிப் பொருள்களைத் திணிக்கும்

இம் மாதிரியான செயல்களை நான் கடுமையாக எதிர்க்கிறேன்' என்று Stamp, J., கூறினர். (Bourne *Vs*. Norwich Crematorium Ltd., 1967.)

**சட்டமியற்றப்படுங்கால் சொற்களுக்கிருந்த பொருள் (Meaning at the time the statute was passed)**

சொற்கள் காலப்போக்கில் பல்வேறு பொருள் தொனிக்கும் முறையில் வளருகின்றன. சில பொருள்கள் விட்டுவிடப்படுகின்றன. ஆனல், சட்டத்தில் கையாளப்பட்டிருக்கும் ஒரு சொல்லுக்குச் சட்டமியற்றப்படுங்கால் இருந்த பொருளையே எப்போதும் எடுத்தாளவேண்டும். உதாரணமாக, 'trespassers' என்ற சொல் இப்போது ஓர் எல்கைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்போர்களையே குறிக்கிறது. ஆனல், பதினென்காம் நூற்ருண்டு காலத்தில் அது குற்றமிழைப்போர் அனைவரையும் குறிப்பதாக இருந்தது. எனவே, அப்போது இயற்றப்பட்ட சட்டத்தில் இருக்கும் இந்தச் சொல் அந்தப் பொருளைக் குறிக்கும் வகையிலேயே கையாளப்படவேண்டும் (Wilson *Vs*. Knubley 1806).

ஆனல், சட்டமியற்றப்பட்ட காலத்தில் தெரியாதிருந்த கண்டுபிடிக்கப்படாமலிருந்த பொருள்களுக்கு, சட்டத்திலிருக்கும் ஒரு சொல்லின் ஆட்சியின் கீழ்ப்படுத்தலாம். உதாரணமாக, எடிசனின் 'டெலிபோனை' Telegraph Act 1869-ன் கீழ் Telegraph என்று தீர்மானிக்கப்பட்டது. அச் சட்டமியற்றப்படும்போது டெலிபோன் கண்டுபிடிக்கப்படவில்லை. (Attorney General *Vs*. Edison Telephone Co. Ltd., 1880.) அதேபோல் 'Bicycle' Carriage ஆகவும் நீராவியினல் ஓடும் மூன்று சக்கரச் சைக்கிள் வண்டி 'locomotives' எனவும் தீர்மானிக்கப்பட்டன.

# 3. வரையறு பொருள்கொள் முறை
## (Restrictive Construction)

சட்டப் பொருள் விளக்கம் எனும் விஞ்ஞானம் எந்தக் குறுக்கீடுமில்லாமல் நீண்டு நிமிர்ந்து செல்லும் ராஜபாட்டை அன்று; அது ஒரு குறுகி வளைந்து செல்லும் சிக்கலான பாதை. அதில் பயணம் என்பது எளிதன்று. அதில் முள் குத்தும்; கல் கடுக்கும். மேலும் அதை சிக்கலாக்கப்பட்ட கயிற்றுடன்கூட ஒப்பிடலாம். சிக்கலை அவிழ்த்துக் கயிற்றை உபயோகிப்பதற்கு நிதானமும், பொறுமையும், கூடவே சிந்தனையும் வேண்டும். பொறுமை இழந்தால் மேலும் சிக்கல் ஏற்படும். முடிச்சுகளை அவிழ்ப்பதற்குப் பதில் கத்தரித்தால் உபயோகத்திற்குக் கயிறு மீதமிருக்காது. சட்டப் பொருள் விளக்கத்தில் நாம் அடைய வேண்டிய இலட்சியத்திற்கு உறுதுணையாக நூற்றாண்டுகள் காலமாக, தன்னலம் என்ற குட்டையில் ஊறி அழுகிப் போகாத, நீதி தேவதையின் சேவைக்கே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட நீதிபதிகளும், சட்ட வல்லுநர்களும் ஆக்கித் தந்திருக்கும் வரைமுறைகள் நமக்குத் துணை நிற்கின்றன.

1. **விளைவுகள் கருதப்பட வேண்டும்** (Consequences to be considered)

சட்டப் பிரிவுகளுக்கு விளக்கம் காண முனையும்போது அவை ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருபவைகளாக இருக்குமானால், அவை ஒவ்வொன்றின் விளைவுகளையும் தனித்தனியே கவனித்தல் அவசியம். அவற்றில் ஒன்று நம்மைச் சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும் கலங்கரை விளக்கமாக அமையும்.

சில விளைவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று சட்ட மன்றம் நினைத்திருப்பது தெளிவாக இருக்கும். அந்த விளைவுகள் ஏற்படாதவாறு, சட்டப் பிரிவுகளுக்குப் பொருள் கொள்ளலாம்.

'சிறையிலிருந்து தப்பி ஓடுவது' சட்டப்படி குற்றம் என்றாலும், சிறை தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கும்போது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு கைதி மதிலேறிக் குதித்து ஓடினால்

அதைக் குற்றமெனக் கொள்வதுதான் படைத்த சட்டத்தின் கைப்பாவையாக மனிதன் ஆவதே தவிர வேறெதுவும் இல்லை. கைதியின் செயல் சட்டத்தின் வரிகளின் இயற்கையான பொருளின்படி தப்பி ஓடிய செயலே ஆகும். ஆனால் 'அவன் சிறையில் ஏற்படும் தீயில் உயிருடன் கருகிச் சாம்பலாக வேண்டும்' என்ற மற்றொரு பொருள் சட்டத்தின் நோக்கமாக இருக்கமுடியாது.

இதேபோல், ஆழ்கடலிலே இருக்கும் ஒரு கப்பலுக்குள் ஒரு கலகத்தை விளைவிப்பது கடுமையான குற்றமாகச் சட்டம் கருதுகிறது. ஆனால், ஒரு கப்பல் தளபதி ரத்தவெறி பிடித்துக் கப்பலிலுள்ளவர்களைத் தன்னிஷ்டம்போல் கொலை செய்துகொண்டிருக்கும் பட்சத்தில் அவனுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துவது 'கலகமே' எனச் சரியாக வார்த்தையிடப் பட்டாலும், எவரும் எந்நேரமும் கப்பல் தலைவனின் கையிலே மாள வேண்டிய நிலை என்ற விளைவைச் சட்டம் கருத்திற் கொண்டதன்று (Re. Rose 1847).

**செயல்பாட்டில் வரைமுறை (Restriction of Operation)**

சில சமயங்களில், சட்டத்தின் செயல்பாட்டைக் குறிப்பிட்ட சில நபர்களுக்கிடையே மட்டும் அல்லது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளுக்கு மட்டும், அல்லது குறிப்பிட்ட சில நோக்கங்களுக்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. இவ்வாறு தான் அதன் செயல்பாடு அமையவேண்டும் எனச் சட்டத்தில் இல்லாமலிருக்கலாம்.

உதாரணமாக, பகடைப் பணயம் (wager – பந்தயம்) சம்மந்தமாக வெற்றி பெற்ற பணத்தைப் பெறுவது சம்மந்தமான, அல்லது பந்தயம் சம்மந்தமாகக் கொடுக்கப்பட்ட காப்புப் பணத்தை மீட்பது சம்மந்தமான எந்த வழக்கையும் நீதிமன்றம் எடுத்துக்கொள்ளாது என்று சட்டம் கூறுகிறது. ஆயின் காப்புப் பணம், பந்தயம் வெற்றி பெற்றவரை அடைவதற்கு முன்னால் அதை மீட்பதற்கு வழக்குத் தொடரலாம் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. (Hampden *Vs.* Walsh 1876)

அதேபோல் பந்தய வியாபாரம் (betting business) செய்யும் இருவருக்கிடையே கூட்டுத் தொழில் (Partnership dealings) சம்மந்தமாக ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றத்தை அணுகலாம். (Keen V Price *1914*)

ஒரு கம்பெனியின் நிர்வாகத்தை நடத்தும் இயக்குநர் குழு பங்குதாரர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றிப் புகார்

கூற வெளிநபர் ஒருவருக்கு உரிமை இல்லை. (Rc Alma Spinning Co., 1880)

**குறிப்பிட்ட நோக்கத்தினுல் கட்டுப்பாடு** (Restriction to Specific Object)

*இயற்கையான இலக்கணப் பொருள், சட்டத்தின் குறிக் கோளுக்கு அல்லது எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தால், கட்டுப்படுத்தப்பட்ட பொருள் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.*

*உதாரணமாக, ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையின்கீழ்* (Habeas Corpus)*விடுவிக்கப்பட்ட ஒரு நபரை,* **அதே குற்றத்துக் காகத்** (for the same offence) *திரும்பக் கைது செய்ய நீதிமன்றத் தின்முன் அனுமதி பெறவேண்டும் என்பது சட்டத்தின் சாதார ணப் பொருளாகும். ஆனுல் 'அதிகார வரம்பு'* (Jurisdiction) *இல்லாமல் ஒரு நபர் கைது செய்யப்பட்டார். இந்தக் காரணத் துக்காக, நீதிமன்றம்* Habeas Corpus *மனுவின் பேரில் அந்த நபரை விடுவித்தது. பின் 'அதே குற்றத்துக்காக' அந்த நபர் இரண்டாவது தடவை அதிகார வரம்புடன் நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் கைது செய்யப்பட்டார். இந்தச் சூழ்நிலை சட்டத்தின் எல்கைக்கு* (Scope) *அப்பாற்பட்டிருப்பதால் அவ் வாறு செய்தது சரியே என்றும், சட்டத்தின் இலக்கணப்படியான அர்த்தத்தைப் பிரயோகிக்க இயலாது என்றும் தீர்ப்பளிக்கப் பட்டது.* (Governor of Brixton Press, ex. p. Stallmann 1912).

*இதேபோல்* Ieeford Corporation *Vs.* Betterclean (Seven Kings) Ltd., *1965 என்ற வழக்கில் வாடிக்கையாளரால் நாணயங் கள் போடப்பட்டுத் தானியங்கி இயந்திரங்களினுல் சலவை செய்தல், சூடான பானங்கள் மற்றும் பல பொருள்களைத் தரும் நிறுவனம் ஒன்று வியாபார நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்படவேண்டுமா என்ற கேள்வி எழுந்தது.*

*'ஞாயிற்றுக் கிழமைகளில் வாடிக்கையாளருக்குச் சேவை செய்தல்' என்ற வாக்கியம் 'மனிதரால் சேவை செய்தல்'* (personal service) *என்று கட்டுப்பாட்டுடன் பொருள் கொள்ளப் பட்டுத் தானியங்கி இயந்திர சேவைச் சட்டத்தின் எல்லைக்கு அப் பாற்படுத்தப்பட்டது.*

**2. இயற்றுச் சட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்தச் செய்சட்டம் முனைந்துள்ளது என்ற அனுமானம் கூடாது (Presumption against changes in the Common Law)**

இயற்றுச் சட்டத்தில் உள்ள நடைமுறைகளைச் செய்சட்டம் தெள்ளத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் செல்லாத தாக்கும் தருணங்களைத் தவிர மற்ற இடங்களில் இயற்றுச் சட்டம் பின்பற்றப்படல் வேண்டும். மற்ற இடங்களில் இயற்றுச் சட்டத்தின் கோட்பாடுகளை மாற்றச் சட்டமன்றங்கள் நினைக்க வில்லை என்றே அனுமானித்தல் வேண்டும். இதையே Lord Reid, 'இரண்டு சட்டப் பொருள் விளக்க வாதங்கள் சரிசமன் எடையாக இருக்கும்போது, எந்த ஒரு வாதம் இருக்கும் சட்டத் தில் குறைந்த அளவு மாற்றம் ஏற்படுத்துவதாக இருக்கிறதோ அதையே எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று George Wimpey & Co., Ltd., V B. O. A. C. *1955* என்ற வழக்கில் கூறுகிறார்.

Leach V.R. *1912*: குற்றவியல் சாட்சியச் சட்டம் ஒன்று, மனைவியோ அல்லது கணவனோ குற்ற வழக்கு ஒன்றில் ஒருவர் மற்றவருக்கு எதிராகவோ, அல்லது சார்பாகவோ சாட்சியம் கூற அழைக்கப்படலாம் என்று குறிப்பிடுகிறது. "இயற்றுச் சட்டத்தில் கணவனுக்கு எதிராகச் சாட்சியம் கூற மனைவி கட்டா யப்படுத்தப்படக் கூடாது என்ற விதி மிக ஆழமாக நிலவுகிறது. எனவே, செய்சட்டத்தின் மேற்கண்ட பிரிவு, 'மனைவியை எதிர் சாட்சியம் சொல்லத் தகுதியானவளாக்குகிறது' என்று பொருள் கொள்ளல் வேண்டுமேயன்றி, மனைவி எதிர் சாட்சியம் சொல்லக் கட்டாயப்படுத்தப்படலாம் என்று பொருள் கொள்ளக்கூடாது. 'கட்டாயப்படுத்தலாம்' என்று கொள்வதற்கு, இன்னும் மிகத் தெளிவான, நேர்மறையான ஒரு வாக்கியம் சட்டத்தில் தேவைப் படுகிறது" என்று Lord Atkinson கூறுகிறார்.

**3. செய்சட்டக் குற்றங்களில், குற்றவாளியின் 'மனநிலை' (Mens Rea in Statutory Offences)**

இயற்றுச் சட்டத்தின்படி ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்வ தற்குப் பழிக்கப்படத்தக்க குற்றமனம் கொண்டவனாக இருக்க வேண்டும். அதாவது, குற்றம் எனக் கருதப்படும் ஒரு செயல், குற்ற மனத்துடன் (Mens Rea) செய்யப்படும்போதுதான் குற்றம் என்று கருதப்படுகிறது. மிகத் தெளிவாகச் சொல்லப்போனால் 'செயல் முக்கியம் அன்று; மனநிலையே முக்கியம்—ஒருவன் குற்ற வாளி என்று கொள்ளப்படுவதற்கு'. சட்டம் ஒரு குற்றத்தைத்

தண்டித்தது என்பதைவிட ஒரு குற்றவாளியைத் தண்டித்தது என்பதிலேயே அதன் பெருமை இருக்கிறது. குற்றத்துக்குக் காரணம் என்ன? குற்றச் செயலின்போது ஒருவனுடைய மனநிலை என்ன? அவன் நோக்கம் என்ன? அவன் மன வளர்ச்சி என்ன? போன்ற கேள்விகள்தான் தீங்கு மனத்தை தீர்மானிக்க முடியும். எனவே, 'மனநிலை சார்ந்த குற்றம்' இயற்றுச் சட்டத்தின் முக்கிய விதியாகும். எனவே, இவ் விதி செய்சட்டங்கள் குறிப்பிடும் எல்லாவிதக் குற்றங்களையும் தீர்மானிக்கும்போதும் பின்பற்றப்படல் வேண்டும். அவற்றில் 'மனநிலை'யை அறிய வேண்டும் என்று வெளிப்படைக் குறிப்பு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தன்னிச்சையாகவே இவ் விதியைப் பிரயோகிக்க வேண்டும்.

செய்சட்டத்தில் எந்த மனநிலையில் குற்றம் செய்யப்பட்டிருந்தாலும் குற்றம் குற்றமே என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, 'மனநிலை' பின்பற்றப்படல் வேண்டும்.

"புதிது புதிதான சட்டங்களும், விதிகளும் குற்றங்களைப் பன்மடங்காகப் பெருக்கிக்கொண்டுவரும் இக் காலத்தில், சட்டத்திற்குப் பணிந்த கண்ணியமான குடிமக்கள்கூடச் சட்டத்தை மீறுமல் இருப்பது கடினமாகிவருகிறது. எனவே, 'மனநிலை' விதியைப் பிரயோகிப்பதன் அவசியம் முன் எப்போதைக் காட்டிலும் இப்போது அதிகமாக இருக்கிறது" (Lord Goddard, in Harding V Price *1948*).

**'குற்றமனம்' வேண்டப்பட்ட வழக்குகள்**

**Lim Chin Aik** *1963* என்ற வழக்கில் சிங்கப்பூர்க் குடியேற்றச் சட்டத்தின்கீழ், சட்டத்திற்குப் புறம்பாக நாட்டில் இருப்பதாக அவர்மேல் வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், அவருடைய இருப்பு சட்டத்திற்குப் புறம்பானது என்ற முன் எச்சரிக்கை எதுவும் கொடுக்கப்படவில்லை. தான் ஒரு தடை செய்யப்பட்ட நபராகச் சட்டத்தினுல் ஆக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ள அவருக்கு எந்த விதமான சந்தர்ப்பங்களும் இல்லை; அப்படித் தெரியாமல் இருக்கும்போது அவர் எவ்வாறு சட்டத்திற்கு ஒவ்வ நடந்துகொள்ள இயலும்? எனவே, குற்றமனம் சம்மந்தமில்லாமல் அவர்மீது முழுப் பொறுப்பைச் சுமத்துவது தவறு எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

**R. V. Cugullere** (*1961*) என்ற வழக்கில் ஒரு நபர் 'பொது இடத்தில் தன்னுடன் அபாயகரமான ஆயுதத்தை வைத்திருந்த

தாகக்' குற்றத் தடுப்புச் சட்டத்தில் மேற்கண்ட செயலைக் குற்ற மாக்கும் பிரிவின்கீழ் வழக்குத் தொடரப்பட்டார். மேற்கண்ட பிரிவுக்குக் குற்றமனம் மிகவும் அவசியம் எனக் கருதப்பட்டது. "உதாரணமாக நிரபராதியான ஒரு நபரின் சட்டைப் பையில், தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் கொடியவன் ஒருவன் கொடு வாள் ஒன்றை வைத்துவிட்டுச் சென்றால், அந்த நிரபராதியை எவ்வாறு கொடுவாளை வைத்துக்கொண்டிருந்த குற்றத்துக்காகத் தண்டிக்க இயலும்?" என்று வினவிய நீதிபதி குற்றமனத்தின் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதுபோலவே, ஒருவர் ஓட்டிச் சென்றுகொண்டிருக்கும் மோட்டார் வாகனத்தின் தொழில் நுட்பப் பழுதுகளைப் பற்றித் தெரியாமலிருக்கும்போதும், மேலும் அந்தப் பழுதுகள் சிறிது கவனம் செலுத்தப்பட்டிருந்தால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்ற தன்மை அற்றவையாக இருக்கும்போதும், அந்தப் பழுது களினால் திடீரென ஏற்படும் விபத்துக்கு அந்த நபரை முழுப் பொறுப்பாளியாக்கக் கூடாது என்று R. V. Spurge (*1961*) என்ற வழக்கில் தீர்வு கூறப்பட்டது.

அரசு காவலர் ஒருவருக்குக் கடமை நேரத்தில் சாராயம் விற்பது குற்றம் என்ற சட்டப் பிரிவின்கீழ், அரசு காவலர் கடமை யற்ற (off duty) நேரத்தில் இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு அவருக்குச் சாராயம் விற்ற ஒரு விற்பனையாளரைத் தண்டிக்க இயலாது என ஒரு வழக்கில் தீர்வு காணப்பட்டது. (Sherras V De Rutzen *1895*)

அங்கீகரிக்கப்பட்ட ஒரு சூதாட்ட நிலையம் பதினெட்டு வயது நிரம்பாதவரை உள்ளே அனுமதிப்பதோ, வைத்திருப்பதோ சூதாட்டச் சட்டத்தின்கீழ் குற்றமாகும். ஆனால், இக் குற்றத்தை நிலையத்தினர்மீது சுமத்துவதற்கு, பதினெட்டு வயது நிரம்பாத ஒரு நபர் தங்களிடத்தில் இருக்கிறார் என்பதை அறிந்திருப்பதற் கான சூழ்நிலைகள் இருந்திருக்க வேண்டும் எனத் தீர்ப்புக் கூறப் பட்டது. (Mallon V Allon *1964*)

ஆனால், காலப்போக்கில் 'குற்றமனம்' இருக்கிறதா என்று பார்ப்பதன் அவசியம், நவீன சட்டங்களினால் குறைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டத்தின் முக்கிய எண்ணங்களை நிறை வேற்றுவதற்குக் குற்றம் புரிந்தோரைக் 'குற்றமனம்' சம்மந்த மின்றிக் குற்றச் செயலுக்காகவே தண்டிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

உதாரணமாக உணவு அல்லது பானங்கள் விற்பனையை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் முழு நோக்கத்தை அடைய வேண்டுமானல், சட்ட மீறல்கள் மனநிலை தொடர்பு இல்லாமல் தண்டிக்கப்பட வேண்டியிருக்கிறது. உதாரணமாகச் சுகாதாரமில்லாத இறைச்சியை விற்கும் கசாப்புக் கடைக்காரரைத் தண்டிக்க அதிகாரிகள் ஒவ்வொரு தடவையும் 'குற்ற மனத்தை' நிருபிக்க வேண்டிய நிலையில் இருந்தால் அதனல் சமுதாயத்திற்கு ஏற்படும் தீங்கை நினைத்துப் பார்க்க முடியாது.

**'தெரிந்தே' 'வன்மத்துடன்' 'வேண்டுமென்றே'**

'Knowingly' 'Maliciously' 'wilfully'

சட்ட மீறல்களை வர்ணனை செய்யும் சட்டப் பிரிவுகளில் 'தெரிந்தே' என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும்போது 'குற்றமனம்' அவசியம் என்ற தெளிவு ஏற்படுகிறது. ஆனல், ஒரு சட்டப் பிரிவின் மொத்தத் தோரணை குற்றமனம் அவசியம் என்பதை உணர்த்தி, ஆனல் அதே சமயத்தில் 'தெரிந்தே' என்ற பதம் உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால், அதைக் காரணம் காட்டிக் 'குற்றமனம்' தேவையில்லை என்று வாதிட முடியாது.

'வன்மத்துடன்' ஒரு குற்றத்தைப் புரிதல் 'குற்ற மனத்தின்' உச்ச நிலையாகும். இது 'தெரிந்து' செய்தலைவிடக் குற்றத்தை உறுதிப்படுத்துகிறது.

'வேண்டுமென்றே' என்ற பதம் சாதாரண எண்ணத்துடன் மட்டுமல்லாமல், குற்றச் செயலுக்குச் சட்டபூர்வமான பரிவு எதுவுமில்லாமல், செய்யப்படுவதைக் குறிப்பிடுவதாகும். ஒரு அரசு காவலரை அவரது பணியைச் செய்வதற்கு வேண்டுமென்றே தடையாயிருப்பது எந்தச் சட்டப் பரிவும் இல்லாமல் (lawful excuse) செய்வதாகும்.

# 4. பிடி நழுவல் தவிர் பொருள்கோள் முறை
## (Construction to prevent Evasion)

தடை செய்யப்பட்டிருக்கும் குற்றச் செயலைச் சட்டத்தின் வரிகளின் கையில் பிடிபடாமல் மற்றொரு ரீதியில் சுற்றி வளைத்துச் செய்வதைத் தவிர்த்து உண்மையான நோக்கத்தை நிலைநாட்டும் வகையில் சட்டம் பொருள் கொள்ளப்பட வேண்டும். இந்த முறையின் ஒரு பகுதியை ஏற்கனவே முதல் அத்தியாயத்தில் 'குற்றம் தவிர் விதியின்'கீழ்ப் பார்த்திருக்கிறோம். மற்றொரு முறையில் குற்றங்களைச் சட்டத்தின் 'வர்ணனை'யின்படி (definition) செய்யாமல், மற்றொரு வகையில் சுற்றி வளைத்துச் சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் செய்யும் செயலைக் குற்றமாகவே கொள்வதாகும்.

Day *Vs.* Simpson (*1865*) வழக்கில், காட்சி அரங்குகள் சட்டத்தின்படி அனுமதியின்றி எந்த ஒரு காட்சியும் நடத்துவது குற்றமாகும். இந்தச் சட்டப் பிரிவை மீறுவதற்காக நடிகர்கள் பார்வையாளர்களின் முன்னால் தோன்றாமல் மேடைக்குக் கீழே நடித்து அதைக் கண்ணாடிகளின் மூலம் பார்வையாளருக்குத் தெரியும்படி பிரதிபலிக்கச் செய்தார்கள். இது குற்றமாகவே கொள்ளப்பட்டது.

அவதூறு செய்ததற்காக மன்னிப்புக் கேட்கும் அறிக்கை ஒன்று செய்தித்தாளில் வெளியிட வேண்டியிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், அந்த அறிக்கை சாதாரணமான வாசகர்களின் கண்ணுக்குத் தட்டுப்படாமல் வெளியிட்டது சட்டப் பிரிவை முழுமையாக அனுசரித்ததாகாது என்று தீர்ப்பிடப்பட்டது.

இந்த இடத்தில் ஒரு சிக்கலான பிரச்சனை வருகின்றது. சட்டத்தின் பிடியிலிருந்து நழுவ முயலுவது வேறு, சட்டத்தின் எல்லைக்குள்ளேயே வராமல் இருக்க முயல்வது வேறு. முதலில் கூறப்பட்டது, வலைக்குள் சிக்கிய முயல் வலையில் துவாரம் இட்டு ஓட முயல்வதை ஒத்தது. இரண்டாவது வலையைப் பார்த்ததுமே அதனுள் நுழையாமல் சுற்றிச் செல்லும்

முயலைப் போன்றது. எனவே, சட்டத்தின் எல்லைகளுக்கு அப்பாலேயே நிற்பது குற்றமாகாது.

உதாரணமாக, ஒரு வருடத்துக்கு ஒரு நபரை வேலைக்கு வைத்துக்கொண்டால் அந்த வேலையாளுக்குச் சில உரிமைகள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்கும்பொருட்டு, ஒரு வருடத்துக்குச் சில நாள்களே குறைவாக ஒருவரை வேலைக்கு அமர்த்திக் கொள்வது சரியானதென்றே கொள்ளப்பட்டது.

**அதிகாரத் துஷ்பிரயோகத்தைத் தவிர்த்தல்** (Construction to prevent Abuse of Powers)

சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் ஒரு நபர் அல்லது நிறுவனம் அதைப் பிரயோகிக்கும்போது எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் கண்மூடித்தனமாக நடந்துகொள்ள நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை; அம் மாதிரியான போக்கு வளரும் விதத்தில் சட்டப் பிரிவுகள் பொருள் கொள்ளப்படுவது இல்லை. அதிகாரியின் 'யுக்தானுச்சாரப்படி' என்ற சொல், அவருடைய செயல்கள் கேள்விக்குறியனவல்ல என்றபொருள்கொண்டதன்று. அவருடைய இஷ்டப்படி அன்று; சூழ்நிலைகள், காரண காரியங்கள் காட்டுகின்ற வழிப்படி அவர் நடக்க வேண்டும். அதிகாரத்திற்கு அதிகமாகவோ துஷ்பிரயோகமாகவோ நடத்தல் கூடாது. மேலும் நல்லெண்ணத்துடன் (good faith) நடக்கவேண்டும்.

'யுக்தானுச்சாரத்தை' discretion அளிக்கும் சட்டப் பிரிவு முழுமையாக்கப்பட வேண்டுமானால் முதலில் யுக்தானுச்சாரம் செயல் வடிவம் கொடுக்கப்படல் வேண்டும். (discretion must be exercised). தாங்களே ஏற்படுத்திக்கொள்ளும் வழிமுறைகளினால் தங்களை விலங்கிட்டுக்கொண்டு செயல்படாமல் இருத்தல் தவறு. ஒவ்வொரு வழக்கையும் ஆராய்ந்து அதன்படி தங்கள் பொது அறிவைப் பயன்படுத்தல் வேண்டும்.

R Vs Walsall Justices என்ற வழக்கில், சில அனுமதிகள் (licences) வழங்கும் அதிகாரம் பெற்ற குழு ஒன்று புதிதாக அனுமதிகள் கேட்கும் விண்ணப்பங்களை ஏற்பதில்லை என்று முடிவு செய்திருந்தது. அதன்படி வருடாந்திர அனுமதி வழங்கும் கூட்டத்தின்போது ஒரு விண்ணப்பதாரரின் வழக்கைக் கேட்க மறுத்தது. பின் உயர்நீதிமன்றம் அவர்களுடைய செயல் தவறானது என்றும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் யுக்தானுச்சார அதிகாரம் ஒவ்வொரு முறையும் பிரயோகிக்கப்படல் வேண்டும், விண்ணப்பதாரர் கொடுக்கும் உண்மைகளையும், வாதங்களையும்

கேட்டறிந்த பின்னரே முடிவு எடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

**யுக்தானுச்சார அதிகாரம் காரண காரியத்துடன் இணைந்திருக்கவேண்டும்:**

'யுக்தானுச்சாரம், என்பது அதிகாரம் உள்ளவர்களின் சொந்த மனநிலையைப் பொறுத்ததன்று. அவர்களுடைய சொந்தக் கருத்தைக் கூறுவதுமன்று. காரண காரியங்கள் மற்றும் நீதி நேர்மை ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு இணங்கவே தீர்ப்புகள் அமைய வேண்டும். அவை சட்டபூர்வமாகவும் ஒரு ஒழுங்கு முறையுடனும் இருக்க வேண்டுமேயன்றி நிர்தாட்சண்யமானதாகவும், வெறுமையானதாகவும் (Vague) தான்தோன்றித்தனமாகவும் இருத்தல் கூடாது. உதாரணமாக, நகராட்சி ஊழியரின் ஊதியத்தை நிர்ணயிக்க நகரசபைக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த அதிகாரம் நகர மக்களின் நலன் காக்கும் பொறுப்பாளர் நிலையிலிருந்து பிரயோகிக்கப்பட வேண்டுமேயன்றித் தாராள தர்ம சிந்தனையோடு உபயோகிக்கப்படக்கூடாது (Roberts *Vs.* Hopwood) *1925*.

# 5. அதிகார வரம்புகள் பற்றிய அனுமானங்கள்

## (Presumptions regarding Jurisdiction)

உயர்நீதி மன்றங்களின் 'வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரம்' இல்லாததாக்கும்படி செய்யும் எந்த விதச் சட்டப் பொருள் விளக்கமும் ஏற்றுக்கொள்தலாகாது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கருத்தாகும். இந்தக் கருத்து முன் காலத்தில் நீதிமன்றங்களினிடையே பிணக்குகளைத் தவிர்க்கும் (நீதிபதிகளின் சன்மானம் அவர்கள் தீர்க்கும் வழக்குகள் மூலம் வரும் வரிகளின் அளவைப் பொருத்திருந்தது) பொருட்டே ஏற்படுத்தப் பட்டதாக இருப்பினும், தற்போது, ஏற்கெனவே ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும் நீதிமுறையை மாற்றவேண்டாம் என்ற எண்ணத்திலேயே தொடர்ந்து செயல்முறையில் இருந்துவருகிறது.

"மக்களிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்ப்பதற்கான முழுமையான தீர்ப்பாயங்கள் நீதி மன்றங்களேயாகும். ஏனெனில் அவையே சிறந்த பயிற்சியும், அனுபவமும் பெற்றவை. தகுதிபெற்ற வழக்கறிஞர்களால் உதவப் பெற்று நடத்தப்படும் மன்றங்களாகும்."

"சட்டத்தின் ஆட்சியில் வளர்ந்த எவரும் நீதிமன்றங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் விதத்தில் உள்ள எந்தச் செய்சட்டப் பிரிவுகளையும் பரிவுடன் நோக்கமாட்டார்."

மேற்கண்டவை போன்ற மிதமானதும், கடுமையானதுமான கருத்துகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பைப் பற்றி நிலவி வந்தாலும் Diplock L. J. எனும் நீதிபதி சமீபத்தில் (1968) Anisminic Ltd, *Vs.* The Foreign Compensation Tribunal என்ற வழக்கின்போது தெளிவான சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். அவையாவன:

"ஒரு செய்சட்டம், சில குறிப்பிட்ட சம்பவங்கள் சூழ்நிலைகள் ஆகியவை சம்பந்தமான வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரத்தை

நீதிமன்றங்கள் அல்லாத ஒரு தீர்ப்பாயம் அல்லது அரசின் நிர்வாக யந்திரத்துக்கு அளிக்கும்போது இரண்டு விதமான கேள்விகள் எழுகின்றன. அவையாவன: ஒன்று, அந்தக் குறிப்பிட்ட சம்பவங்களும், சூழ்நிலைகளும் நிலவுகின்றனவா என்பதைக் காணும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு இருக்கிறதா, இல்லையா என்பது. இரண்டு, தீர்பாயம் அல்லது நிர்வாக யந்திரம் அளிக்கும் தீர்ப்பில் தவறுகளைத் திருத்தும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு இருக்கிறதா என்பது. முதலாவதாகக் கூறப்பட்ட கேள்விக்குச் சட்டத்தில் வெளிப்படையான பதில் இல்லாத தருணத்தில், அந்தக் குறிப்பிட்ட சம்பவங்கள், சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு இருக்கிறது என்றே பொருள் கொள்ள வேண்டும். சட்டத்தில் இந்த அதிகாரம் தீர்ப்பாயத்தினுடையதுதான் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கும்போது, இரண்டாவதாகக் கூறப்பட்டிருக்கும் தீர்ப்புகளைத் திருத்தும் அதிகாரம் (இந்த அதிகாரமும் சட்டத்தினால் வெளிப்படையாகப் பறிக்கப்படாமல் இருந்தால்) உயர்நீதி மன்றத்துக்கு இருக்கிறது என்று பொருள் கொள்ளப்படல் வேண்டும்."

நீதிமன்ற மறுபார்வை அதிகாரத்தை விளக்க Pyx Granite Co. Ltd. *Vs.* Minister of Housing and Local Government (*1960*) என்ற வழக்கின் தீர்ப்பு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. நிலத்தின்மேல் செய்யப்படும் எந்தவித அமைப்புக்களும், நகராட்சியின் முன் அனுமதியின் பேரில்தான் நடைபெற வேண்டும். நகராட்சியின் முடிவுக்கு எதிரான மேன்முறையீடுகள் யாவும் சம்மந்தப்பட்ட அமைச்சருக்கே செய்யப்படல் வேண்டும். அவருடைய முடிவே இறுதியானது என்பது சட்டப் பிரிவுகளின் பொருளாகும். இதை, அமைச்சரின் முடிவு நீதிமன்றத்தின் பார்வைக்கு அப்பாற்பட்டது என்று பொருள் கொள்ளுதல் தவறு. அமைச்சரின் முடிவு இறுதியானது என்ற சொற்றொடர், பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தை அணுக முடியாது என்றோ, நீதிமன்றத்துக்கு இது சம்மந்தமாக நியாயம் வழங்கும் அதிகாரம் இல்லையென்றோ உணர்த்தவில்லை என்று இங்கிலாந்து மேல்சபை (House of Lords) தீர்ப்பு வழங்கியது.

**சிறப்பு நீதிப் பேராயங்கள்** (Special Tribunals)

நவீன மனித சமுதாயத்தின் சில துறைகள் மிகவும் சிக்கலானவையாகவும், அவைகளில் ஏற்படும் பிணக்குகள் மற்றும் சமுதாயத்தைப் பாதிக்கும் நன்மை தீமைகள், தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன,

எனவே, அவைகளைக் கட்டுப்படுத்தி ஆட்சி செய்யும் சட்டங்களின் பரிபாலனம், அச் சட்டங்களின் மூலம் ஏற்படுத்தப்படும் சிறப்பு நீதிப்பேராயங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் நடவடிக்கைகளைச் சிவில் கோர்ட்டுகள் கட்டுப் படுத்த இயலாது. ஆனால், அந்தச் சிறப்பு நீதிப்பேராயங்கள் செயல்பட முடியாமல் இருக்கும்போதோ, அல்லது செயல்பட மறுக்கும்போதோ, குறிப்பிட்ட சட்டத்தைச் சாதாரணச் சிவில் கோர்ட்டுகள் எடுத்தாள்வதில் தவறு இல்லை. (Sat Narain *Vs.* Hanuman Prasad. *1946*. Justice Mahajan) and (Lachmichand *Vs.* Rampratap)

## மற்றும் பல அனுமானங்கள்
## (Various other Presumptions)

1. **அசௌகரியமானதும், காரணத் தொடர்பு அற்றதுமான முடிவுகளுக்கு எதிரான அனுமானம்** (Presumption against Intending what is Inconvenient and Unreasonable)

நடைமுறையானதும் அல்லது சௌகரியமானதும் (convenience) மற்றும் நீதி, காரணகாரியம், சட்டக் கோட்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் சட்டத்தின் பொதுவான நோக்கத்தை விளக்கும் தருணத்தின்போதோ, அல்லது அதன் சில பகுதிகளின் அர்த்தத்தைக் கணிக்கும்போதோ சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இருப்பின், அவைகளுக்கு முழு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாகவே அனுமானிக்க வேண்டும். காரண காரியமற்ற பொருள் கொள்ளுதலை, மற்றுமொரு பொருள் இருக்கும்போது கைவிட்டு, வார்த்தைகளுக்கு வலிமை கொடுத்துப் பகுத்தறிவுக்கும் காரண காரியத்துக்கும் ஒவ்வுதலாக ஒரு அர்த்தத்தைக் கொள்ள வேண்டும்.

விவசாய நில உடமைச் சட்டத்தின்கீழ் நில உடமையாளர் ஒருவர், தானும் மற்றுமொரு கூட்டாளியும், பாகஸ்தர்களாக உள்ள நிறுவனம் ஒன்றிற்குத் தம்முடைய நிலத்தைக் குத்தகைக்கு விட்டார். இது ஒருவர் தம்முடைய நிலத்தைத் தமக்கே குத்தகைக்கு விட்டுக்கொள்ளும் ஒரு விநோதமான நிலையைத் தோற்றுவிக்கிறது. எனவே, 'ஒருவர் ஒரு நிலத்தைக் கையாளுவதற்கான உரிமையைப் பெறும்போது' என்ற சட்டத்தின் வாக்கியம் பொருள் கொள்ளப்படும்போது, அந்த 'ஒரு நபர்' உரிமையைக் கொடுப்பவரைத் தவிர மற்றவர்களைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும் (Harrison-Broadley V Smith)

**2. செயற்கையானதும் முரண்பாடானதுமான பொருள் தவிர்க்கப்படல் வேண்டும் என்ற அனுமானம் (Artificiality and anomaly to be avoided)**

கூடுமான வரையில், சட்டத்தில் நீண்ட செயற்கைத் தன்மையையும், முரண்பாடான விளைவுகளைத் தோற்றுவிக்கும் பொருளைத் தவிர்த்துச் சட்டம் நவீனமாகச் செயல்படுவதற்கு வழிசெய்ய வேண்டும்.

ஒரு திவாலாவுக்குச் (Bankrupt) சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்திலிருந்து வரும் வருமானங்களை நொடிப்புநிலை அதிகாரி (Official Receiver) பெற்றுக்கொள்வதற்கு நொடிப்புநிலைச் சட்டம் (Bankruptey Act) வகை செய்கிறது. அதே சமயத்தில் ஒரு திவாலா தன் சொத்துகளிலிருந்து வரும் வருமானங்களைத் தன் வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பதற்கான உரிமையை ஒரு அறுதியாவணத்தின்கீழ்ப் (settlement) பெற்றிருக்கும் தருணத்தில் கடன் கொடுத்தவர்களின் நலனுக்கும், கடன்பட்ட திவாலாவின் உரிமைக்கும் இடையே ஒரு முரண்பாடு ஏற்படுகிறது. இதை ஒரு வீணை முரண்பாடு (extravagant anomaly) என்று கூறி நீதிபதி ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். (Re Cohen A Bankrupt)

ஆனால், தெளிவுபட இருக்கும் ஒரு சட்டப் பிரிவுக்குக், குற்றச் செயல் புரிந்தவருக்குச் சாதகமாக ஒரு பொருள் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதில்லை. உதாரணமாக, வருமான வரிச் சட்டத்தின்படி வருமான வரி கட்டும் ஒருவர் வருமானத்தின் ஒரு பகுதியை மறைத்து வருமான வரித் துறைக்கு வெளியிடாமல் இருந்தால் "அவர் செலுத்தவேண்டிய வரியின் மும்மடங்கை அபராதமாகச் செலுத்த வேண்டும்." வரியின் மும்மடங்கு என்பது; அவர் செலுத்தத் தவறியவரியின் (ஒளிக்கப்பட்ட வருமானத்திற்குண்டான வரி) மும்மடங்கைக் குறிப்பதா அல்லது அவர் அந்த வருடத்துக்குச் செலுத்த வேண்டிய மொத்த வரியின் மும்மடங்கைக் குறிப்பதா என்ற கேள்வி எழுந்தது. இதை ஆராய்ந்த House of Lords சட்டப் பிரிவின் இயற்கையான பொருளையே ஏற்றுக்கொண்டு, அவை விபரீதமான முடிவுகளைத் தருவதாக இருப்பினும், அது சரி எனத் தீர்ப்பளித்தது.

**3. அநீதிக்கும் அடிமுட்டாள்தனத்துக்கும் எதிரான அனுமானம் (Presumption against Intending Injustice and Absurdity)**

எந்த ஒரு சட்டப் பிரிவுக்கும் பொருள் காணும் தருவாயில் அவை தரும் ஒரு பொருள் அநீதிக்கு வித்திடுவதாக அமைந்தால்,

நீதிமன்றம் அந்தப் பொருள் சட்ட மன்றத்தின் உள்ளக்கிடக்கை அன்று என்றே அனுமானித்தல் வேண்டும். ஆனால், நீதிமன்றம் அநீதியை நிர்ணயிக்கும்போது நிதானத்துடன் செயல்படல் வேண்டும். அநீதி உண்மையான அநீதியாக இருக்கவேண்டும். முற்றிலும் நடவாத் தன்மை சார்ந்த அல்லது பல்வேறு கற்பனை நிபந்தனைகள்மீது நடக்கக்கூடிய (purely hypothetical) ஒன்றை அநீதியாக ஏற்றுக்கொள்ளுதல் கூடாது. ஏனெனில், வழக்குரைஞர்கள் பல சமயங்களில் தங்கள் கட்சிக்காரரைக் காப்பதற்காக முற்றிலும் நடைமுறையில் வரும் தகுதியற்ற, எடுத்துக் கட்டிய அநீதிகளை நீதிமன்றத்தின்முன் வைக்கலாம்.

உதாரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் 1780-ன்படி (East India Company Act *1780*) மாஜிஸ்ட்ரேட்டுகள் அலுவல் நிமித்தம் செய்யும் எந்தத் தவறுகளும், உரிமைத் தீங்குகளும் (injury) அவர்களை பாதிக்காது. இந்தச் சட்டப் பிரிவு, அவர்கள் அதிகார எல்லைக்குள் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட தவறுகளிடமிருந்து மட்டுமே பாதுகாப்பு அளிக்கிறது என்று பொருள் கொள்ளப்பட்டது (Calder *Vs.* Halket *1840*).

ஓர் உரிமைத் தீங்கு வழக்கில் (Tort) கூட்டுத் தீங்கிழைத்தவரிடையே (joint tortfeasors) வசூலிக்கப்படவேண்டிய பங்கு நஷ்ட ஈட்டுத்தொகை (Contribution) நீதிமன்றம் சரி என்று நினைக்கின்ற அளவில் தீங்கிற்குக் காரணமானவர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்பது சட்டப் பிரிவின் பொதுப் பொருள். பொருள் விளக்கத்தின்போது, தீங்கிற்குக் காரணமானவர்கள் என்பது அனைவரையும் குறிக்குமா அல்லது நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டுள்ளவர்கள் மட்டுமா என்பது பிரச்சனையாக் கப்கட்டது. தீர்ப்பில், "நீதி மன்றத்தின் முன் விளக்கம் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படாத ஒரு நபரின் பொறுப்பைக் கணிப்பது நீதி வழங்கு முறையின் அடிப்படைக் கருத்துகளைத் தகர்ப்பதாகும்" என்று கூறப்பட்டது. (Maxfield *Vs.* Llewellyn *1961*)

இது போலவே அர்த்தமற்ற, முட்டாள்தனமான செயலுக்கு அழைத்துச் செல்லும் பொருள் விளக்கத்தைக் கைவிட வேண்டும்.

உதாரணமாகப் பொதுமக்கள் சுகாதாரச் சட்டம் (Public Health Act *1875*) நகராட்சி அமைப்புகள் 'தண்ணீர் விநியோகிக்கும்' பணியில் ஈடுபட்டிருந்தால் குழாய்கள் பதித்துக்கொள்

வதற்குச் சில உரிமைகளை அளித்திருந்தது. இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கு முன்பே, 'தண்ணீர் விநியோகிக்கும்' பணியை நகராட்சி மேற்கொண்டிருந்தால்தான் அது அவர்கள் உரிமையாகும் என்று கூறப்பட்ட வாதம் பொருளற்றதும் முட்டாள் தனமானதுமாகும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

**4. ஒருவருடைய தவறு அவருக்குப் பயன்தரும் முறையை எதிர்க்கும் அனுமானம்** (Permitting Advantage from one's own wrong)

ஒருவருடைய தவறு அவர் ஆற்றவேண்டிய கடமையிலிருந்து விடுப்புக் கொடுக்கும் வகையிலான, அல்லது அவருடைய தவறு அவருக்கே பயனளிக்கும் வகையிலான சட்டப் பொருள் விளக்கங்கள் தவறு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுமானமாகும். ஏனெனில் இவை அனுமதிக்கப்பட்டால், சட்டத்தின் நோக்கத்தைச் சிதைப்பதாகவும், மற்றவர்களும் அதுபோல் செய்து சட்டத்தை மீறுவதற்கு முன் மாதிரியாகவும் அமைந்துவிடும்.

உதாரணமாகத் தடுப்பூசிச் சட்டம் (Vaccination Act) ஒரு நீதிபதிக்கு, பெற்றோரை அவர் குழந்தையுடன் தம்முன் தோன்றுவதற்கு ஆணை பிறப்பிக்கவும், அவ்வாறு தோன்றியபின் குழந்தைக்குத் தடுப்பூசி போடப்படாமல் இருந்தால் போடும்படி செய்ய உத்தரவு பிறப்பிக்கவும் அதிகாரம் அளித்தது. குழந்தையுடன் தோன்றினால்தான் இந்த உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்ற வாதம் தள்ளப்பட்டது. இவ் வாதம் ஒத்துக்கொள்ளப் பட்டால் 'குழந்தையுடன் வராமல்' இருக்கும் தவற்றைச் செய்த பெற்றோருக்கு அத் தவறே பலனளிக்கும் விதத்தில் அமையும். மேலும் சட்டத்தின் நோக்கமும் முழுமை அடையாது (Dutton *Vs.* Atkins *1871*).

அதுபோலவே பள்ளிக் கட்டணம் செலுத்தாமல் பள்ளிக்கு அனுப்புவது, 'ஒவ்வொரு பெற்றோரும் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்' என்ற சட்டப் பிரிவை, அனுசரித்தது ஆகாது (London School Board *Vs.* Wood).

**5. சட்டங்களின் முன்மேவு ஆளுகை** (Retrospective operation of Status)

ஆங்கிலச் சட்ட முறையின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக, "எந்த ஒரு செய்சட்டத்திலும் குறிப்பாக முன்மேவு ஆளுகை கூறப்பட்டிருந்தால் ஒழிய, சட்டங்களுக்கு முன்மேவு ஆளுகை கொடுக்கப்படக் கூடாது" என்பது கருதப்படுகிறது.

அதாவது, பொதுவாகச் சட்டம் இயற்றப்பட்டபின் ஏற்படும் வழக்குகள், சம்பவங்களுக்கு மட்டுமே அச் சட்டம் பொருந்தும். இந்தக் கருத்து பல்வேறு தடவையாக எடுத்துக் கூறப்பட்டும், ஒப்புக்கொள்ளப்பட்டும் இருப்பதால், சட்டபூர்வ அதிகாரத்தை அனுபவிக்கிறது.

Re A Solicitor's clerk, (*1957*) என்ற வழக்கைப் பார்க்கலாம். திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்டு ஒரு சட்டமுகவர் குமாஸ்தா (Solicitor's clerk) தண்டனை பெற்றார். ஆனால், அவருடைய திருட்டுக் குற்றம், சட்டமுகவருக்கோ அல்லது அவருடைய கட்சிக்காரருக்கோ உடமையான பொருள்கள் சம்மந்தமுடையது அன்று. அதனால், அவரைச் சட்டமுகவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என ஆணை பிறப்பிக்க முடியவில்லை. இந்த சம்பவத்திற்குப் பின், சட்டத் திருத்தம் ஒன்று எந்த விதத் திருட்டுக் குற்றத்துக்கும் ஆளான குமாஸ்தாக்களை வேலைக்குத் தகுதியற்றவர்களாக்கியது.

இந்தச் சட்டத் திருத்தம் சம்மந்தமாகத் தீர்ப்பு வழங்கிய Lord Goddard C. J., யின் வாசகம் பின்வருமாறு: "இந்தச் சட்டத் திருத்தம், திருட்டு நடத்தை கொண்ட குமாஸ்தாவை வேலைக்குத் தகுதியற்றவராக்கும் ஆணை பிறப்பிக்க அதிகாரமளிக்கிறது. அந்தத் திருட்டு நடத்தை ஆணை பிறப்பிக்கப்படும் முன் நடந்ததாக இருக்கலாம். ஆனால், சட்டத் திருத்தம் செய்யப்பட்டதற்கு முன் நடந்த செயலையும் கட்டுப்படுத்துவதற்கான முன்மேவு ஆளுகை திருத்தத்தில் இல்லை. சட்டம் எதிர் காலத்தில் ஒரு தகுதியின்மையை ஏற்படுத்துகிறதே தவர முறையீட்டாளரின் (Appelent) பழைய நடத்தையை உட்கொள்ளும் வகையில் முன்மேவு முறை இல்லை."

முன்மேவு ஆளுகையைச் செயல்படுத்தினால் கடந்த கால நடவடிக்கைகளையும், உரிமைகளையும் ஒப்பந்தங்களையும் பாதிக்கும். மேலும், புதிய உரிமைகளையோ, கடமைகளையோ, தகுதிகளையோ, தகுதியின்மையையோ, பழைய, முடிந்த நடவடிக்கைகளுக்குத் தோற்றுவிக்கலாம். ஆகையால், புதிய சட்டங்களில் முன்மேவு ஆளுகை தெளிவாகச் சொல்லப்படாத தருணத்தில், ஏற்கனவே நீதி மன்றங்களின் முன் இருக்கும் வழக்குகளை, அவை அனுமதிக்கப்படும்போது இருந்த சட்ட திட்டங்களைக் கொண்டே தீர்வு செய்யவேண்டும்.

அதுபோலவே, ஒரு கீழ் நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்தபின், புதிய ஒரு சட்டம், அல்லது சட்டத்

திருத்தம் அமலுக்கு வந்தாலும் முந்தைய சட்டதிட்டங்களின் படியே அப்பீல் கோர்ட் அதை ஆராய வேண்டும். ஆனால், புதிய சட்டம் அல்லது சட்டத் திருத்தம் நீதிமன்றங்களில் நடந்து கொண்டிருக்கும் வழக்குகளுக்கும் செல்லும்படியாக ஏற்படுத்தப் படலாம். அச் சமயங்களில் இந்த விதி பயன்படாது.

**சட்டப் பொருள் விளக்கமும், பொதுச் சொல் விளக்கச் சட்டமும்** (Interpretation of Statutes and General Clauses Act)

பாராளு மன்றத்தின் சட்டங்களுக்கெல்லாம் பொதுவாகப் பல நியதிகள் நடைமுறைப் பழக்கத்தில் மலிந்துவருகின்றன. இந்தப் பொதுவான நியதிகள் அனைத்தையும் ஒருங்கு இணைக்கும் முயற்சியாகச் சட்டப் பொருள் விளக்கச் சட்டம் 1889 என்ற சட்டம் இங்கிலாந்தில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் இயற்றப் பட்டதன் முதன்மையான நோக்கம் பாராளுமன்றச் சட்டங்களில் பயில்கின்ற மொழிநடையைக் குறுக்கியும் சுருக்கியும் அமைப்ப தாகும். இந்த முறை இந்தியாவிலும் பின்பற்றப்பட்டு, அந்த அடிப்படையில்தான் பொதுச்சொல் விளக்கச் சட்டம் 1897, இதற்கு முன்னர் இயற்றப்பட்ட 1868, 1887 ஆகிய சட்டங்களை முறைப்படுத்தத் தன்னுள் ஒருமைப்படுத்திக்கொண்டது.

இதன் முதன்மையான பணி, சட்டத்தில் பயிலும் மொழியைக் குறுக்கிச் சுருக்கத்தைக் கையாள்வதும், சட்டம் அனுமதிக்கும் இடங்களில் ஒரு பொதுவான பொருளைப் பல சட்டங்களில் பயி லும் ஒரு சொல்லிற்குத் தர முயல்வதும் ஆகும். ஒரே பொருளை மீண்டும் மீண்டும் பல சட்டங்களில் புகுத்தும் மெத்தனத்தைத் தடுப்பதும், பல சட்டங்களுக்குப் பொதுவான கோட்பாடுகளை அந்தந்தச் சட்டங்களில் புகுத்துவதைக் காட்டிலும் ஒரே சட்டத் தில் அவைகளை வரையறுப்பதும் இதன் சிறப்பியல்புகள் ஆகும். இது மத்திய அரசால் இயற்றப்பட்ட செய்சட்டமாகும். இதே போல் பல மாநிலங்களும் தங்கள் தேவைக்கென இது மாதிரி யான மாநில பொதுச் சொல் விளக்கச் சட்டங்களை இயற்றி யுள்ளன.

இதே சட்டம் 30 பிரிவுகள் உடையதாய் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 4 பிரிவுகள் முதல் பாகமாகும். இது பெரும்பாலும் பல சட்டங்களில் பயிலும் வார்த்தைகளுக்கு வரையறை, பொருள் முதலியவற்றைத் தரு கிறது. இரண்டாம் பாகம் பொதுவான நியதிகளைப் பற்றிப் பேசுகிறது. சட்டத்தின் இயக்கம் (Operation) நீக்கம் (Exclusion)

புதுப்பித்தல் போன்றவை இதனுள் அடங்கும். மூன்றும் பாகம், அதிகார வரம்பு, நிர்வாக அதிகாரிகளின் கடமைகள் போன்ற வற்றைப்பற்றிப் பேசுகிறது. இறுதிப் பாகமான நான்காம் பாகத்தைப் பல்கலைப் பகுதியாகக் கொள்ளலாம்.

**பிரிவு 2**

இது பல வரையறைகளைப் பற்றியதாகும். 66 வார்த்தைகள் இதனுள் அடங்கும். இந்த வார்த்தைகளின் வரையறை மத்திய அரசின் சட்டம் சம்பந்தப்பட்டதே. பிரிவு 2, உட்பிரிவு 4, மத்திய அரசின் சட்டம் என்பதைப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் என்கிறது. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு இது பொருந்தாது. அது இதற்கு அப்பாற்பட்டதாகும். ஏனென்றால் இந்த அரசியலமைப்புச் சட்டம் அரசியலமைப்பு மன்றத்தால் இயற்றப்பட்டதாகும். இதுபோன்றே மாநிலச் சட்ட மன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இது பொருந்தாது.

அத்தியாயம், மாவட்ட ஆட்சியாளர், ஆணையாளர், தொடக்கம் போன்ற அன்றாட வழக்குச் சொற்களை வரையறுப்பதோடு, பிரிவு 2 உட்பிரிவு (42)-ல் 'Person' (பூதவுடல்) என்ற வார்த்தைக்குக் கம்பெனி, அதுபோன்ற 'ஒரு கூட்டம்', தனிப்பட்டவர்கள் போன்றவற்றையும் குறிக்கும் என்று வரையறை செய்கிறது. ஆனல், ஒன்று இங்குக் கருதத்தக்கது. இச் சட்டத்தில் காணப்படும வரையறைகள் எவ்விதத்திலும் முடிந்த முடிவல்ல; எந்த வார்த்தைக்கும் எந்தவிதமான புதுப்பொருளைத் தருவதற்கும் பாராளுமன்றத்திற்கு முழுச் சுதந்திரம் உண்டு.

இதன் காரணமாகவே வரையறை பிரிவு 2-ல் "மாறுபட்டுக் கருத்துக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தால் தொனித்தாலன்றி" என்ற சொற்றொடர் சேர்க்கப்பட்டுள்ளது.

**பிரிவு 2**

பொருள்படுதல் (mean), உட்படுதல், மேலும் சேர்த்துக் கொள்ளல் (includes) குறிப்பிடல், கருதப்படுவது போன்ற வார்த்தைகள் எல்லாச் சட்டங்களிலும் மிகுதியும் காணப்படுகின்றன.

பொருள்படுதல் (mean) என்பதற்கு முடிவான பொருள் இதுவே என்பதாகும். அதற்கு மேலும் எதனையும் சேர்த்திடல் இயலாது.

உட்படுத்தல் (includes) என்பதற்கு இது போன்றவற்றை இன்னும் சேர்த்துக்கொள்ளலாம் என்பதும், எனவே அது முடிந்த முடிவைச் சுட்டி நிற்கவில்லை என்பதும் பொருளாகும்.

'கருதப்படுதல்' என்பதற்கு ஒரு சட்டத்தின் தேவை கருதி அவ்வாறு கருதப்படுகிறது. அந்த வார்த்தை மாறுபட்ட பொருள்களையும் கொண்டிருக்கலாம். ஆனால், இந்தச் சட்டத்தின் படி இவ்வாறுதான் கருதப்பட வேண்டும் என்ற குறிப்பிட்ட வரையறையை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக வலியுறுத்தி நிற்கிறது.

**சட்டப் பொருள் கொள்ளலில் பொதுவிதிகள் (General rules of Construction)**

**பிரிவு 5**

பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் 5ஆம் பிரிவு சட்டத்தின் இயக்கம்பற்றிப் பேசுகிறது. ஒரு சட்டம் எப்போது அமலுக்கு வருகிறது என்பது பற்றி மௌனம் சாதிக்குமானால் எப்போது ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறுகிறதோ அந் நாளிலிருந்து அச் சட்டம் நடைமுறைக்கு வருவதாகக் கொள்ள வேண்டும். ஆனால், ஜனாதிபதியின் தனிப்பட்ட பேராணைகளுக்கோ மற்ற ஆணைகளுக்கோ பிரிவு 5-ல் கண்ட விதி பொருந்தாது. ஏனென்றால் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கே இந்த விதி பொருந்துவதாகும். பொதுச் சொல் விளக்கச் சட்டம் ஒரு மத்திய அரசின் சட்டம் என்றும், மத்திய அரசின் சட்டம் என்பது பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டம் என்றும் முன்னர்க் கண்டோம். அதனை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

**பிரிவு 6**

இந்தச் சட்டத்தின் ஆறுவது பிரிவு சட்டத்தை நீக்கிவிடுதலால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியதாகும். நீக்கியும், திருத்தியும் அமைகின்ற ஒரு சட்டம், சொல்லப்போனால் ஒரு துப்புரவுத் தொழிலாளி போல எனலாம். ஒரு சட்டத்தை நீக்கிவிடுதல் எனும்போது அச் சட்டம் ஒருபோதும் இயற்றப்பட்டுச் சட்டக் கோவையில் இடம்பெறவில்லை என்பதற்குச் சமமாகும். அப்படிப் பட்ட ஒரு சட்டம் எப்போதும் இருந்ததில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆனால், 6ஆம் பிரிவு விதிவிலக்கு ஒன்றை வரையறுத்துக் கீழ்க்கண்ட ஐந்து கோட்பாடுகளை விதிக்கிறது.

(அ) ஒரு சட்ட நீக்கம், சட்ட நீக்கத்தைச் செய்யும்போது இல்லாத ஒன்றைப் புதுப்பித்ததாகவோ இருக்கின்ற ஒன்றை உயிர்ப்பித்ததாகவோ கொள்ளக் கூடாது.

(ஆ) பெற்ற ஒரு உரிமை அல்லது ஒரு தண்டனையை ஒரு சட்ட நீக்கம் எந்த விதத்திலும் பாதிப்பதில்லை,

(இ) நடைமுறையில் இருக்கின்ற உரிமைகளைப் பாதிக்கின்ற சட்ட நீக்கம் நிகழ்காலம் பற்றிய ஒன்றே. தெளிவாக எதுவும் சொல்லப்படாதவரை இறந்த காலத்திற்கு அதனைப் பயன்படுத்தக் கூடாது.

மற்ற இரண்டு கோட்பாடுகளும் சட்ட நீக்கத்திற்குப் பின் சட்டபூர்வமான நிலை, தண்டனை, விசாரணை இவற்றின் தன்மைகள் என்ன என்பது பற்றிப் பேசுகின்றன.

**பிரிவு 7**

இது சட்டம் புதுப்பித்தலைப் பற்றியதாகும். ஒரு சட்டம் புதுப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**பிரிவு 8**

மற்றச் சட்டங்கள் நீக்கத்திற்குள்ளான ஒரு சட்டம் பற்றிக் குறிப்பிடுமேயானால், நீக்கி அமைத்த சட்டத்தையே இப்போது குறிப்பதாகக் கொள்ள வேண்டும். பிரிவு 9, பிரிவு 10 ஆகியவை கால எல்லை, இட எல்லை இவற்றைக் கணக்கிடுவது பற்றியனவாகும்.

**பிரிவு 12**

சட்டத்தில் பயில்கின்ற ஆண்பாற் சொற்கள் பெண்பாலாரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். அதுபோலவே ஒருமை பற்றிய சொற்கள் பன்மையையும் பன்மை பற்றிய சொற்கள் ஒருமையையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

## அதிகாரமும் அதனைத் தாங்கிச் செயல்படுபவர்களும்
## Power and Functioners

**பிரிவு 14**

அதிகாரம் பற்றியதாகும் இது. ஒரு சட்டம் அதிகாரத்தை வழங்குமேயானால் அதனை அவ்வப்போது தேவைக்கேற்பப் பயன்படுத்த வேண்டும்.

**பிரிவு 15**

ஒரு சட்டம் ஒருவரை நியமிக்கவோ, ஒரு பதவியை நிரப்பவோ, ஒரு பணியை நிறைவேற்றவோ அதிகாரம் வழங்குமேயானால் அத்தகைய அதிகாரம் பெயர் மூலமாகவோ, பதவி மூலமாகவோ நிறைவேற்றப்பட வேண்டும்.

**பிரிவு 16**

இது ஒரு முக்கியமான கோட்பாடு பற்றியதாகும். ஒருவரை நியமிக்க ஒருவர்க்கு ஒரு சட்டம் அதிகாரம் அளிக்குமேயானால் அது அவரை நியமிக்க மட்டுமல்லாது நீக்குவதற்கும் அதிகாரம் அளிப்பதாகவே கொள்ள வேண்டும்.

**பிரிவு 21**

ஒரு சட்டம் ஒரு ஆணையோ அல்லது அறிக்கையோ இயற்றிட அதிகாரம் வழங்குமானால் சேர்த்தல், நீக்குதல், மாற்றுதல் போன்ற திருத்தங்களைச் செய்வதற்கும் அதிகாரம் அளிப்பதாகவே கொள்ள வேண்டும்.

பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் மற்றப் பிரிவுகள் மேலும் பல வகையான விஷயங்களைப் பற்றிப் பேசுகின்றன. ஆனால், மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் கண்ட கோட்பாடுகள் மிகவும் உயிர் நாடியானவை. அவை பற்றிய அறிவு மிகவும் இன்றியமையாதது என்பதோடு பெரிதும் வேண்டப்படுகிறது.

## சட்டப் பொருள் கொள்ளலும் மற்றச் சட்டங்களும்

## Construction in reference to other enactments

**முரண்பாட்டைத் தவிர்த்தல்**

ஒரு சட்டத்தின் இரண்டு பிரிவுகள் ஒன்றிற்கொன்று முரண்பட்டிருந்தால், இரண்டாவதாக வருகின்ற பிரிவே மிஞ்சும் என்பது பொது விதி. ஆனால், பொதுவாகப் பார்க்கப்போனால் ஒருவர் தன்னைத்தானே மறுத்துக்கொள்வார் என்று குறிப்பிட இயலாது. எனவே, முரண்பாடு ஏற்படும் இடங்களில் அதனைத் தவிர்த்து ஒரு சுமுகமான முறையையே கையாள நீதி மன்றங்கள் முயல்கின்றன. அப்படிப்பட்ட முரண்பாட்டைத் தவிர்க்க, பொதுவாக முரண்படும் இரு பிரிவுகளையும் இரண்டு வெவ்வேறு பொருள்களையோ, சூழ்நிலைகளையோ குறிப்பதாகக் கொள்வது இயல்பாகும்.

ஊர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் ஒரு பிரிவு "பொருள்களை எடுத்துச் செல்வதற்குக் கட்டுப்பட்டுப் பாதைகளில் செல்கின்ற" ஊர்திகளுக்கு என்று ஒரு வரியையும், அதே சட்டத்தின் மற்றொரு பிரிவு "பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்காகக் கட்டப்பட்டுப் பாதையில் செல்கின்ற" ஊர்திகளுக்கு ஒரு கட்டணத்தையும் வரியாக விதித்திருந்தது. இங்கு முன்னர்க் குறிப்பிட்ட பிரிவில் கண்ட "பொருள்களை எடுத்துச் செல்கின்ற" என்பதற்கும் "பொருள்களை கொண்டு சேர்க்கின்ற" என்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. அவ்வாறுனல் இரண்டு பிரிவுகளும் வெவ்வேறான கட்டணங்களை வரியாக விதிப்பானேன்? இது முரண்பாடாக இல்லையா? இதனை ஆராய்ந்த நீதிமன்றம் இரண்டு வேறுபட்ட பொருள்களைப் பற்றிப் பேசுகிறது. எனவே, முதலில் கண்ட பிரிவின்படி கட்டணத்திற்கு உள்ளானவர் மீண்டும் பின்னர்க் கண்ட பிரிவின்படி கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இரண்டு பிரிவுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, முரண்பாடாக இருப்பதாகக் கொள்ளக் கூடாது என்று முடிவு கூறியது. இது ஒரு சுமுகமான பொருள் கொள்ளலாகும்.

**பிரிவுகளின் விதிவிலக்கும் சட்டப் பொருள் கொள்ளலும்**
**(Construction of Provisions)**

ஒரு விதிவிலக்குப் பிரிவு (Proviso to section) எந்தப் பிரிவைக் கட்டுப்படுத்துகிறதோ, அந்தக் குறிப்பிட்ட பிரிவிற்கு மட்டுமே விதி விலக்காகக் கொள்ளவேண்டும். மற்றப் பிரிவுகளை எந்த விதத்திலும் பாதிப்பதாகக் கொள்ளக் கூடாது. நகர முன்னேற்றச் சட்டம் (The city improvement act) என்ற சட்டத்தின் விதிவிலக்குப் பிரிவு ஒன்று "இந்த சட்டத்தில் காணப்படும் எந்த ஒன்றும் பொது மக்களுக்குத் தொல்லையாக அமைகின்ற செயலைச் செய்ய நகராட்சிக்கு அனுமதி அளிக்கவில்லை" என்று கூறுகிறது. இந்த விதிவிலக்குப் பிரிவு சட்டம் முழுமைக்கும் அன்று என்று துப்பரவு பற்றிய பிரிவுகளின் அத்தியாயத்தின் இறுதியில் காணப்படுவது அந்தக் குறிப்பிட்ட பிரிவுகளை மட்டுமே கட்டுப்படுத்துவதாகக் கொள்ள வேண்டும். எனவே, மற்றப் பிரிவுகளின்கீழ் நகராட்சி செய்ய முற்பட்ட மின்சார வசதிகள் அமைத்தல், பாதை அமைத்தல் போன்ற செயல்களை அது கட்டுப்படுத்தவில்லை. எனவே, அத்தகைய செயல்களைத் தொல்லை என்ற பெயரால் இந்த விதிவிலக்குப் பிரிவைப் பயன்படுத்தித் தடுத்திட இயலாது என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

**அனுமான நீக்கம்** (Repeal by Implication)

பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட ஒன்றை வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ நீக்குவதாக அமையலாம். ஆனால், இதனைக் கையாள்வதற்கு முன்னால் இரண்டு சட்டங்களும் ஒத்துப்போகின்ற ஒரு சுமுகமான பொருள் விளக்கத்தையே நீதிமன்றம் கையாளும். ஆனால், இரண்டும் முரண்பட்டு இணைந்து செயல்பட இயலாமல் போய்விட்டால், பின்னர் இயற்றப்பட்ட சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்கி விட்டதாகவே கொள்ளவேண்டும். உதாரணமாக ஒரு சட்டம் சில வகையான மதுபானங்களுக்கு அனுமதிச் சான்றிதழ் பெறுவதிலிருந்தும் விதி விலக்கு அளித்திருந்தது. ஆனால், அதைத் தொடர்ந்து பின்னர் வந்த சட்டம் அனுமதிச் சான்றிதழ் இல்லாமல் எந்தவிமான மதுவகைகளும் விற்கக் கூடாது என்று தடை விதித்தது.

இந்த உதாரணத்தில் இரண்டு சட்டங்களும் ஒன்றிற்கொன்று முரண்பாடானவை என்பதோடு ஒன்றாக இணைந்து செயல்பட இயலாநிலையில் உள்ளன. எனவே, பின்னர் வந்த சட்டம், முன்னர் வந்த சட்டத்தை நீக்கிவிட்டதாகக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பல தனிப்பட்ட சூழல்களைக் குறிக்கும் சட்டம், பொதுவாகக் கொண்டுவரப்பட்ட ஒரு சட்ட நீக்கத்தால் நீக்கப்பட்டதாகக் கொள்ளக் கூடாது.

முன்னர் வந்த சட்டம் மறைமுகமாகக்கூட நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால், தனிப்பட்ட சூழல்களுக்காக ஏற்பட்ட அந்தத் தனிச் சட்டம் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டதாகக் கொள்ளக் கூடாது. அப்படி நீக்கப்பட்டது என்றால் அதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

**கடலியல் நீதிமன்றங்கள் சட்டம்** 1861, (Admiralty Court of 1861) **என்ற சட்டத்தின் 7ஆம் பிரிவு**

இது "கப்பலால் நேர்ந்த எத்தகைய இழப்பிற்கும், இழப்பீடு கோரிட" அனுமதி அளித்தது. ஆனால், இந்தச் சட்டம் இதே போல் பிரிவு கொண்ட உயிர் அபாய விபத்துச் சட்டம் 1846 என்ற சட்டத்தினைப் பாதிப்பதாகக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அந்தச் சட்டம் குறிப்பிட்ட வேறு சில சூழல்களுக்காக ஏற்பட்ட தனிச் சட்டமாகும். இவ்வாறு Seaward *Vs.* The Veracruz என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கு முறை
## (Interpratation of the Constitution)

பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை நோக்கும் போது ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் சட்டப்பொருள் விளக்கத்திற்குப் பெருஞ்சோதனையாகவே இருக்கிறது. ஏனென்றால் அது இயற்றப்பட்ட நோக்கம், ஆற்றிட இருக்கும் பணி இவையெல்லாம் முற்றிலும் வேறுபட்டவை. எனவே, அதனை அணுக வேண்டிய முறையும் மாற்றம் கொண்டதாகவே இருக்க வேண்டும். மலரின் மாண்பு மனத்திலே; விளக்கின் மாண்பு ஒளியிலே; அதுபோல ஒரு நாட்டின் மாண்பு அதன் அரசியலமைப்புச் சட்டத்தால்தான் பெறப்படுகிறது.

உயிரின்றி உடலியக்கம் இல்லை. நாட்டின் இயக்கம்கூட உயிர்நாடி போன்ற அரசியலமைப்புச் சட்டத்தால்தான் நடைபெறுகிறது. நாடாகட்டும், காடாகட்டும், மேடாகட்டும், பள்ளமாகட்டும் எங்கு மக்கள் நல்லவர்களாக வாழ்கிறார்களோ அங்கே நலனும் நல்லதாக மேம்படும். ஒரு நாடு நலம்பெற நன்மக்கள் கொண்ட சமுதாயம் வேண்டும். நல்ல சமுதாயம் அமைய நல்லாட்சி அமைய வேண்டும், நல்லாட்சி அமைய ஒரு நல்ல அரசியலமைப்பு வேண்டும். ஒரு நல்ல அரசியலமைப்பைத் தருவது அரசியலமைப்புச் சட்டமேயாகும். எனவே, ஒரு நாட்டு மக்கள் வாழ்வில், ஒரு நாட்டின் மேம்பாட்டில் அரசியலமைப்புச் சட்டத்தின் பணி மலையினும் மாணப் பெரிது. மக்கள் பேச நினைக்கிறார்கள்; எழுத நினைக்கிறார்கள்; நாடெங்கும் சென்றுவர எண்ணுகிறார்கள்; எண்ணிய இடத்தில் எண்ணியாங்கு வாழ்ந்திட ஆசைப்படுகிறார்கள்; உடைமைக்கு உரிமை தேடுகிறார்கள்; உயிருக்குப் பாதுகாப்பு நாடுகிறார்கள். அவர்கள் எண்ணங்களே அலாதியானவை. கலை மேம்பாட்டைக் கருதுகிறார்கள்; தங்களுக்கென்றுள்ள நாகரிக உயர்வைக் காத்திட எண்ணுகிறார்கள்; முடிவாகச் சொல்லப்போனால் இங்ஙனம் தங்கள் நலனை முதன்மையாகக் கருதுகின்ற தங்கள் எண்ணங்களுக்கு வடிவம் தந்திடவல்ல நல்ல அரசை எதிர்பார்க்கிறார்கள். இவற்றையெல்லாம் பிரதிபலித்து, நாட்டின் உயிரோட்டமாக, உணர்வோட்டமாக, மக்களின் மன எழுச்சியாக மாண்புடன் திகழ்வது எது? ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டமல்லவா?

ஒரு நாடு பிறக்கும்போது அரசியலமைப்புச் சட்டமும் பிறக்கிறது. நாட்டின் வீழ்ச்சியே அதன் வீழ்ச்சியாய் முடிகிறது. நாடு வாழும்போது அதன் உயிரோட்டமாக, மக்களின் உணர்

வுகளைப் பிரதிபலித்து நிற்கிறது. அது ஒரு கருவூலம்; ஒரு நாட்டின் ஒற்றுமையின் முத்திரை தாங்கி நிற்கிறது. வேற்றுமையில் ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்கிறது; ஒரு நாட்டின் பலமே அதன் அரசியலமைப்புத்தான். ஒரு நாட்டின் முக்கிய மூன்று அங்கங்களான சட்ட மன்றம், ஆட்சி மன்றம், நீதிமன்றம் ஆகிய மூன்றும் அதன் படைப்பே. உயிர்ப்பும் அதுவே. கடந்த காலத்தை தன்னுள் அடக்கி, நிகழ்கால வழிகாட்டியாய் நின்று ஒளிமயமான ஒரு எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் கலங்கரை விளக்கல்லவா அது! அது ஒரு விடிவெள்ளி; வாழவழி காட்டுவதோடு வாழ்ந்துகொண்டும் இருக்கும் ஒரு பேருண்மை; வெறும் வார்த்தைக் கோர்வை அன்று அது; வாழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயத்தைச் சுட்டி வரவிருக்கும் சமுதாயத்தையும் எட்டிடச் செய்யும் ஒரு தொலைநோக்கி. வாழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயத்தின் ஒரு அங்கம் அது. கோடி மக்களின் பேராணையைத் தாங்கி மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆளும் உரிமையை அளித்திடும் உரிமைச் சாசனம் அது.

சுருங்கச் சொன்னல், ஒரு அரசியலமைப்பின் சரித்திரம் ஒரு நாட்டின் வரலாறு; அந்த நாட்டு மக்களின் வரலாறு; அது அவர்களின் உரிமைக் கீதம்; உணர்வோட்டம்; உயிர்நாடி. இப்படிப்பட்ட ஒரு புனித சாசனம் நீதிமன்றங்களின் தீர்ப்பிற்கு வருகின்றபோது, எச்சரிக்கையோடு கையாள வேண்டும்; கவனம் மிகுதியும் வேண்டும்; தான்தோன்றித்தனமாக மனம்போன போக்கில் செயல்பட்டிட இயலாது. ஏனென்றல் ஒரு நாட்டின் தலைவிதியே அதனல் நிர்ணயிக்கப்படுகிறது; ஒரு நாட்டின் எதிர்காலமே அதில் அடங்கியிருக்கிறது.

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

1940ஆம் ஆண்டின் இறுதிக் காலம் உலக வரலாற்றில் மிக முக்கியமான மாற்றங்களை மின்னல் வேகத்தில் நிகழ்த்திய காலமாகும். இரண்டாம் உலகப் பெரும்போர் ஒரு முடிவை எட்டியது அப்போதுதான்; ஹிட்லரின் ஏகாதிபத்தியம் மண்ணோடு மண்ணுகச் சரிந்து சிதைந்ததும் அப்போதுதான்; ஆங்கிலேயரின் பேரரசு குலைந்து, சிதைந்து, சிதறி ஒடுங்கியதும் அப்போது தான்; சீனவில் நூற்றூண்டுப் புரட்சி தோன்றிப் புத்தெழுச்சியை ஊட்டியது அதுபோழ்துதான். அதுவே பின்னர்ப் பெரும் வளர்ச்சியாய், பெரும் இயக்கமாய், இமயமாய் உருவெடுத்தது. போரின் கொடுமையிலிருந்து விடுபட்டுப் புதிய பொருளாதாரப் பாதையில் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஐரோப்பா வீறுகொண்டதும் அதுபோதுதான். இங்ஙனம் உலகெங்கும் கொந்

தளிப்பு; புதிய உற்சாகம்; உணர்ச்சிமயம்; எழுச்சி வெள்ளம். இது இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை. இனவெறி எங்கும் தலைவிரித்தாடியது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்செயல்கள் கேள்விப்பட்டோரை நடுங்கவைத்தன. முடிவு?

நாடு பிரிவினைக்குள்ளாகியது. யாதும் ஊரே யாவரும் கேளிர்; எல்லோரும் ஓர்குலம், ஓர் இனம், ஓர் நிலை, ஓர்நிறை என்ற ஒற்றுமைக் கீதத்தை இசைக்க வேண்டியவர்கள் இனத்தின் பெயரால் நாடு இரண்டாகத் துண்டாடப்பட வழிதேடிக்கொண்டார்கள். இரவுக்குப் பின் பகல், புயலுக்குப் பின் அமைதி என்றாற்போல் இதற்குப் பிறகுதான் இந்தியாவில் அமைதி நிலவி இன்றைய இந்தியா உருவாக முனைந்தது. அதனை உருவாக்கிட அரசியலமைப்புச் சட்டமன்றம் கூடியது. ஒரு நவீன சுதந்திர இந்தியாவை உருவாக்கவும், அதற்குத் தகுந்த அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவும் அது தீவிரமாக முனைந்தது. அந்த முயற்சியின் திருவினையே இன்றைய இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமாகும்.

## அரசியலமைப்புச் சட்டமும், சட்டப் பொருள் விளக்க விதிகளும்

அரசியலமைப்புச் சட்டமும் ஒரு சட்டத்தின் தன்மையைக் கொண்டிருப்பதால் சட்டப் பொருள் விதிகள் அனைத்தும் அதற்கும் பொருந்தும். அரசியலமைப்புச் சட்ட நிர்மானிகளின் நோக்கத்தைக் கண்டறிவதே அரசியலமைப்புச் சட்டத்தினை விளக்குவதன் அடிப்படை கோட்பாடாகும். அவர்கள் நோக்கத்தைச் செயல்படுத்துவதாகவே சட்டப் பொருள் விளக்கம் அமைய வேண்டும். மேலும் அதில் பயில்கின்ற மொழி நடையை ஒட்டியே அரசியலமைப்புச் சட்டம் விளக்கப்பட வேண்டும்.

## பிற அரசியலமைப்புச் சட்டங்களை ஒப்பு நோக்கி அறிதல் (Anologistic provisions of other constitutions)

ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், அந் நாட்டின் உயிரோட்டமாகக் கருதப்பட்டாலும் பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படுகிற ஒற்றுமைகளை ஒப்பு நோக்கி ஆராய நீதிமன்றங்கள் தயங்குவதில்லை. நமது தலைமை நீதிமன்றங்கூட நமது அரசிலமைப்புச் சட்டத்தை விளக்கிடும்போது அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தினைப் பெரும்பாலும் சார்ந்துள்ளது. அது வழங்கிய பல்வேறுபட்ட தீர்ப்புகளிலும் இது விரவி மலிந்து காணப்படுகிறது. இத்தகைய சார்பு நிலையைப்

பற்றிப் பலவகையான கருத்துகள் சொல்லப்படுகின்றன. ஒரே கருத்தை ஒரே அடிப்படையில் பல்வேறு நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களும் சொல்லியிருக்கலாம். ஒரு நாட்டின் சமுதாயத்தை ஒட்டியே அந் நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் உணரப்பட வேண்டும்; உணர்த்தப்பட வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு நாட்டின் கலையும் கலாச்சாரங்களும் வேறுபடுகின்றன. மக்களின் பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன. பகுத்தறியும் நோக்கில், பண்பாட்டுச் சிறப்பில் நாகரிக மேம்பாட்டில் பெரிய மாற்றங்கள் காணப்படுகின்றன. ஏன், அரசியலமைப்புக்கூட மாறித்தான் இருக்கிறது. இந்த நிலையில் பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களைச் சார்ந்து மேற்கோளாக்குவது அறிவு பூர்வமானதுதானா என்ற வினா சிந்தனைக்கு உரியது. ஆனால், மிக முக்கியமான தீர்ப்புகளின்போதெல்லாம், நமது நீதிமன்றம் பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களை ஒப்பு நோக்கியதோடு அல்லாமல் அதனையெல்லாம் சார்ந்தும் நின்றிருக்கிறது. கோலக்காத் கேசவானந்த பாரதி வழக்குகள் இதற்குச் சான்றாகும்.

### அரசியலமைப்புச் சட்டம் முழுவதும் கருதப்பட வேண்டும் (Constitution to be considered as a whole)

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பிரிவை உணர்ந்திட அது முழுமையும் மனதிற்கொண்டு கருதப்படவேண்டும். எந்த ஒரு பிரிவையும் பிரித்துத் தனிமைப்படுத்தக் கூடாது. இது மிகவும் போற்றப்படும் ஒரு பொன் விதியாகும். அப்போதுதான், அதன் முழுமையான நோக்கமும் முற்றிலும் விளங்கப்பெறும்; அதன் உண்மையான பணியும் செவ்வனே நிறைவேறும். அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு வார்த்தையும், சொல்லும் சொற்றொடருக்கும் உயிரோட்டம் அளிக்கவேண்டும். அதனால் தான் பாரதியின் வழக்கில் அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரைகூட அதன் ஒரு பகுதி என்றும் ஏதாவது ஒரு பிரிவு தெளிவற்றிருந்தால், பொருள் விலங்காமலிருந்தால், அதனைப் புரிந்துகொள்வதற்குப் பேருதவியாய் இருப்பது அது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

### அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அது பொருள் கொள்ளப்பட வேண்டும். (To be construed in the light of circumstances in which constitution was made)

அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய சந்தர்ப்பங்கள் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அது தோன்றுவதற்கு

முன்னிருந்த சூழல்கள், தோன்றுவதற்குக் காரணமான சூழ்நிலைகள், தோன்றிய பின் ஏற்பட்ட மாற்றங்கள், அதோடு அப்போதிருந்த மரபுவழிச் சட்டங்களின் தன்மை ஆகிய இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே அரசியலமைப்புச் சட்டம் பொருள் கொள்ளப்பட வேண்டும். இதனை மிகுதியும் அடிக்கடி வலியுறுத்துகிறது நீதித்துறை. ஆனால், இது எவ்வளவு தூரம் அறிவு பூர்வமானது என்பது சிந்தனையைத் தூண்டும் வினவாகும். அரசியலமைப்புச் சட்டம் வாழ்ந்துவருகின்ற, வளர்ந்து வருகின்ற பேருண்மை என்கின்றபோது அது தோன்றிய சூழல்களைக் கணக்கிடுவது, அதாவது அதன் சிறந்த காலத்தைக் கணிப்பது எங்ஙனம் ஏற்புடைத்து? அவ்வாறனால் அதன் வளரும் தன்மை பற்றி ஐயம் ஏற்படுகிறதா? இது போன்ற வினக்கள் எழாமலில்லை; அவை நியாயமானவையுங்கூட.

பலய்ன்டால் (Palaintal) என்ற பிரெஞ்சு நாட்டு அரசியலமைப்பு நிர்மாணி பிரெஞ்சு நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தைப் புகுத்தியபோது, "மனிதர்களால் இயற்றப்படுவது அரசியலமைப்புச் சட்டம்; மனிதன் குறைபாடு மிக்கவனே; எனவே எப்படிப்பட்ட தீர்க்கதரிசியாலும் எதிர்காலத்தில் ஏற்படும் எல்லா விளைவுகளையும் முன்கூட்டியே உணர்ந்திட இயலாது; அவனால் எதிர்பார்க்கவே முடியும்; ஏமாற்றங்கள் ஏற்பட்டால் எதிர் நோக்கத்தான் வேண்டும்; எனவே, எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு சாசனத்தை உருவாக்குவது என்பது மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது; அரசியலமைப்புச் சட்டமும் அப்படிப்பட்டதே" என்று குறிப்பிட்டார்.

மேலும் ஒரு நாடு வளர்ந்துவருகின்ற ஒன்று. அதன் முன்னேற்றம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உருப்பெற்று வருகிறது. எனவே வருவதை முன்கூட்டியே உணர்வது என்பது இயலாச் செயல். வருவதை எதிர்நோக்க வேண்டுமேயன்றி வருவது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே ஒரு நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் பொருள் கொள்ளப்பட வேண்டும். உண்மை நோக்கம் அறியப்பட வேண்டும். உற்ற பயனை எய்திட வேண்டும்.

## இந்திய அரசியலமைப்புச் சட்டப் பொருள் விளக்கம்-II (Interpretation of the Constitution-II)

வாழ்ந்துவரும், வளர்ந்துவரும் ஒரு சாசனம் என்ற உண்மையை உணர்ந்து அரசியலமைப்புச் சட்டம் சற்றுச் சுதந்திர

மாகவே கையாளப்பட வேண்டும். "சொற்கள் அனைத்தும் பளிங்கின் தூய்மையைக் கொண்டவையல்ல" என்பது நீதிச் செம்மல், பெருந்தகை Oliver அவர்கள் கருத்தாகும். எனவே, இலக்கண மரபு அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டம் அணுகப்படக் கூடாது. அத்தகைய முயற்சி வெறும் சோதனையாக முடியும். உண்மையான நோக்கத்தைத் தோற்கடிக்கவும் கூடும். வெறும் அர்த்தமற்ற நுட்பங்களைக் கையாளக் கூடாது. ஏனென்றால் அரசியலமைப்புச் சட்டம் எடுப்பார் கைப்பிள்ளை அன்று; அது ஒரு எழில் கொஞ்சும் யாழ்; இசைவாணர் இசைத்தால்தான் இனிய நாதம் எழும்; இல்லாவிட்டால் கண்ணீர் மிஞ்சும் அவலமாகவே முடியும். ஒரு நாட்டின் உரிமைக் கீதத்தை இசைத்துக் கொண்டிருக்கும் இசையின்பம் அது; விடுபட்ட சமுதாயத்தின் உயிர்மூச்சு அது; அதற்கு உயிர் உண்டு; உணர்வு உண்டு; நாட்டின் உயிர் அதன் உயிர்; மக்களின் உணர்வே அதன் உணர்வு. இதனை வெளிக் கொணரும் முயற்சியாகவே சட்ட விளக்கம் அமைய வேண்டும்.

ஒரு நாட்டோடு, அந் நாட்டு மக்களின் வாழ்வோடு தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளும் அரசியலமைப்புச் சட்டத்தின் இன்றியமையாமையை வெளிக் கொணரும் முயற்சியாய் நம் நாட்டின் உயர்நீதி மன்றங்களும், தலைமை நீதிமன்றமும் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளன.

**ஆட்சி மன்ற நிர்வாகப் பட்டியல் (The Legislative lists)**

ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கு நிர்வாக அமைப்பு சிறந்து விளங்க வேண்டும். நிர்வாக அமைப்பைச் செம்மைப்படுத்திச் செவ்வனே அதன் பணியைத் தொடர்ந்திடவே நிர்வாகப் பட்டியல்கள் மிகத் தெளிவாக ஒவ்வொரு அரசியலமைப்புச் சட்டத்திலும் இடம்பெறுகின்றன. நிர்வாகத்தைப் பலவாறு பிரித்து மத்திய அரசும் மற்ற மாநில அரசுகளும் நிர்வாகத்தை நடாத்துகின்றன. ஒவ்வொன்றின் நிர்வாக எல்லையையும் நன்கு வரையறுத்து மத்திய அரசின் பிரிவு என மீண்டும் மூன்றாகப் பாகுபடுத்திப் பட்டியல் தரப்பட்டுள்ளன. அதிகாரச் சுமை ஒரே இடத்தில் குவிந்திருந்தால் நல்ல நிர்வாகத்திற்கு அது வழி நல்காது. அதிகாரம் பரவலாக்கப்பட்டு, மத்தியில் கூட்டாட்சியும் மாநிலத்தில் சுயாட்சியும் ஆன ஒரு கூட்டாட்சி அமைப்பு (Federation) குடியாட்சியில் மிக இன்றியமையாத ஒன்றாகும். இதனைச் செயலாக்கவே அதிகாரம் பிரிக்கப்பட்டு முறைப்படியான நிர்வாகப் பட்டியல் தரப்பட்டுள்ளது. எனவே, நிர்வாகப் பட்டியலை விளக்கும்போது சுதந்திரமான போக்கு வேண்டும்.

தானே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அந்தக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கக் கூடாது. வார்த்தைகளை எந்த நுட்பமுமின்றி வார்த்தைகளாகவே அவற்றின் சாதாரண பொருள் விளங்கும்வண்ணமே கையாள வேண்டும். Schedule 7-ல் தரப்பட்டுள்ள நிர்வாகப் பட்டியல்களை விளக்கிடும்போது குறுகிய நோக்கு கூடாது. பரந்த நோக்குடன் அவற்றின் உண்மையான நோக்கமும் பயனும் விளங்கும்வண்ணம் விளக்கப் படவேண்டும். இதற்குத் தகுந்த உதாரணமாக **இந்திய அரசாங்கம் எதிர் (*Vs*) தில்லான்** என்ற வழக்கைக் கூறலாம்.

**உள்ளதாகக் கருதப்படுகின்ற அதிகாரம்** (Doctrine of Implied Power)

அதிகாரம் இல்லை எனும்போது ஒரு சட்டத்தின் மிக முக்கிய மான பிரிவு செயலற்றுப் போகலாம். அதனால் அச் சட்டம் முழுமையுமே நடைமுறைப்படுத்த இயலாமல் போகலாம். இவற் றைத் தவிர்த்திடவே உள்ளதாகக் கருதப்படல் என்ற கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இதனால் அதிகாரம் இல்லை என்றாலும்கூட உள்ளதாகவே கருதப்பட்டு, அந்தச் சட்டம் செய லாக்கப்படுகிறது. உதாரணமாக அமெரிக்காவின் அரசியலமைப் புச் சட்டம் மிகக் குறைந்த அதிகாரங்களையே சட்ட மன்றத்துக்கு வழங்கியுள்ளது. 17 பட்டியல்களே இதுபற்றிப் பேசுகின்றன. 1ஆம் பிரிவின் 16ஆம் உட்பிரிவு 8ஆம் சிறு பிரிவு கீழ்க்கண்ட அதிகாரங்களை மட்டும் நிறைவேற்றவே சட்டமன்றத்திற்குச் சட்ட மியற்ற அதிகாரம் அளித்துள்ளது. மற்ற அதிகாரங்களெல்லாம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சொல்லப்போனால் அமெரிக்காவின் அரசியலமைப்பில் மாநிலங்களே அதிக அதி காரம் பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. ஆனால், அமெரிக் கர்களின் தொழில் மேம்பாடும் அதன் பொருளாதார முன்னேற் றமும், விஞ்ஞான விந்தைகளும், மற்ற நாடுகள் எல்லாம் உலகின் தலைசிறந்த வல்லவராகவும் தங்கள் தேவைக்கு அதனை நாட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. எனவே, மத்தியில் ஒரு பலம் வாய்ந்த, சக்தி மிகுந்த அரசாங்கம் இன்றியமையாத ஒன்றாகி விட்டது. அமெரிக்காவின் தலைமை நீதிமன்றம், இதனை நன்கு உணர்ந்து அரசியலமைப்புச் சட்டச் சம்மந்தமாக எழுந்த தடை களையெல்லாம் நீக்கி மத்தியில் வலிமை வாய்ந்த தேசிய அமைப்பு ஏற்பட வழி நல்கியது. தேசிய வங்கிகள் செய்தித் தொடர்பு, சமுதாயப் பாதுகாப்பு நடவடிக்கை போன்றவை இப்போது மத்திய அரசின் பொறுப்பில் நடப்பதற்கு நீதிமன்றம் அனுமதிக் கிறது. ஆனால், அரசியலமைப்புச் சட்டம் அதற்கெல்லாம் வழி வகுக்கவில்லை. தலைமை நீதிமன்றமே அரசின் உதவிக்கு வந்தது.

இதனால் பெறப்படுவது யாதெனின் ஒரு விஷயம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் அதனை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டும்; அரசியலமைப்புச் சட்டம் இது பற்றி ஏதும் குறிப்பிடாமலிருக்கலாம்; அல்லது மௌனம் சாதிக்கலாம்; ஆனால், அதற்காக அரசாங்கம் செயலற்று நின்றுவிடக் கூடாது. இதுபோன்ற சமயங்களில் நீதிமன்றம் அரசின் உதவிக்கு விரையவேண்டும் என்பதே. அதிகாரம் இல்லை என்றாலும் அது பெற்றிருப்பதாகவே கருதிச் செயல்பட அரசாங்கத்திற்கு உறுதுணையாய் நீதிமன்றம் அமையும்.

### அதிகாரமும் அது சம்பந்தப்பட்ட சிறுசிறு துணை அதிகாரங்களும் (Incidental Powers)

சில அரசியலமைப்புச் சட்டங்கள் அதிகாரத்தை அளிப்பதோடு, அது சம்பந்தமாக எழுகின்ற சிறுசிறு துணை அதிகாரங்களையும் அரசிற்கு அளிக்கின்றன. இவ்வாறு வெளிப்படையாக அளிக்கப்படாவிட்டாலும்கூட, அத்தகைய அதிகாரங்களை அரசாங்கம் இயல்பாகவே கொண்டிருப்பதாகக் கொள்ள வேண்டும். இது ஒரு அரசின் ஆட்சி நிர்வாகத்தில் தவிர்க்க இயலா ஒன்றாகும். அமெரிக்காவில் இது "தேவையானது என்பதோடு தகுதியானது" என்றும், ஆஸ்திரேலியாவில், "முதல் அதிகாரத்தைக் கொண்டு செலுத்த தேவைப்படுகின்ற துணை அதிகாரங்கள்" என்றும் அழைக்கப்படுகிறது.

ஒரு அரசியலமைப்புச் சட்டம் அல்லது பிற சட்டங்கள் கையாளப்படும்போது, நன்மை தரவல்லதாயும், மிகவும் பயன் நல்கத் தக்கதாயும் முடிந்த அளவு அதன் அதிகார வரையறை பொதுபடுத்தப்பட வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையே இதற்குக் காரணம். அரசியல் அமைப்புச் சட்டம் மௌனம் சாதிக்கிறது என்பதற்காக அது அதிகாரத்தை முற்றிலும் மறுக்கிறது என்பது அர்த்தமன்று. அதற்கு மாறாக அதிகாரம் அளிப்பதாகவே கொள்ளவேண்டும். அது அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பொருந்தாமல் இருக்கலாம்; அல்லது முரண்பாடாக அமையலாம். அப்போது வேண்டுமானால் அதிகாரம் அளிக்கப்படவில்லை என்று கருத நியாயம் உண்டு. மாநிலங்களுக்கிடையில் வாணிபம் நடத்திட அதிகாரம் உண்டென்றால் அத்தகைய வாணிபம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களை கட்டுப்படுத்தவும் அதிகாரம் உண்டு என்றே பொருளாகும். தொழில் தகராறுகளை நீக்க அதிகாரம் உண்டென்றால் வேலை நிறுத்தத்தைத் தடைசெய்யச் சட்டமியற்றவும் அதிகாரமும் அளிக்கிறது என்றே பொருள்.

**தடைசெய்யா நிலையில் தடை செய்யப்பட்டதாகக் கருதல்**

அதிகாரம் இல்லை என்றாலும் அதிகாரம் உண்டென்று கருதுதல் எனும் விதிக்கு நேர்மாறானது இந்த விதி. ஒன்று தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தால், அதனால் சொல்லப்பட மாட்டாத ஒன்றை மறுப்பதாகப் பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இந்த விதி எழுந்ததாகும். ஆனால், இது இந்தியாவிற்கோ கனடாவிற்கோ பொருந்தாது. ஏனென்றால் இங்குச் செய்யக் கூடியவை செய்ய வேண்டாதவை இரண்டு பற்றியும் மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. எனவே ஒன்று "உண்டு' என்று சொன்னால் அது மற்றொன்றை 'இல்லை' என மறுப்பதாகக் கருதிச் செயல்பட வேண்டிய அவசியம் இந் நாடுகளில் ஏற்படவில்லை. 'உண்டு' என்கிறபோது 'இல்லை' என்பது பற்றியும் இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**ஆக்ரமித்துக் கொள்ளல் விதி (Doctrine of Occiyied Field)**

இந்த விதிப்படி மத்திய அரசு ஏதாவது ஒன்று பற்றிச் சட்டமியற்றினால் அது அதனால் எடுத்துக் கொள்ளப்பட்டதாகப் பொருள்படும். எனவே, மாநில அரசாங்கம் அதில் தலையிட இயலாது. எப்போது ஒரு சட்டம் ஒன்றில் தலையிட முனைகிறதோ, அப்போதே அது அதன் சொந்தமாகிவிடுகிறது. எனவே, அதே நோக்கோடு மற்றொரு சட்டம் தேவையற்றதாகி விடுகிறது என்பதோடு, தலையிடவும் முடியாமல் போய்விடுகிறது என்பார் ஐசக்ஸ் என்ற நீதிச் செம்மல். ஆனால், இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 254-வது பிரிவுக்குப் பொருந்தும். 254ஆம் பிரிவு மத்திய அரசு, மாநில அரசு இரண்டிற்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளில் சட்டமியற்ற அதிகாரம் தருகிறது. இரண்டிற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும்போது ஒன்றுபற்றி மத்திய அரசு சட்டமியற்றினால் அதே போன்று மாநில அரசு சட்டமியற்றுவதை அது தடை செய்யாது.

**பெரும்பான்மை விதி (Doctrine of Pith and Substance)**

ஒரு சட்டம் மாநிலத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டிருந்தால், அது தற்செயலாக மத்திய அரசின் அதிகார வரம்பையும் சிறிதே பாதிக்கிறது என்றாலும்கூட அத்தகைய சட்டம் தவறானது என்று சொல்லமுடியாது. ஏனென்றால் பொதுவாக நோக்குமிடத்து அச் சட்டம் பெரும்பான்மையில் மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டேயிருக்கிறது. மிகக் குறைந்த அளவில்தான் அதுவும் தற்செயலாக்கத்தின் மத்திய அரசின் அதிகார வரம்பைப் பாதிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அச் சட்டத்தினை தவறு என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால் அது முறையானதேயாகும்.

**சட்டத்தின் பொய்மைத் தோற்றம்** (Doctrine of Colourable Legislation)

சில சமயம் ஒரு சட்டம் தோற்றத்தில் தன் அதிகார வரம்பிற்கு உட்பட்டிருக்கலாம். அதே நேரத்தில் அத் தோற்றம் வெறும் பொய்ம்மையாக இருக்கலாம். ஏனென்றால் உண்மையில் அது தன் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட நிலையில் செயல்படும். இது தன் வரம்பை மீறிய செயலாகும். இதனை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஒன்றைப் பற்றிச் சட்டமியற்ற அதிகாரம் இல்லாதபோது, வெறும் தோற்றத்தினைக் கருவியாக்கி அதிகாரம் பெற்றிட இயலாது. இந்தப் பொய்மை என்னும் திரையை விலக்கி உண்மையைக் கண்டறிய வேண்டும். ஏனென்றால் ஒன்றை நேரடியாகச் செய்ய முடியாது என்றால் மறைமுகமாக மட்டும் எப்படிச் செய்ய முடியும்? எனவே, சட்டத்தில் ஏற்படும் இத்தகைய பொய்மைத் தோற்றத்தை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை.

பகுதி இரண்டு

# 1. சட்டமியற்றுவதன் அடிப்படைக் கோட்பாடுகள் (அரசியல் கோட்பாடு)

சட்டப் பொருள் விளக்கத்தின் இரண்டாவது பிரிவு சட்ட மியற்றுவதன் கோட்பாடுகள் பற்றியதாகும். சட்டத்தின் கோட்பாடுகள் பற்றி முதன்முதலில் பேசியவர் ஜெர்மிபெந்தாம் (Jermy Bentham) எனும் சட்ட வல்லுநர் ஆவார். பதினெட்டாம் நூற்றுண்டில் சட்டவானில் மின்னிய இந்த அறிவுச் சுடர், ஒரு தத்துவக் கடல்; இங்கிலாந்து ஈன்றெடுத்த சட்டத் தத்துவ மேதை களின் குன்று ஒளிவிளக்கு. இவர் தோன்றியபோது மிகவும் பிரபலம் பெற்றிருந்தவர் பிளாக்ஸ்டோன் என்னும் சட்ட வல்லுநர். ஒரு மாணவராகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினுள் நுழைந்த பெந்தாம் பிளாக்ஸ்டோனின் சட்டவிளக்கங்களைச் செவி மடுத்தார்; உள்ளம் வெதும்பினர். உடனே ஓர் உறுதியும் உருப்பெற்றது. தன் வாழ்வையே அர்ப்பணித்தேனும் பிளாக்ஸ் டோனின் முட்டாள்தனத்தைத் தகர்த்திட நினைத்தார். பிளாக்ஸ் டோன் கருத்துப்படி இங்கிலாந்தின் மரபுவழிச் சட்டம் மனித அறிவுப் பெட்டகத்தில் ஒரு நன்முத்து. இந்தச் சட்ட அமைப்பை மிஞ்சிட உலகில் வேறு எந்த சட்ட அமைப்பும் இல்லை என்று திண்ணமாக நம்பிச் செயல்பட்டார்.

ஆனல், பெந்தாமுக்கு இது உடன்பாடாக இல்லை. அவர் மாருக எண்ணம் கொண்டிருந்தார். இங்கிலாந்தின் மரபுவழிச் சட்டம் ஒழுங்கற்றது ; கோட்பாடற்றது; சிக்கல்கள் நிறைந்தது. வருங்காலச் சந்ததியர் பார்வைக்கு ஒரு பொருட்காட்சிச் சாலை யில் வைக்கப்பட வேண்டியது என்று முழங்கினர்; புதிய எழுச் சியைத் தோற்றுவித்தார். இயற்கை இவருக்குப்பரந்த நுட்பத்தை வழங்கியிருந்தது. எதையும் நுணுகி ஆராயும் நுண்மாண் நுழை புலம் மிகுந்தவராய் இருந்தார். பகுத்தறியும் ஆற்றலும், பரவச மூட்டும் மொழிநடையும் இவருக்கு இயல்பாய் அமைந்திருந்தன.

எனவே, குருவை மிஞ்சிய சீடனாய் பிளாக்ஸ்டோனின் பெரும் புகழையும் மறைத்துத் தானே விஞ்சி நின்றார். அந்தச் சமயத்தில் இங்கிலாந்தில் புதிய புதிய எழுச்சிகள் தோன்றின. இங்கிலாந்து ஏகாதிபத்தியத்தைக் கைக்கொண்டு பெரும் வல்லரசாக உரு வெடுத்துவந்தது. கல்வியும் கலையும் ஒன்றோடொன்று போட்டி யிட்டன; வாணிபம் கோடி கோடியாய்க் குவிந்தது. செல்வச் செருக்கில் குபேரபுரியாகத் திகழ்ந்தது.

இங்கிலாந்தை ஆட்டுவித்த சிந்தனைப் பெருவெள்ளத்துக்கு தலைமையாய் நின்றவர் பெந்தாம். திரு விளக்கு ஒன்று பெரு விளக்கு ஆயிரம் பிறப்பதற்கு வழி திறக்கும். பெந்தாம் என்னும் அறிவுச் சுடர் ஜேம்ஸ் ஸ்பார்ட்மில், ஜான்ஸ் பார்ட்மில், ஜான் ஆஸ்டின் போன்ற பல அறிவுச் சுடர்கள் தோன்றிட ஏதுவா யிற்று. அதிலும் ஜான் ஆஸ்டின், பெந்தாமை அடியொற்றித் தனக் குப் பெரும் புகழை ஈட்டித் தந்த 'சட்டம் சட்டத்திற்காகவே' (Imperative Theory) என்ற கோட்பாட்டினைச் சட்டத் தத்துவத் தில் நிறுவினார்.

பெந்தாமின் கவலையெல்லாம் எவ்வாறு முறையான சட்ட முறையைத் தோற்றுவிப்பது என்பதே. இதற்காகவே அவர் சட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றிற்கு சட்டத்தின் கோட் பாடு என்றும் மற்றொன்றிற்கு சட்ட விஞ்ஞானம் என்றும் பெயர் சூட்டினார். சட்ட விஞ்ஞானத்தைத் தம் மாணவர் ஜான் ஆஸ்டி னிடம் ஒப்படைத்தார். சட்டக் கோட்பாட்டைத் தாமே ஆராய முற்பட்டு முதல் கேள்வியாக ஏன் மனிதன் வாழ ஆசைப்படு கிறான் என்ற வினாவை எழுப்பினார். மனிதன் அனுபவப்பட விரும்புகிறான். அனுபவத்தின்மூலம் மகிழ்ச்சியாக இருக்க விழைகிறான்; இந்த விழைவே மனிதன் வாழ விரும்புவதன் அடிப்படையாகும் என்ற ஒரு சாதாரண விடையை இந்த வினா விற்குப் பதிலாக அளித்தார். இந்த விடையே அவர் கண்டறிந்த பயன் தெரிதல் (utility) என்ற தத்துவத்திற்கு அடிப்படை வித் தாகும். இந்த அடிப்படையில்தான் ஒரு அரசின் நோக்கமும், நீதித் துறையின் நோக்கமும் ஒன்றாகவே இருக்கவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்கும் பெருநோக்கில் இரண்டிற்கும் மாற்றம் இருத்தல் இயலாது. இந்த விளக்கத்தின் அடிப்படை யில் பிறந்ததுதான் 'அரசியல் கோட்பாடு' என்ற அவரது தத்துவ நூலாகும்.

# 2. மதிநுட்ப உயர்வுநிலை
## (Hedonist Utilitarianism)

பெந்தாம் ஒரு மதவாதியல்லர். அவர் ஒரு தீவிரவாதி; திட மான போக்கும் தீர்க்கமான நோக்கும் அவர் உடைமைகள். காரண காரியங்களைக் கண்டறிவதில்தான் அவர் சிந்தனை விரிந்தது. வெறும் நம்பிக்கை அடிப்படையில் அவர் செயல் படத் தயாராயில்லை. எடுத்துக்கொண்ட ஒவ்வொன்றையும் அறிவின் ஆராய்ச்சிக்கு உட்படுத்தினர். காரியம் என்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இருக்க முடியாது என்று வாதிட் டார். எனவே 'இயற்கைச் சட்டம்' எனும் கோட்பாட்டினை மிகவும் சாடினர். இயற்கைச் சட்டம் பற்றிய சிந்தனையின் வளர்ச்சி அவர் காலத்தில் பத்தாண்டுக் காலத்தை எட்டி யிருந்தது. இயற்கைச் சட்டத்தின் அடிப்படையில் எழுந்த சிந்தனை அவரின் முதற் கட்டத் தாக்குதலுக்கு ஆளானது. இரண்டாவதாக, இயற்கைச் சட்டத்தின் ஒரு விதியான மனச் சான்றின் அடிப்படையில் ஒரு சமூகம் முழுமைக்கும் ஏற் புடைத்தான, ஒரு சட்டக் கோட்பாட்டைக் கண்டறிதல் என்ற விதியை தன் ஒப்பற்ற தணிக்கைக்கு உள்ளாக்கினர். முடிவில் அது ஏற்புடைத்தே என முடிவிற்கு வந்தார். மூன்றாவதாக, பண்பாட்டுக் கோட்பாட்டின் ஆதிக்கமும் செல்வாக்கும் சிந்தனை யாளர்களிடத்தில் பரவிக் கிடப்பதைக் கண்டார். நான்காவ தாக, (Hedonistic calculus of utility) ஹிடோனின் இன்ப துன்ப விதிகளின் அடிப்படையில் எழுந்த பண்பாட்டு விதிகூடச் சட்டச் சீர்திருத்தத்திற்கு மிகவும் துணைபுரிவதாகப் **பெக்காரே** (Beccarie) என்பவரால் பெரிதுபடுத்தப்பட்டது.

பண்பாட்டு விதி அறஇயலில் இழையோடிக்கொண்டிருப் பதைத் தத்துவ ஞானம் (Philosophy) எதிரொலித்தாலும், 18ஆம் நூற்றாண்டில்தான் அதுதனிக் கோட்பாடாக (ஹூம்-Hume) என்னும் தத்துவ விற்பன்னரால் உருவாக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, உன்னத நிலையை எட்டியது.

## பதினெட்டாம் நூற்றாண்டில் நிலவிய சமூக, அரசியல் நிலைகள்

பிளாக்ஸ்டோன் (Black stone) பொருத்தவரை இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டம், மிகவும் அறிவு பூர்வமான, ஆக்க பூர்வமான, ஒரு நிறைவான முடிவை எட்டியது என்றும், அதன் உண்மையான தகுதியை விவரிக்க இயலாது என்றும் கருதினர். பாலே (Palley) என்பவர் 1799-ல் நிலவிய பிரிவுகளின் நீதி ஆயத்தினை ஆய்ந்து தன் ஆராய்ச்சியின் முடிவினை ஒரு கேள்விக் குறியாக்கினர். இத்தகைய நீதி ஆயத்தின் கையில் இந்த நாட்டின் (இங்கிலாந்து) நலம் பாதுகாப்பாக இல்லாவிட்டால் யார் அந்த நலனைக் காக்க வல்லவர்கள்? என்பது அவர் வினா. மெக்காலே பிரபு, இத்தகைய அரசியலமைப்புச் சட்டத்தால்தான் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கம் நலமான அடிப்படையில் வளமான வாழ்வை எட்டியிருக்கிறது என்றும் அதுவும் கடந்த 13 ஆண்டுகளில் அதன் முன்னேற்றம் பிரமிக்கத்தக்கது எனவும் மொழிந்தார். ஆனல், பெந்தாமிற்கு அதே இங்கிலாந்துதான் ஒரு நாற்றமெடுத்த நோயாளியாய் காட்சி அளித்தது. சீர்திருத்தம் எனும் மருந்து உடனடித் தேவையாக இருந்தது. அந்த முயற்சியில் விரைந்து செயல்பட்டார். விளைவு? இங்கிலாந்தின் தலைசிறந்த சட்டச் சீர்திருத்தச் செம்மலாக உருவானர்.

சட்டக் கோட்பாட்டிற்கு அடிப்படையானது பொதுநலனே. (Public good) பொதுநலனே சட்டமியற்றுபவர்களின் சிந்தனையாக இருக்கவேண்டும். இந்தச் சிந்தனையில்தான் சட்டம் உருவாக வேண்டும். அத்தகைய சட்டமே சீரிய நோக்கைக் கொண்டதாய்ப் பொதுநலத்திற்கு ஏற்றம் அளிக்கும் என முழங்கினர் பெந்தாம். சட்டச் சீர்திருத்தக் கோட்பாட்டிற்கு விடுத்த முதல் முழக்கம் இதுவே. மேலும் சட்டம் இயற்றுவது பொதுநலன் அடிப்படையில் என்றல் அந்தப் பொதுநலன் என்பது என்ன? பொதுநலன் என்பது எல்லோருக்கும் பரந்துபட்ட நன்மை (Maximum good of the maximum number) என்பதில் அடங்கியிருக்கக் கண்டார். எல்லோரும் இன்புற்றிருக்கவே ஒரு அரசாங்கம் முயல்கிறது. அந்த முயற்சியின் அடிப்படையில்தான் பலருக்கும் நன்மை பகிர்ந்தளிக்கப்படுகின்றது. எனவே, 'பலருக்கும் பரந்துபட்ட நன்மை' அதன் சட்ட நோக்கமாக அமையத்தான் வேண்டும் என வரையறுத்த பெந்தாம் பயன்பாடு (utility) என்பதைப் பின்னர் விளக்கிட முனைந்தார். பயன்பாடு என்பது பொது நலனில் அடங்கியுள்ளது. பொதுநலத்திற்குப் பயன்படும் ஒன்றுதான் பயன்பாட்டைக் கொண்டதாக இருக்கும் என்பது அவர் முடிவு.

மேற்கொண்டு அவர் கோட்பாட்டினை ஆராயப்போகும் முன்னல் பெந்தாமின் இந்தக் கோட்பாட்டை நாம் தணிக்கை செய்ய வேண்டியதாய் உள்ளது.

1. பலருக்கும் பரந்துபட்ட மகிழ்ச்சிக் கோட்பாட்டினை விளக்கப் போந்த பெந்தாம், ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய சொந்த நலனுக்காக அல்லது மகிழ்ச்சிக்காகப் பாடுபடுகிறான் என்றும் எனவே சட்டம் என்பது அத்தகைய தனிமனிதர்கள் பலர் சேர்ந்த சமுதாய மகிழ்ச்சிக்காக பாடுபடுகிறது என்றும் தீர்மானித்துக்கொண்டார். ஆனல், இதனை ஒத்துக்கொள்வதில் பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கருத்துக் கொந்தளிப்புகள் எழுகின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் தனது சொந்த மகிழ்ச்சிக்காகவே பாடுபடுவதாகக் கொண்டாலும் ஒரு பொது நன்மை எவ்வாறு எல்லோருக்கும் ஏற்புடைத்தாகக் கொள்ள முடியும்? ஒரு தனிமனிதனின் மகிழ்ச்சி எல்லோருக்கும் ஏற்புடைத்தான ஒரு பொது மகிழ்ச்சியில் சங்கமம் ஆகிவிடுவதில்லை. எனவே, இது சற்று முரண்பட்டதாகவே உள்ளது.

2. அவருடைய ஹிடோனிஸம், இன்பமே வாழ்வின் முடிவு, அதனைத் தேடி நாடிச்செல்லும் முயற்சியே அதனைக் கண்டறிவதில் வெற்றி நல்கும் என்பதாகும். இதனை ஏற்றுக்கொள்வதில்கூட மீண்டும் முரண்பாடு தலைதூக்கத்தான் செய்கிறது. ஏனென்றல் இன்பமே வாழ்வின் முடிந்த முடிவன்று. அது வேண்டுமானல் வேறொரு முடிவிற்கு ஒரு வழியாக இருக்கலாம். ஏன், உறுதுணையாகக்கூட அமையலாம். ஆனல், அதுவே முடிவாக இருக்க முடியாது. இன்பம் என்பது மனநிலை சார்ந்த ஒன்று. ஒருவர் வேதனை இன்னொருவர் இன்பமாக இருக்கலாம். கோடை வெய்யில் குளிர்தரு இன்பம் பயக்கிறது. அதே குளிர்தரு வாடைக் காற்று நடுக்கத்தில் துன்பம் தருவதாய் முடிகிறது. எனவே, இன்பம் என்பதை ஒரு முடிந்த முடிவாகக் கொண்டால் இந்த வேறுபாடுகட்குக் காரணம் காட்ட இயலாமல் போய்விடும். இன்பம் முற்றிலும் உளநிலைக் கோட்பாடு. பெந்தாம் கொண்டது போல் அது அவ்வளவு எளிதான கோட்பாடு அன்று. இந்த உண்மையைப் பின்வரும் உதாரணம் நன்கு விளக்குகிறது. ஒரு சிந்தனையாளரிடம் உங்களின் பெரிய மகிழ்ச்சி என்ன? எனக் கேட்கப்பட்டது. அவர் பதில் உண்மையைக் கண்டறிவது என்பதாகும். அங்ஙனம் உண்மையைக் கண்டறிந்த பின்னல் என்ன செய்வீர்கள்? என மீண்டும் கேட்கப்பட்டபோது, ஏன் அதைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மீண்டும் அதனைக் கண்டறிவதில்

முனைவேன்' எனப் பதிலளித்தார். எப்படி இருக்கிறது இவர் மகிழ்ச்சி? இதுதான் இன்பத்தின் இரகசியமும் கூட.

3. இன்பந்தான் சமுதாயத்தின் நோக்கம் என்றால் காலத்தின் மனச்சாட்சிக்கு நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாகிறோம். ஏனென்றால் காலத்தின் போக்கே சமுதாய மாற்றங்களை நிர்ணயிக்கும் ஒன்றாகும்.

4. இன்ப துன்பங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லும் எந்த வரையறையும் இல்லை. இன்பமோ துன்பமோ ஒருவரின் மனநிலையைப் பொறுத்தது. எந்நாளும் இன்பமே, துன்பமில்லை என்றவர்களும்கூட இந்த மண்ணிலிருந்தபோதுதான் சொல்லியிருக்கிறார்கள். 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' என்ற முரண்பட்ட வேதாந்திகள்கூட இந்த மண்ணில்தான் வாழ்ந்திருக்கிறார்கள். ஒருவருக்கு இன்பமாகத் தெரியும் வாழ்வே இன்னொருவருக்கு வெறுமையாகப்படுகிறது. ஒருவருக்கு மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் இனிமை தருகின்றன. இன்னொருவருக்குக் கோடையில் இளைப்பாறக் குளிர் தருவும், தருநிழலும், நிழற் கனிந்த கனியும் ஓடையில் ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரும் இனிமை பயக்கின்றன. ஆனால், பெற்றோருக்கு மழலையே குழலினும் யாழினும் இன்பம் தருகிறது. குழலும் யாழும் இசைநயப்போர்க்கு இன்பம் பயக்கின்றன. 'அம்மா' என வரும் மழலையின் குரல்கேட்டு அமுது படைக்க விரையும் தாயின் மடி அம் மழலைக்கு இன்பம் தருகிறது. ஆனால், அநுபூதிச் செல்வர்கட்கோ இனித்திடுவது இறைவன் திருவடி நிழல். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? இந்த அடிப்படையில் இன்ப துன்பத்தின் வரையறை என்ன? இன்பமோ துன்பமோ மனநிலை சார்ந்த ஒன்று. மனிதனுக்கு மனிதன் அது வேறுபடுகிறது. இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமும் இணைந்து நிற்கிறது. எனவே இன்பமோ துன்பமோ ஒரு முடிந்த முடிவன்று; நிலையானதுமன்று; ஒரு நாணயத்தின் இருமருங்கும் போல் இன்ப துன்பங்கள் வாழ்வில் இணைபிரியாதவை. அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில் இன்பத்தில் திளைத்தவர்கள் இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில் எல்லாம் இழந்து துன்ப சாகரத்தில் மூழ்கிடக் காண்கின்றோம். இது இயற்கை. இரவும் பகலும் போல மாறிமாறித் தொடர்வது. இங்ஙனம் நிலையற்ற ஒன்று எங்ஙனம் வாழ்வின் முடிந்த முடிவாக இருக்கமுடியும்? அதனுடைய முடிவு 'பொன்மான்' பின்சென்ற மாயையாகவே முடியும். ஏனென்றால் அது ஒரு கானல் நீர்; கற்பனை மோகம்.

5. இன்பதுன்பங்கள் அறிந்து கணக்குப் பார்க்கக் கூடியன அல்ல. இத்தகைய கணிதம் அங்குப் பயன்படாது. இது வெறும் முயற்சியே. மனநிலை சார்ந்த ஒன்றை எங்ஙனம் அளந்திடுவது? அவ்வாறு முடியுமானல் 'எந்நாளும் இன்பமே, துன்பமில்லை' என்றவரின் அளவுகோல் என்ன? எங்கும் துன்ப மயம்; வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம்; என்றவரின் அளவுகோல் என்ன? இன்ப துன்பம் ஒரு கூட்டல் கழித்தல் கணிதம் என்றால் இந்தக் கேள்விகட்குப் பதில் கிட்டத்தானே வேண்டும்! ஆனால், ஏன் மௌனம் சாதிக்க வேண்டியுள்ளது. எனவே இன்பதுன்பம் என்பது இலாப நஷ்டக் கணிதமல்ல. அது மனநிலை சார்ந்த ஒன்று. இரவும் பகலும்போல, நகமும் சதையும் போல, மலரும் முள்ளும் போல, ஒரு நாணயத்தின் இரு மருங்கும்போல இணை பிரியாதவை. ஒன்று என்பதை மீண்டும் நினைவுகூர்தல் வேண்டும்.

6. இன்பமே முடிந்த முடிவு எனக் கொள்ளும்போது, பொது விதிகளை நிர்ணயிக்க இயலாது. ஏனென்றால் பொது மகிழ்ச்சி தனிப்பட்டவரின் மகிழ்ச்சியாக அமைய முடியாது. ஒருவருக்கு இன்பம் அளிப்பது மற்றொருவருக்குத் துன்பம் பயக்கலாம். எல்லோருக்கும் ஒத்த ஒரே துன்பமும் ஒரே இன்பமும் என்றும் முடியக் கூடியவை அல்ல.

# 3. எளிமைக் கோட்பாடு
## (Ascetic Principle)

தான் வகுத்த 'பலருக்கும் பரந்துபட்ட நன்மை' என்ற பயன்பாட்டுக் கோட்பாட்டை நிலைநிறுத்தச் சற்று வேடிக்கையான வழியைக் கையாண்டார். உலகத்தில் அவர் காலத்தில் நிலவிய சிந்தனைக் கோப்புகள் எல்லாவற்றையும் நுணுகி ஆராய்ந்தார். தன் நுண்மாண்நுழைபுலச் செவ்வியால் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட எல்லாவகையான சிந்தனைக் கோப்புகளையும் தகர்த்தெறிந்தார். அவற்றின் இடிபாடுகளுக்கிடையில் தன் பயன்பாட்டுக் கோட்பாட்டின் உயர்வை நிலைநாட்டினார். அவரால் அங்ஙனம் தணிக்கை செய்யப்பட்டு அர்த்தமற்றது எனத் தகர்த்தெரியப்பட்ட முதற் கோட்பாடு தத்துவ ஞானிகளாலும், சமயவாதிகளாலும் பெரிதும் போற்றப்பட்ட எளிமைக் கோட்பாடு என்பதாகும்.

சமயவாதிகளால் பேணப்பட்டு, தத்துவ ஞானிகளால் போற்றப்பட்டது எளிமைக் கோட்பாடு. எளிமையும் தூய்மையும் இறைவன் இன்னருளைப் பெற்றிட வழி நல்கும் என்பது மதவாதிகளின் நம்பிக்கை. எளிமையின்றி மனநிலை ஏற்றம் எங்ஙனம்? என்பது தத்துவ ஞானிகளின் ஆராய்ச்சி. ஆனால், பெந்தாம் இதனை மிகக் கடுமையாகச் சாடினார். மதவாதிகளின் போதனை மக்களை ஏமாற்றித் தாங்கள் ஏற்றம் பெற்றிடத்தான் எளிய வாழ்வு என்ற போர்வையில் தங்களின் சொந்த நலனை உயர்த்திக் கொண்டார்கள். சாதாரண மக்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக்கொள்ள இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அங்ஙனம் வேறுபடுத்திக்கொண்டால் மக்களின் மேலான அபிமானத்தைப் பெற இயலும் என்பதை உணர்ந்து கொண்டார்கள். எனவே, மற்றவர்களால் செய்ய இயலாதது ஏதாவது ஒன்றை கைக்கொண்டால்தான், மக்களின் உயர்ந்த எண்ணத்தைப் பெற்றுப் சமுதாயத்தில் தனிமதிப்பும் மரியாதையும் மாண்பும் பெற்றிட இயலும் என்பதை நன்கு அறிந்து இந்தக் கோட்பாட்டைக் கையாண்டார்கள். நுணுகி ஆராய்ந்தால், மக்களை ஏமாற்றிட அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு

வழியாகும். ஏனென்றால் அப்படியொரு உயர்ந்த நிலையை எளிமை என்ற போர்வையினால் சமுதாயத்தில் அடைந்த பிறகு அவர்கள் எது சொன்னாலும் மக்கள் நம்பத் தயாராய் இருந்தனர். எனவே, அத்தகைய மதவாதிகள் இன்பத்தை நாடுவது என்பது பெரும்பாவம், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக நோக்க வேண்டும் எனப்போதிக்கத் தலைப்பட்டார்கள். இவர்கள் போதனை வாழ்வின் உயர்ந்த லட்சியங்களின்பாற் பட்டவை அல்ல; தங்களை உயர்த்திக்கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டவையே. எனவே, இவர்களின் போதனை சிறந்த சட்டக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைய இயலாது.

இரண்டாவது, தத்துவ ஞானிகளின் அறைகூவல் ஆகும். "வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம்; ஏனிந்த அவலம் அவனியில்?" என்பது அவர்களின் வேதாந்தம். இத்தகைய வேதாந்தம் வெறும் வேதனையைத்தான் போதிக்கின்றதே அன்றி வாழ்வின் இலட்சியங்களை எட்டிடச் செய்யும் சாதனைபற்றியன்று. இது ஒருவிதமான சோர்வையும் சோகத்தையும் தரும். உற்சாகமான உணர்ச்சிப் பிரவாகங்களையோ வீறும் எழுச்சியும் கொண்டு வருவதை எதிர்கொள்ளும் துணிவையோ தருவதில்லை. உற்சாக மிழந்து உணர்வு குன்றி உறங்கிக் கிடப்பதன்று வாழ்வு. அது ஆற்றலில் வீறுமிக்க எழுச்சியில் உணர்ச்சி மோகத்தில் அடங்கியுள்ளது. வாழ்வின் நாட்டமே இன்பத்தை நாடி அலைவதில்தான் உள்ளது. இன்பம் வேண்டுமானால் வேறுபடலாம். ஆனால், இன்ப நாட்டம் எல்லாருக்கும் பொதுவானதே. குழலும் யாழும் இசை நயப்போர்க்கு இன்பம்; ஆனால், மழலை மொழி இந்த குழலினும் யாழினும் இன்பம் பெற்றோருக்கு. இன்பம் மனித இயல்புக்கேற்ப மாறுபடலாம். ஆனால், இன்ப நாட்டம் வாழ்வின் உயிரோட்டம். ஆனால் இதனை மறுத்து அவலக்குரல் எழுப்பும் எளிமைவாதிகள் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் தத்துவ ஞானிகளின் சித்தாந்தத்தை எங்ஙனம் சட்டக் கோட்பாடாக ஏற்றுக்கொள்ள இயலும்? இது பெந்தாமின் கேள்விக் கணை.

பிறந்ததன் நோக்கம் வாழ்வு; வாழ்வு என்பது தன் விருப்பம் போல அமைத்துக்கொள்வது. இத்தகைய விருப்பத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மதவாதிகளின் போதனையையோ, தத்துவ ஞானிகளின் சித்தாந்தத்தையோ பயன்பாட்டுக் கொள்கையாகச் சட்டக் கோட்பாட்டில் ஏற்றுக்கொள்ள இயலாது. நுணுகி ஆராய்ந்தால் மனிதன் தன் இயல்பை மாற்றிக் கொள்வதாக இல்லை. நாகரிகக் காலத்தின் ஆரம்பத்திலிருந்தே அத்தகைய இயல்புகள் அவனிடம் மண்டியிருக்கின்றன. மதமும் தத்துவமும் அவற்றை மாற்றிடப் பெரிதும் முயன்றன. முயற்சி

வெல்வதாய் இல்லை. ஏனென்றால் அத்தகைய இயல்புகள் பிறப்பியல்புகளாகவே என்றும் தொடர்கின்றன. இன்ப வேட்கை என்பது அத்தகைய இயல்புகளில் ஒன்றுதான். இது ஆதிகாலந்தொட்டு மனிதனிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதனைத் தவறு என்று சொல்லிவிட முடியாது. அவ்வாறு சொல்லிட முனையும். மதத் தத்துவவாதிகளின் எளிமைக் கோட்பாட்டில்தான் தவறு இருக்க முடியும். ஆகையால் இன்ப வேட்கை என்பது மனித இயல்பு, அது தவறு அன்று என்பது மட்டுமல்லாமல் தவிர்க்கவும் இயலாத ஒன்றும் ஆகும். இது பெந்தாமின் முழக்கமாகும்.

# 4. விருப்பு வெறுப்பு அடிப்படை

## (The Principles of Sympathy and Antipathy)

இந்தக் கோட்பாடு சற்று விநோதமான இயல்புகளின் அடிப்படையில் எழுகின்றது. மனநிலையில் ஏற்படும் விருப்பு வெறுப்பிற்குச் சிலநேரங்களில் காரணம் எதுவும் இல்லாமல் போய்விடுகின்றது. காரணமில்லாமல் கலக்கம் கொள்கிறது மனம்.அது காரணமே இல்லாமல் களிப்பில் துள்ளவும் செய் கிறது. அது ஒரு விநோதமான போக்கு. தன்வசம் இல்லாமல் மனம் செயல்படுகிறது.

ஏனோ நான் விரும்புகிறேன், ஏனோ நான் வெறுக்கிறேன் போன்ற மனநிலையின் அடிப்படையில் இந்தக் கோட்பாடு செயல்படுகிறது. ‘நல்லது’ அல்லது ‘கெட்டது’ என்று ஒன்றைக் குறிப்பிடும்போது, தன் நலனுக்கு உகந்தது அல்லது, நலனைப் பாதிக்கிறது என்பதற்காக அவ்வாறு முடிவிற்கு வந்துவிடுவ தில்லை. தனக்கு மகிழ்ச்சி அளிக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே நல்லதையும் கெட்டதையும் நிர்ணயிக்கும் அளவு கோலாக அமைந்துள்ளது. இது எவ்வாறு நிகழ்கிறது என்பதற் கெல்லாம் விடை எளிதாய் இல்லை. என்மனம் அவ்வாறு நினைக் கிறது; ஏனோ நான் அவ்வாறு நினைக்கிறேன்; காரணம் காட்ட இயலவில்லை; நான் அவ்வாறு உணர்கிறேன்; உணர்ந்தப்படு கின்றேன்; உணர்வுகள் உன்னதமானவை; யாருக்கும் கட்டுப் படாதவை; எவரையும் கலந்து ஆலோசிப்பதுமில்லை; அவற்றோடு ஒத்துப் போகாமல் இருக்க முடியாது; ஒத்துப் போகாவிட்டால் அது அரக்க மனமாகவே இருக்க முடியும்” இங்ஙனம் உணர்வு களின் அடிப்படையில் நம் மனம் செயல்படுகிறது. காரணம் காட்ட இயலாமல் நம் சிந்தனைக்கும் அப்பாற்பட்டு நிகழ்கிறது. இவற்றையே பெந்தாம் பகுத்தறிவு விநோதமானது என்கிறார்.

ஆனால், இவற்றிலிருந்துதான் கருத்துக் குழப்பம் எழுகிறது. ஏனென்றால் தன் உணர்வுகளுக்கு மனிதனால் காரணம் காட்டிட இயலவில்லை. இது அண்டத்தின் இயல்பு என்று சமாதானம் தேடிக்கொள்கிறான். ஏனென்றால் அவற்றை அளந்திட அளவு

கோல் என்று ஏதும் இல்லை. அதனை நிர்ணயித்து முடிவு கூறிடும் நீதிமன்றம்தான் எது இருக்கிறது? அது எங்கே இருக்கிறது?

ஆனல், இதுபோன்ற சிந்தனையோட்டம் வெவ்வேறு வடிவம் பெற்று வாழ்க்கையின் பலகோணத்தில் பல்வேறு நிலைகளில் பரிணமிக்கிறது. இவையெல்லாம் பெந்தாமிற்கு உடன்பாடில்லை. அறிவிற்கு ஒவ்வாத வெறும் மூடுமந்திரங்களே. உண்மையை திரை போட்டு மூடும் முயற்சியே. மனச்சாட்சியின்படி நடக்கின்றேன் என்கிறபோது அதில் எந்த விதமான சுதந்திரப் போக்கோ சுய சிந்தனையோ இருப்பதாக இல்லை. ஏதோ ஒன்றிற்குக் கட்டுப்படும் அடிமை மனப்பான்மையே அதில் தெரிகிறது. இந்த மனச்சாட்சி என்பது போன்றதே பொது உணர்விற்குக் கட்டுப்படுதல் என்பதும். ஆனல், ஒருவன் சிந்திப்பது போலவே எல்லோரும் சிந்திப்பதில்லை. உணர்வு ஒன்றுபட்டாலும் சிந்தனைகள் வேறுபடுகின்றன. சிந்தனை தன் இயல்பான போக்கில்தான் செயல்படும். பொது உணர்வை எந்தக் கட்டுப்பாடும் பாதிப்பதில்லை. எனவே பொது உணர்விற்குக் கட்டுப்படுதல் என்பது ஒன்றிற்குக் கட்டுப்படும் அடிமைத் தன்மையே. மனச்சாட்சி, பொது உணர்வு என்பவை போன்றதே 'உய்த்து உணர்தல்' (understanding) என்பதும். இவையெல்லாம் ஒரே மனப்பான்மையைச் சுட்டிடும் வெவ்வேறு சொற்கள். இதையே சிலர் வெல்ல இயலா அறத்தின் கோட்பாடுகளாக எடுத்துப் பேசுவர். இயற்கை விதியைப் பெரிதுபடுத்துபவர்களெல்லாம் இந்த அறத்தின் விதியையே தலையாக எடுத்துப் பேசுவர். ஆனல், இவையனைத்தும் சுயமான சிந்தனைக்கு வழிகோல்வன அல்ல; கட்டுப்படுத்தும் அடிமைத் தளைகளே; அறிவின் போக்கிற்கு ஒவ்வாதனவே ஆகும் என்பது பெந்தாமின் வாதம்.

இங்ஙனம் வாதிட்டவர் இத்தகைய சிந்தனைப் போக்குகளுக்குக் காரணங்கள் என்ன என்பதை ஆராயத் தொடங்குகிறர்.

## 1. உணர்வின் மறுப்பு (Repugnancy of Senses)

பௌதிக எண்ணங்கள் லௌகிக உணர்வுகளைத் திரையிட்டு மூடிவிடுவதும் உண்டு. அதுவும் பலவீனப்பட்ட மனம் படைத்தவர்கள் விஷயத்தில் இது பெரிதும் நடக்கிறது. உதாரணமாக ஓர் அழகனோடு அழகியை சேர்த்துப் பார்த்து மகிழும் உலகம், அழகற்றவனோடு சேர்த்துப் பார்த்திடும்போது அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவன் நல்லவனுகக்கூட இருக்கலாம். ஆனல், அதுபற்றி அக்கறை கொள்ளுவதில்லை. அது கருதுவதெல்லாம் அவனது அழகற்ற தன்மை தன்னுடைய அழகு உணர்ச்சியை

பாதிக்கிறது என்பதே. இங்கே தோற்றத்திற்கே மதிப்பளிக்கப் படுகிறது. ஏனென்றால் தோற்றமே அழகின் அளவுகோல். ஆனால், உண்மையில் அழகு என்பது ஓர் உணர்வு. அந்த உணர்விற்குப் புறத்தோற்றமே கண்ணில் படுகிறது. அகத்தின் அழகுபற்றி அது அக்கறை காட்டுவதாகக் காணோம். ஆனால், புறத் தோற்றமே உண்மையான அழகின் அளவுகோலாகி விடாது. புறத்தோற்றம் அழகின் போலி உணர்வே. ஏனென்றால் தன் தோற்றத்திற்கு ஒருவன் காரணமன்று. இருந்தாலும் உலகம் அதில்தான் மயக்கம் கொண்டுள்ளது. இந்த மயக்கம் அறிவு பூர்வமான ஒன்றன்று. ஏனென்றால் கானல்நீர் புனல்நீர் ஆகிவிடுவதில்லை. கானல் நீரின் தோற்றம் புனல்நீரின் தன்மையை உணர்த்திட உதவுமா? அது வெறும் தோற்றமேயன்றி உண்மையன்று; வெறும் உணர்வின் மயக்கமே. இத்தகைய உணர்வு மயக்கமே சுயமான சிந்தனைப் போக்கினைக் கட்டுப்படுத்துவதில் முதன்மையான ஒன்றாகும்.

## 2. தன்மான இழப்பு

சிலர் சிந்தனையைக் கட்டுப்படுத்துவதற்குக் காரணம் தன் மான உணர்வும் ஒன்றாகும். தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வேகத்தில் எதனையும் சிந்திக்காமல் பலர் செயல்படு கின்றனர். தன்மானம் என்னும் வேகத்தால் உந்தப்பட்டு, தனக்கும் அப்பாற்பட்ட நிலையில் அவர்கள் செயல்படுகிறார்கள். அங்கே சிந்தனை வேலை செய்வதில்லை. விவேகமும் செயலற்றுப் போகிறது. வெறும் வேகமே தன் ஆதிக்கத்தைச் செலுத்து கிறது. இது ஒரு கட்டுப்பட்டுப் போகும் அடிமைப் போக்கே.

## 3. மனித ஆற்றல் வரம்பிற்குட்பட்டது

நமது எண்ணங்களின் வெறுமையிலிருந்து நம்மால் மீட்சி பெற இயல்வதில்லை. இடையிடையே நம் ஆற்றல் வரம்பிற்குட் பட்டது எனும் எண்ணம் தலைதூக்கி நம்மைச் செயலறச் செய்து விடுகிறது. எதிலும் துணிந்து ஈடுபடாமல் இந்த எண்ணம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. நாம் சுதந்திரமாக இல்லை; நம் எண்ணம்போல் வாழ முடிவதில்லை; எண்ணியதை எண்ணியாங்கு செய்திடும் திறமையில்லை; நாம் ஒன்றை நினைக்கிறோம். நம்மையும் மீறி ஒன்று நடக்கிறது; நாம் ஒன்றை எதிர்பார்க்கிறோம்; ஆனால், ஏமாற்றமே நிகழ்கிறது. இவையெல்லாம் நம் ஆற்றலின் வரம் பைச் சுட்டி நிற்கின்றன. அத்தகைய உணர்வு நம்மைச் சோர்வு அடையச் செய்கிறது. மற்றவரால் செய்ய முடிந்ததை நம்மால் ஏன் செய்ய இயலவில்லை என்ற வினா எழுகிறது. மனித ஆற்றல் வரம்பிற்குட்பட்டதே என்ற விடை கிடைக்கிறது. இங்ஙனம்

நம் இயலாமைப் பற்றிய எண்ணம், சோர்வு, வெறுப்பு நிறைவின்மை இவற்றிற்கு வழிகோலுகிறது. இங்ஙனம் ஆற்றலின் வரம்பு நம் இயலாமையைச் சுட்டிக்காட்டி நம்மைச் சிந்தித்துச் செயல்படாமல் கட்டுப்படுத்துகிறது.

### 4. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும் ஏமாற்றமும்

எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் உண்டு. அந்த நம்பிக்கை ஒளியில்தான் மனிதன் செயல்படுகிறுன். ஆனுல், எண்ணிய எதிர்காலம் அமையாமல் வெறும் ஏமாற்றத்தில் முடியும்போது அவன் செயலிழந்து விடுகிறுன். சோர்வும் துயரமும் குடிகொள்கின்றன. நம்மால் எதுவுமில்லை ; நம்பிக்கையில் எதுவுமில்லை என்ற விரக்தி எண்ணம் மேலோங்கி நிற்கிறது. இந்த விரக்தி சிந்தனையைக் கட்டுப்படுத்துகிறது. எதிர்பார்ப்பு என்று ஒன்றிருந்தால் ஏமாற்றமும் இருக்கத்தான் செய்யும் என ஆறுதல் பெற்றிட இயலவில்லை. அங்ஙனம் ஆறுதல் பெற்றிடச் சிந்திக்க இயலுவதில்லை. ஏனென்றுல் சிந்தனை கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. இதுபோன்ற பல காரணங்கள் மனிதனின் சிந்தனையைப் பாதிக்கின்றன. அறிவு பூர்வமாகச் செயல்பட இயலாமல் தடுக்கின்றன. ஆக்க பூர்வமான கருத்துகள் வெளிப்பட இயலாமல் கட்டுப்படுத்தப் படுகின்றன. எனவேதான் மதவாதிகளால் ஏமாற்ற முடிகிறது. தத்துவ வாதிகளால் வாழ்வே மாயம் ; உலகே மாயை; மண்ணாவது திண்ணம் என அவலக் குரல் எழுப்ப முடிகிறது. போதனை என்னும் போர்வையில் போதனைவாதிகள் மலிந்து வருகிறுர்கள். உண்மை திரையிடப்படுகிறது. அறிவு மறுக்கப்படுகிறது. ஆனுல், தோற்கடிக்கப்படுகிறது. சிந்தனைத் தேக்கம் ஏற்படுகிறது. இவையெல்லாம் உண்மையான உயர்விற்கு வழி நல்கா. இந்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும். உண்மை எண்ணம் வளரவேண்டும். ஆக்க பூர்வமான சிந்தனை உருவாக வேண்டும். அறிவின் ஒளிமிளிர வேண்டும். உணர்வின் ஆதிக்கம் குன்றிப் பகுத்தறிவு செங்கோலோச்ச வேண்டும். அப்போதுதான் சுதந்திரப் போக்கு எங்கும் பரிணமிக்கும் என்பது பெந்தாமின் அறைகூவலாகும்.

# 5. இன்ப துன்பம்-பலவிதம்

## (Various kinds of pleasures and pains)

அனுமான அடிப்படையில் அமைந்த பல சிந்தனைப் போக்குகளை அறிவுக் கணைகளால் தாக்கி அவற்றின் பொய்மைத் தோற்றங்களை வெளிக் கொணர்ந்த பெந்தாம் இன்ப துன்பங்களின் பல்வேறு வகைகளைப்பற்றித் தன் நுண்மாண் நுழைபுலச் செவ்வியால் விசாரணைக்கு உட்படுத்தினர். ஆனல், இத்தகைய விசாரணை உளஇயல் மிகவும் வளர்ந்துவிட்ட இக் காலத்தில் பொருளற்றதாகத் தெரிகிறது. ஆனல், பெந்தாமின் காலத்தில் உளஇயல் அவ்வளவாக வளர்ந்திருக்கவில்லை. எனவே, அவர் தரும் இன்ப துன்பப் பட்டியல் உளவியலின் அடிப்படையில் அமைந்தது அன்று. எனவே, உளவியல் எனும் அளவுகோலினைப் பயன்படுத்திடும்போது அவரது இன்ப துன்பப் பட்டியல் ஒரு அபத்தமாகவே, அர்த்தமற்றதாகவே படும். இன்ப துன்பத்தைச் சாதாரண இன்ப துன்பம், சிக்கலான இன்ப துன்பம் என இரண்டாகப் பிரித்துக்கொண்டார்.

### சாதாரணமான இன்பம்

**1. உணர்ச்சி இன்பம்**

இது உணர்வு உறுப்புக்களால் பெறப்படும் சாதாரணமான இன்பம். காண்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, பால் உணர்வு என இவை விரியும்.

**2. பொருள் இன்பம்**

விரும்பிய பொருளைப் பெறுவதால் கிட்டிடும் இன்பம் சாதாரணமான இன்பமாகும். நினைப்பது நடக்கும்போது, கேட்பது கிடைக்கும்போது, அந்தச் சமயத்தில் ஏற்படும் இன்பத்திற்கு எல்லை ஏது? ஆனல், இங்கே அத்தகைய ஈடுஇணையற்ற இன்பத்திற்குக் காரணம் ஒரு பொருளே என்பதில் இதுவும் ஒரு சாதாரணமான இன்பமாகவே கருதப்படும்.

**நட்பு இன்பம்**

உணர்ச்சியொத்த உண்மை நட்பு உள்ளபடியே இன்பம் தர வல்லது. நல்ல நண்பனைப் பெற்றிருக்கின்றோம் என்ற உணர்வே இன்பமளிக்க வல்லது. இரண்டறக் கலந்துவிட்ட உண்மை நட்பு அளப்பரிய இன்பம் தரவல்லது.

இதுபோன்ற மற்ற இன்பங்களாவன: புகழ், அதிகாரம், அருள், கருணை, சேர்க்கை, துன்பம் தவிர்தல் என்பனவற்றால் ஏற்படும் இன்பங்களாகும்.

**சாதாரண துன்பம்**

கீழ்க்கண்ட துன்பங்கள் அனைத்தும் இந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

1. (தனிமைத் துன்பம்) இன்னல் துன்பம்.
2. உணர்ச்சித் துன்பம்.
3. பகைமைத் துன்பம்.
4. கெட்ட பெயர்.
5. அறவழி நிற்றலில் அல்லல்.
6. கருணை காட்டலில் அல்லல்.
7. நினைவு, கற்பனை, மனப்பயம் இவற்றால் நிகழும் துன்பம்.

# 6. சந்தர்ப்பங்களின் ஆதிக்கத்தில் உணர்வுநிலை

இன்பம் என்பதற்கு எந்த அளவுகோலும் இல்லை. இன்பம் தருவனவெல்லாம் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்துவிடுவதில்லை. அதுபோலவேதான் துன்பமும். பொன்னும் பொருளும் ஒருவருக்கு இன்பம் அளிக்கிறது. ஆனால், இன்னொருவர் பொன் வேண்டாம்; பொருள் வேண்டாம்; ஆண்டவன் அருளே இன்பம்; பொன்னும் பொருளும் துன்பம் எனப் பாவிக்கிறார். மாசில் வீணையும், மாலை மதியமும் ஒருவர்க்கு இன்பம்; ஆனால் இறைவன் திருவடி நிழலுக்கு அவை இணையாகா என்பது இன்னொருவர் வாதம். குழலும் யாழும் இசைவாணர்க்கு இன்பம். அந்தக் குழலினும் யாழினும் 'மழலை' இன்பம் பயக்கிறது பெற்றோருக்கு. எனவே மனித மனத்திற்கேற்ப, சந்தர்ப்ப மாறுபாட்டிற்கு ஏற்ப இன்ப துன்ப உணர்வுகள் பெரிதும் மாறுபடுகின்றன. ஒருவர் இன்பம் மற்றொருவர்க்குத் துன்பம். ஒருவர்க்கு விருந்து இன்னொருவர்க்கு மருந்து (குமட்டல்). இது இயற்கை. இத்தகைய வேறுபாடு உணர்வு மாறுபாட்டால் உண்டாகிறது. இன்பமாக ஒருவர் உணருவதைத் துன்பமாக இன்னொருவர் உணர்கிறார்.

இங்கே உணர்வுகள் மாறுபடுகின்றன. எனவே இன்ப துன்பமும் மாறுபடுகிறது. இத்தகைய மாறுபாடு வெறுமனே அளவில் மட்டும் மாறுபட்டிருக்கலாம். அல்லது அடிப்படையாகவே மாறுபட்டிருக்கலாம். ஒன்றைப் பற்றி எல்லோரும் ஒரே உணர்வு கொண்டிருக்கலாம். ஆனால், ஒரே அளவைப் பெறாமல் சற்று ஏற்றத்தாழ்வு கொண்டிருக்கலாம். இதனை உணர்வு அளவில் மாறுபட்டிருக்கிறது எனலாம். ஆனால், ஒன்றைப் பற்றிப் பலர் பல்வேறு உணர்வுகளைக் கொண்டிருந்தால் உணர்வு அடிப்படையிலேயே மாறியிருப்பதாகக் கொள்ள வேண்டும். இத்தகைய உணர்வு மாற்றங்களுக்குச் சந்தர்ப்பச் சூழல்களே காரணம் என்பது பெந்தாம் வாதம்.

சந்தர்ப்பச் சூழல்களில் ஏற்படும் மாற்றம் நம் உணர்வுகளைப் பாதிக்கிறது. நம் உணர்வுகள் பாதிக்கப்படும்போது உணர்ச்சி

யின்பாற்பட்ட இன்ப துன்பங்களும் மாறுபடுகின்றன. இங்ஙனம் உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய சந்தர்ப்பங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறார் பெந்தாம்.

## 1. பிறப்பால் அமைந்த மனநிலைப் போக்குகள்

மனிதனின் மனப்போக்குகளில் சில பிறவிலேயே அமைந்து விடுகின்றன. அவற்றை இடையில் மாற்றிக்கொள்ள முடியாது; இறப்புவரை நிழலாய்த் தொடர வல்லன. ஏனென்றால் தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பர். இத்தகைய தொட்டில் பழக்கம் உணர்வுகளைப் பாதிக்கும் சூழ்நிலைகளில் மிக முக்கியமானது. ஆனால், பிறவியிலிருந்தே இவை தொடர்வதால் உணர்வைப் பாதிக்கும் மற்றச் சூழ்நிலைகளிலிருந்து இவற்றைப் பிரித்து உணர முடிவதில்லை.

## 2. உடல்நலம்

உடலின் நலம் உணர்வுகளைப் பாதிப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவர் இன்ப உணர்வு குன்றித் துன்பம் மிக்கவராய்க் காணப்படுகிறார். ஆனால், உடல் நலத்துடன் இருப்பவர் மகிழ்ச்சியுடனிருக்கக் காண்கிறோம். நோய் உடம்பைமட்டும் பாதிப்பதில்லை. உணர்வையும் பெரிதும் பாதிக்கிறது. சூலை நோயால் வாடியவர் நோய் நீங்கப் பெற்றுத் தன் மதத்தையே துறந்து நோய் நீங்கக் காரணமான மதத்தில் சேர்ந்தார். இது உடல்நலம் அவர்பால் ஏற்படுத்திய மாற்றமாகும். இங்ஙனம் உணர்வு மாற்றத்தில் உடல்நிலை பெரும் பங்கு வகிக்கிறது.

## 3. ஆற்றல்

ஆற்றல் என்பது உடல் நலத்தோடு மிகுதியும் தொடர்பு கொண்டது எனினும் உணர்வு மாற்றத்தில் இதுவும் ஒரு தனிப்பட்ட காரணமாகும். வலிவும் வனப்புமற்ற ஒருவனின் இன்பம், அதனைப் பெற்றுள்ளவனுக்கு வலிவற்றதாகவே படும். இங்ஙனம் உணர்வு வேறுபாட்டிற்கு வலிவும் ஒரு காரணமாகும்.

## 4. உடல் ஊனம்

கையோ, காலோ இழந்து உடல் ஊனமுற்றவரின் மனநிலை உடல்நலம் வாய்ந்த ஒருவரின் மனநிலையோடு ஒப்பிடும் போது மாறுபட்டுத்தான் இருக்கும். உடல் ஊனத்தின் தன்மையைப் பொறுத்து இந்த உணர்வு இன்னும் வேறுபடும்.

**5. அறிவின் வரம்பு**

ஒருவனுடைய அறிவின் ஆற்றலைப் பொறுத்து இன்ப துன்ப உணர்வுகள் வேறுபடும். சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள் துன்பத்திலும் இன்பம் காண முடியும். ஆனால், அத்தகைய ஆற்றல் அற்றவர்கள் சாதாரண துன்பத்தையே பெரும் துன்பமாக எண்ணி அல்லற்படுவர். இத்தகைய உணர்வு மாற்றத்திற்குக் காரணம் அறிவின் ஆற்றலேயாகும்.

**6. ஆத்மா**

ஆத்ம ஞானம் பெற்றவர்கள் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்க மாட்டார்கள். உடனுக்குடனே நிகழ்கின்ற இன்ப துன்பங்களைப் பற்றிய எண்ணம் அவர்களுக்கு இல்லை. எப்போதோ நிகழ்வதாகக் கற்பித்துக்கொள்கின்ற மறுபிறப்பைப் பற்றியே எண்ணுவார்கள். ஏனென்றால் இப் பிறவியின் பயன் முற்பிறவியின் கர்மங்களே. எனவே, அவர்கள் எண்ணம் அலாதியானது. இன்ப துன்ப உணர்வும் மாறுபட்டே இருக்கிறது. இதற்கு அவர்களின் ஆத்மாவே காரணமாகும்.

பெந்தாமின் பட்டியலில் இடம்பெற்ற மற்ற இன்ப துன்பங்களுக்கான காரணங்கள்.

**பொறுமை**

பொறுமை மலையினும் மாணப் பெரிது. ஆனால், குணமென்னும் குன்றேறி நின்றவர் வெகுளி கணமேனும் காத்தல் அரிது. காரணம் அவர்களின் இன்ப துன்ப மாறுபாட்டைப் பொறுமை மிகுதியும் பாதிக்கிறது.

**விருப்பச் சார்பு**

குறிப்பிட்ட ஒன்றின்மேல் பற்று வைத்தல் அல்லது விரும்புதல்கூட இன்ப துன்பச் சூழலைப் பாதிப்பதாக உள்ளது.

**பெருமை**

சமய எண்ணம், செல்வச் சூழ்நிலைகள் போன்றவற்றால் பெருமை தோன்றலாம்.

உடற்கூறு சம்பந்தப்பட்ட வரையில் பால் வேறுபாடு இன்ப துன்பச் சூழலைப் பாதிப்பதில் முக்கிய பங்கு பெறுகிறது. இயற்கையின் அமைப்பில் பெண்பாலார் உணர்வுகள் பெரிதும் மாறுபட்டிருக்கின்றன. ஆண்களை நோக்குமிடத்துப் பெண்களின் உடற்

கூறு மிகவும் மென்மையானது. மழைத்துளி வீழ்ந்து மாசு நீங்கிய மாந்தளிர் போன்றது அவர்கள் வண்ணமேனி. 'பைங்கொடி' என்பர் பாவலர். அன்னத் தூவியும் அனிச்சமும் அவர்கள் மென்மையின் முன் தோற்றுவிடும். இத்தகைய பெண்மைத் தன்மை இயற்கையாகவே குடிகொண்டிருப்பதால் தான் அவர்களின் சுய உணர்வு, தெய்விக எண்ணம் உயர்வுற்று உயிரோட்டத்துடன் திகழ்கிறது. ஒரு தாயின் அன்பிற்கு நிகரேது? வாழ்நாள் முழுதும் என்றும் மாறு, எதையும் எதிர்பாராத ஆழமான தூய்மையான அன்பைத் தாய் தன் குழந்தைபால் கொண்டிருக்கிறாள். அவள் ஒரு கோயில். அக் கோயிலில் அவளே தெய்வம்; அவளுக்கு இணை அவளே. தாய் என்பதால் மட்டுமன்று. இயற்கையிலே அவர்கள் இதயம் கருணை மிக்கது. பிறர் கண்கலங்கச் சகிக்காதது. ஆனால், அவர்கள் உலகம் மிகச் சிறியது. பெற்றோர், கணவன், மக்கள் உற்றார் உறவினர் என்று வரையறுக்கப்பட்ட குறுகிய வட்டத்தில் அது சுழல்கிறது. எனவே, பயன்பாட்டு விதிகள் அதிகம் கொண்டிருப்பதாகக் கூறமுடியாது. எனவே, ஒரு நாட்டின் நலனில் அக்கறை கொண்ட பெண்பாலார் மிகவும் அருகியே காணப்படுகின்றனர். இதுவே இவ்வாறானால் உலக நலனில், மனித சமுதாய நலனில் அக்கறை கொண்டவர்கள் மிகவும் அரிதேயாகும்.

**வயது**

வாழ்வின் ஒவ்வொரு பருவமும் நம் உணர்வுகளை வெவ்வேறு விதத்தில் பாதிக்கின்றது. இளமையின் வேகம் முதுமையில் இருப்பதில்லை. முதுமையின் விவேகம் இளமையில் அமைவதில்லை. இளமைப் பருவத்து எண்ணங்கள் முதுமைப் பருவத்தில் அர்த்தமற்றனவாகத் தெரியும். ஒவ்வொரு பருவத்தின் உணர்வுகளும் எல்லோரிடமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எல்லா இளைஞரும் ஒரே மாதிரியாக எண்ணுவதில்லை; உணர்வதில்லை; அதில் மாறுபாடு இருக்கத்தான் செய்கிறது. இது போலவே முதுமையும்.

இந்த வகையில் அடங்கும் உணர்வுகளைப் பாதிக்கும் சூழல்களாகப், பெந்தாம் குறிப்பிடுவன பதவி, கல்வி, தொழில் மேம்பாடு, வானிலை, இனம், சமயத் தொழில் முதலியனவாகும்.

# 7. அரசியல் நன்மை தீமை

## (Political Good and Evil)

பெந்தாமின் கருத்துப்படி ஒவ்வொரு சட்டமும் தீமை பயப்பதே. ஏனெனில் மனித உரிமையைக் கட்டுப்படுத்துவதாக அவை உள்ளன. சட்டத்தின் முன்னால் தன் உரிமைகளைச் சமர்ப்பித்துவிட்டு அதன் கட்டுப்பாட்டிற்குள் வாழ வேண்டிய அவசியம் மனிதனுக்கு ஏற்படுகிறது. ஊர்தியை உடைமையாக்கிக்கொள்ள அனுமதிக்கும் அரசு ஊர்தியைப்போக்குவரத்து விதிகளை அனுசரித்தே ஓட்ட வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் விதிக்கிறது. சட்டம் சமுதாய நன்மைக்காக வேண்டுமானால் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், தனி மனித சுதந்திரத்தில் தலையிடாமல் அதனால் அதனைச் செய்திட இயலாது. தனி மனித சுதந்திரத்தைப் பாதிக்கிற அளவில் சட்டம் தீமையைக் கொண்டிருக்கிறது என்பது பெந்தாமின் வாதம். எனவே, அரசாங்கம் சட்டத்தை இயற்றும்போது மிகக் குறைந்த அளவில் தீமையைக் கொண்டிருப்பதாக அமைக்க முயல்கிறது. சமுதாயம் வேண்டுமென்றால் சட்டம் இருந்துதான் ஆகவேண்டும். ஆனால், சட்டம் என்பது தவிர்க்க இயலாத் தீமை.

சமுதாயத்தின் நன்மையைக் கருதிச் சட்டம் எனும் தீமையை அனுமதித்தே ஆகவேண்டும். இது தவிர்க்க இயலாதது. எனவே சட்டத்தால் ஏற்படுகின்ற தீமையை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்த பின்னரே சட்டம் இயற்றும் பணியில் அரசு ஈடுபடுகிறது. அவ்வாறு ஈடுபடும்போது அரசாங்கம் முக்கியமான இரண்டு நிலைகளை உணர்ந்தே ஆகவேண்டும். ஒன்று, சட்டம் என்பது ஒரு தீமை. இரண்டாவது, இந்தத் தீமை மற்றொரு தீமையைத் தடுக்கவே புகுத்தப்படுகிறது. அங்ஙனம் தடுக்கப்படுகின்ற தீமை சட்டம் எனும் புகுத்தப்படுகின்ற தீமையைக் காட்டிலும் மிகப் பெரியது; வலியது. இங்ஙனம் சட்டம் என்பது தீமை என்று கருதப்பட்டாலும் சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் மற்றப் பெரிய தீமைகளைக் களையவே அது பயன்படுத்தப்படுகின்றது.

சமுதாயத்தில் மலிந்து காணப்படும் தீமைகளை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துகிறார் பெந்தாம்.

முதல் வகையில் அவர் குறிப்பிடும் தீமை சட்டம் ஒன்றை அனுமதிக்காததால் ஏற்படும் தீமை. அதாவது சட்டத்தை மீறுவதால் ஏற்படும் தீமை. ஆனால், சட்டத்தை மீறுகின்றவர்களையே இந்தத் தீமை சார்வதாக உள்ளது. கொள்ளை அடிப்பது குற்றம் என்கிறது சட்டம். இதனை மீறுவோர் கொள்ளை அடித்த குற்றத்திற்கு ஆளாகின்றனர். இக் குற்றத்தால் கொள்ளை அடிக்கப்பட்டவன் முதலில் தீமைக்கு உள்ளாகிறான். இந்தத் தீமை ஆரம்பத் தீமை. அடுத்து அவனைச் சார்ந்தோர் தீமைக்கு உள்ளாகின்றனர். இது ஆரம்பத் தீமையிலிருந்து பெறப்பட்ட சார்புத் தீமை. இந்த இரண்டனையும் உள்ளடக்கு முதல்வகைத் தீமை என்கிறார் பெந்தாம்.

இரண்டாம் வகைத் தீமை முதல்வகைத் தீமையில் தன் ஆரம்பத்தைப் பெற்றுப் பல்கிப் பெருகிச் சமுதாயத்தின் பெரும் பகுதியையும் பாதிப்பதாக அமைகிறது. சட்டத்தால் சுட்டப் படாதவர்களும் இதனால் தீமைக்கு உள்ளாகின்றனர். இதனைப் பீதி (Alarm) அபாயம் (Danger) என இரண்டாகப் பிரிக்கலாம். கொள்ளைபற்றிய செய்தி எட்டிய இடமெல்லாம் அதுபற்றிய பயப்பீதி ஏற்படுகிறது. மக்கள் நிம்மதி இழந்து தவிக்கிறார்கள். தங்களுக்கும் அத்தகைய அபாயம் நேருமோ என அவதிப் படுகிறார்கள். அபாயம் என்பது இதுபோன்று மேலும் மேலும் கொள்ளைகள் பெருகிவிடுமோ என்ற அச்சமே ஆகும். இங்ஙனம் இரண்டு வகைத் தீமைகளும் மிகவும் தொடர்பு உடையவை. முதல்வகை இரண்டாம் வகைக்குக் காரணமாகிறது. ஆனால், அதே சமுதாயத்தில் இரண்டையும் பிரித்து அறிய முடிகிறது.

மூன்றாம் வகைத் தீமை சற்றுச் சிந்திக்கப்பட வேண்டியது. ஏனென்றால் சமுதாயத்தின் அழிவிற்கு அது வழி நல்குவதாய் உள்ளது. முதல் இரண்டுவகைத் தீமைகளால், தீமைபற்றிய எண்ணம் மலிந்து நன்மை பற்றிச் சமுதாயம் மறக்க முனைவது. தீமையையே வாழும் வழியாகக் கருதிச் செயல்படத் தொடங்குவது. கொள்ளை மலிந்து அதனால் கொள்ளைக்காரர்கள் செல்வத்தில் திளைத்தால் சமுதாயம் அதுபற்றி அதிகம் சிந்திக்கத் தொடங்கும். உழைப்பு, நல்ல செயல், நன்னெறி, இவைகள் பற்றி அது தன் கருத்தை மாற்றிக்கொள்ள முனைகிறது. கொள்ளை அடிப்பதால் எளிதில் பொருள் ஈட்டலாம்; இன்பமாக

வாழலாம். ஏன் வினை உழைக்க வேண்டும்? துன்பத்தில் வாடவேண்டும்? இதனல் யாருக்கு நன்மை? உண்மை என்றால் என்ன? அது எளிதில் உண்ண வழி காட்டுமா? எளிதில் பொருள் ஈட்டக் கொள்ளை அடிப்பதுதான் சிறந்த வழி எனச் சிந்திக்கத் தொடங்குகிறது. இங்குதான் மூன்றாவது தீமையும் தொடங்குகிறது.

எனவே சட்டம் என்பது ஒரு தீமைதான் என்றாலும், சமுதாய நன்மை கருதி மற்றப் பெரிய தீமைகளைக் களைந்திட அது அவசியமான ஒன்றே.

# 8. ஏன் சில செயல்கள் குற்றமெனக் கருதப்படல் வேண்டும்?

மனித வாழ்க்கை, எண்ணிக்கையில் அடங்காச் செயல்களைக் கொண்டுள்ளது. மனிதக் கூட்டம், தனிநபர் என்ற ஒரு சிறு துளிப் பிரிவிலிருந்து சாதி, மதம், மொழி, தொழில், நிலப் பரப்பு ஆகியவை போன்ற பல தொடர்புகளால் சிறிதும் பெரிதுமாகப் பல கூட்டங்களாக அமைந்துகொண்டிருக்கிறது. இவைகளின் ஒவ்வொரு செயலும் மற்றவைகளுடன் இயைந்து செல்வதற்கு வழிவகை செய்யாவிட்டால், மனித இனம் அத னுடைய செயல்களினாலேயே அழிந்துபடும்.

எனவே, ஒரு தனி நபரினுடைய அல்லது ஒரு பிரிவினுடைய செயல், ஒட்டு மொத்தமான, சமுதாயத்தில் விளைவிக்கும், அல்லது மற்றொரு பிரிவினருக்கு விளைவிக்கும் தீமை, நன்மையை விட அதிகமாக இருந்தால் அச் செயல்களை முழுமையாகத் தடை செய்தோ, அல்லது பல விதிமுறைகள்மூலம் கட்டுப் படுத்தியோ சட்ட மன்றங்கள் சட்டமியற்றுகின்றன. எனவே, சட்டங்கள் தடை செய்யும் செயல்கள் மீறிச் செய்யப்பட்டால், அல்லது விதிமுறைகள் புறக்கணிக்கப்பட்டால், அவை குற்ற மாகக் கொள்ளப்படுகின்றன. சட்டங்கள் மதிக்கப்படுவதற்காக, அனுசரித்து நடக்கப்படுவதற்காக, குற்றச் செயல்களுக்குப் பரிகாரங்களும் தண்டனைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பழைய உதாரணமான கொள்ளைச் செயலையே எடுத்துக் கொண்டால், கொள்ளைச் செயல் நிச்சயமாகக் கொள்ளையருக்கு நன்மை பயக்கிறது. ஆனால், அது மற்றவருக்கு விளைவிக்கும் துன்ப மும், கஷ்டங்களும் மிகப்பெரிய அளவினவாக அமைகின்றன. எனவே, அது குற்றச் செயலாக தண்டிக்கப்பட வேண்டியதாகும். அது தடுக்கப்படாவிட்டால், ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு தொழி லாகவே மாறும் தன்மையை அடையும்.

மேற்கண்டதை விளக்கியபின் பெந்தம் ஒரு செயல் அதன் கர்த்தாவுக்கு மகிழ்ச்சி தருவதாய் இருப்பினும் ஏன் குற்றமாகக்

கருதப்படல் வேண்டும் என்பதைக் கூறுகிறார். உதாரணமாக, வெறுப்பு எனும் மன உணர்வு வெளியிடப்படும்போது குறித்த நபருக்கு மனப்புண், உடல்புண், அவமானம் ஆகியவற்றி லொன்றையோ அனைத்தையுமோ ஏற்படுத்துகிறது. இது வெறுப்பை வெளியிட்ட நபருக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியை யும் கொடுக்கிறது.

ஆயின் அச் செயல் ஏற்படுத்தும் நன்மை, தீமையைவிடக் குறைவாகவே உள்ளது.

மற்றொரு நபரின் உரிமையைப் பாதிப்பதில் ஒருவருக்கு மகிழ்ச்சி ஏற்படலாம். ஆனால், பாதிக்கப்பட்ட நபரின் இழப்பு அதிகமாக இருந்தால் அது ஒரு குற்றச் செயலாகும்.

தன்னலம் பேணவேண்டிய நிர்பந்தம் ஒவ்வொரு மனிதனுக் கும் இருக்கிறது. அனைவரும் அப் பணியில் ஈடுபடும்போது அவர்களிடையே நியாயமான பல விகிதாச்சாரம் அவசிய மாகிறது. ஒருவருடைய மிருக பலம் (அனைத்து நோக்கிலும்) மற்றொருவரைச் செயல்பட முடியாமல் செய்துவிடக் கூடாது. அதுபோல் சமபலம் கொண்டவர்களிடையேயான போட்டி, கழுத்தை நெரிக்கும் போட்டியாக (cut throat competition) மாறும் அபாயமும் தடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் சமுதாயத்தில் அமைதியின்மையும், பீதியும், பூதகரமாக உரு வெடுக்கும் அபாயமும் ஏற்படும்.

# 9. தார்மீகக் கோட்பாடுகளும் சட்டமியற்றுதலும்

## (Morality and Legislation)

தார்மீகக் கோட்பாடுகள் தனி மனிதனின் நல்வாழ்வுக்கும், சமூகத்தின் நல்வாழ்வுக்கும் நல்வழிகளைக் கூறுகின்றன. வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய செயல்களையும் கோடிட்டுக் காட்டுகின்றன. மேலாகப் பார்த்தால், சட்டங்களும் இதே பணியில்தான் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால், தார்மீகக் கோட்பாடுகள் மனிதனை அவனுடைய நல்வாழ்வுக்காகவும், சமூகத்தின் நல்வாழ்வுக்காகவும் என்ன செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. சட்டங்கள் எல்லா நற்செயல்களும் செய்யப்பட வேண்டும் என்ற வகையிலோ எல்லாத் தீமைகளும் கட்டுப்படுத்தப்படும் வகையிலோ இயற்றப்பட முடியாது.

மேலும், சட்டமியற்றுதல் என்பது முக்கியமாகப் பரிகாரங்களையும் தண்டனைகளையும் தருவதுதான். அவை கட்டுப்படுத்தும் செயல்கள் முக்கியமாகச் சமுதாயத்தை மிக வெளிப்படையாகப் பாதிக்கும் தன்மை படைத்தவையாகவே இருக்கின்றன. மனிதன் காலையில் விழித்தெழுவது முதல் இரவில் கண்ணயரும் வரையில் அவனுடைய ஒவ்வொரு செயலையும் சட்டம் ஒழுங்குபடுத்த இயலாது. அப்படியே ஒரு சட்டம் படைக்கப்பட்டாலும் அநுசரிக்கப்பட முடியாது; கண்காணிக்க முடியாது. மனிதனுடைய எல்லாச் செயல்களையும் இது தவறு, இது சரி என்ற அளவிலே சட்டத்தில் தெளிவாக வர்ணனை செய்ய இயலாது. உதாரணமாகக் கல்நெஞ்சம், நன்றியின்மை போன்றவற்றைத் தெளிவாக வரையறை செய்தல் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. எனவே, தெளிவுபடுத்தப்பட முடியாத ஒரு செயல், சட்டத்தின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட முடியாது. ஆனால், திருட்டு, கொலை, லஞ்சம் போன்றவை எளிதில் வரையறை செய்யப்படக்கூடியவை.

சட்டத்தின் பார்வை பெரும்பாலும் மனிதர்களுக்கு இடையே நடக்கும் செயல்களின்மீதே படிகிறது. ஆனால், தார்மீகக்

கோட்பாடுகள், ஒரு மனிதன் தனக்குத் தானே செய்து கொள்ளும் செயல்களையும் ஆட்சி செய்கிறது. தார்மீகக் கோட்பாடுகளுக்குத் தனி மனிதனின் மனச்சாட்சியே வழக்குரைஞர்; அவனே சிறந்த நீதிபதி. தண்டனை கொடுப்பவனும் அவனே; அனுபவிப்பவனும் அவனே. திருந்தச் சொல்பவனும் அவனே; திருத்திக் கொள்பவனும் அவனே. அவனே கைதி; அவனே காவலாளி.

# 10. சட்டமியற்றுதலில் தகுதியற்ற காரணங்கள்

## (False Method of Reasoning on the Subject of Legislation)

'Sophisms' என்ற பெயரில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அரிஸ்டாட்டில் முறையற்ற காரண காரியங்களை வகைப் படுத்தினார். பெந்தம் மேலும் சிலவற்றை விளக்கியதன் மூலம் வலுவற்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட மியற்றப்படுவதைத் தவிர்க்க வழி செய்திருக்கிறார்.

1. 'தொன்மை'க்குப் பெருமை இருக்கலாம். வியக்கத் தகுந்த குணங்கள் இருக்கலாம். ஆனால், அது ஒன்றே காரண மாகக் கொள்ளுதல் கூடாது.

2. மதக் கோட்பாடுகள் சரியான காரணங்களாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

3. தான்தோன்றித்தனமாக வரையறுக்கப்பட்ட செயல் களின்மேல் கூறப்படும் காரணங்கள் சரியாகா.

4. உவமான உவமேயங்கள் விளக்கங்களுக்கு உதவுமே யன்றி, காரண காரியங்களாக ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது.

5. கற்பனைகள் (Fiction) காரணங்கள் அல்ல.

6. விநோத எண்ணங்களைக் (Fancy) காரணமாகக் கொள் ளக் கூடாது.

7. விருப்பும் வெறுப்பும் காரணமல்ல.

8. கற்பனையாகக் கொள்ளப்படும், உரிமைகளும், கடமை களும் அப்படியே காரணங்களாகக் கொள்ளப்படுதல் கூடாது.

பகுதி மூன்று

# 1. சட்டம் வரைதல்

## (Drafting of Legislation)

சட்டமியற்றுதலில் கவனிக்கப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளை முந்தைய பகுதியில் கண்டோம். அவையனைத்தும் சட்டம் உருப்பெறுவதற்கு முன் மனத்தில் கொள்ள வேண்டியவையாகும். சட்டமன்றத்தின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சட்டப் படிவம் எழுதுவதற்கு, அல்லது சட்டமன்றம் கொடுத்த கருத்துகளைக் கொண்டு சட்டத்தை எழுத்து வடிவில் கொடுப்பதற்குத் திறமையும் மதிநுட்பமும் தேவை. சட்டக் கோட்பாடுகளை அறிந்திருப்பதுடன், மொழியியலிலும், முக்கியமாகச் சட்ட மொழியியலில் தேர்ச்சியும் அனுபவமும் அவசியம்.

எளிமையான மொழியே சட்டமியற்றுவதற்குச் சிறந்தது. இலக்கிய மொழி தேவையற்றது. நீளமான சொற்றொடர்களும், டம்பமான வார்த்தை ஜாலங்களும் குழப்பத்தை விளைவிக்குமே தவிர, தெளிவு பிறக்க வழி செய்யா. எனவே, அவை தவிர்க்கப் படல் வேண்டும்.

ஒரு சொல் தேவையில்லாமல் திரும்பத் திரும்ப உபயோகிக்கப்படுதல் கூடாது. சட்டம் எழுதுபவர், சாதாரண மனிதர்களும் படித்தறிய வேண்டும் என்பதை எப்போதும் மனத்தில் கொள்ள வேண்டும்.

சாதாரணச் சொற்களில் எளிமையான வாக்கிய அமைப்புகளை எழுத முடியும்வரை தன்னுடைய நடை சிறந்ததாக, தெளிவாக இருக்கிறது என்று கொள்ளலாம். ஆயின் ஒருசில கட்டங்களில் குழப்பமிக்க வாக்கிய அமைப்புகள் ஏற்பட்டுப் பொருள் தெளிவு பிறக்காத தருணங்களில் அவற்றை மறுபார்வை செய்ய வேண்டும். திருத்தி அமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

இரு வேறுபட்ட துறைகளை ஆளும் விதிகளை ஒரே சட்டத்தில் இயற்றுவது சட்டம் வரைபவரின் பணியைக்

கடினமாக்குவதுடன் தேவையற்ற குழப்பங்களையும் ஏற்படுத்தும். உதாரணமாக, இரயில் போக்குவரத்தையும் மோட்டார் வாகனப் போக்குவரத்தையும் ஒரே போக்குவரத்துச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவர முனைதல் கூடாது.

சட்டம் வரைவதற்கான அடிப்படைக் கருத்துகளைப் பெற்றவுடன் சட்டம் வரைபவர் அதைப் பற்றிய ஒரு முழுமையான சந்தேகமற்ற பொருள் கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான வினா விடைகளைச் சேகரித்துக் கொள்ளுதல் அவசியம். தனக்கே தெரியாத, புரியாத ஒன்றை எழுத முனைவது அபத்தம். அதற்கு அடியிற் கண்டவை மிகவும் அவசியம்.

(அ) ஏற்கெனவே இருக்கின்ற சட்டம். அதிலுள்ள குறைபாடுகள், தேவைப்படும் நிவர்த்திகள்.

(ஆ) சட்டம் எதுவும் இல்லாத தருணத்தில் இயற்றப்பட வேண்டிய சட்டத்திற்குத் தேவையான கருத்துகள், புள்ளி விவரங்கள்.

(இ) இயற்றுச் சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் பழக்க வழக்கங்கள்.

சட்டத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய தலைப்பு பொறுத்தமானதாகவும், அதனுடைய எல்லைகளைத் தெளிவுபடுத்துவதாகவும் அமையவேண்டும்.

தொடக்கத்தில் உள்ள பீடிகை அல்லது முகப்புரை (Preamble) சட்டத்தின் தன்மை, எல்லை, நோக்கம் ஆகியவற்றைச் சுருக்கமாக, எளிமையான மொழியில் கூறவேண்டும்.

அடுத்ததாக ஒரு சுருக்கத் தலைப்பைக் கொடுத்தல் வேண்டும். மேற்கோள் உபயோகத்திற்கு இது மிகவும் உதவும்.

பின், யாரால், எந்த அதிகாரத்தின்கீழ்ச் சட்டம் இயற்றப் பட்டுள்ளது எனக் குறிப்பிடல் வேண்டும்.

அடுத்தபடியாகச் சட்டத்தின் உடம்பில் வரக்கூடிய பல சொற்களுக்கு வரையறை அல்லது வர்ணனை கொடுத்தல் வேண்டும். குழப்பம் விளைவிக்கும், அல்லது சட்டத்துக்குத் தேவையான பொருளை மட்டும் கொண்டில்லாத சொற்களுக்கு வரையறை கொடுத்தால் போதுமானதாகும். எல்லாவற்றுக்கும் தேவையென்பதில்லை. ஆனால், ஒன்றின் பொருள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் தருணத்தில் வரையறை செய்தல் நல்லது. வரையறைகளில், சாதாரண வழக்கில் இல்லாத ஒன்றை ஒரு சொல்லின்கீழ்ச் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணம், 'குதிரை எனும்

சொல் பகவையும் உட்கொண்டதாகும்' என்பது போன்ற வரையறைகள்.

**அமைப்பு** (Arrangement): *1.* ஒரு விஷயத்தைக் குறிப்பிடும் சட்டப் பிரிவுகள் கூடுமான அளவில் ஓர் அத்தியாயத்தில் அமைக்கப்படல் வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பல இடங்களில் சிதறியதுபோல் அமைத்தல் கூடாது.

*2.* செயல்வன்மை கொண்டவை முதலில் சொல்லப்பட வேண்டும். விதி விலக்குகளும், கட்டுப்பாடுகளும் சம்மந்தம் கொண்ட பிரிவுகளுக்கு அடியில், அடுத்ததாக வரும்படி அமைய வேண்டும்.

*3.* சில குறிப்பிட்ட சட்டச் சொற்றொடர்கள் எந்த இடத்திலும் அவசியமானவை என்ற ஒரு மனப்பாங்கு நிலவுகிறது. அது தவறு. எங்கு அவை மிகவும் அவசியம் எனப்படுகிறதோ அங்கு மட்டுமே அதைப் பிரயோகித்தல் வேண்டும். உதாரணம், 'not withstanding anything contained in this Act' without 'prejudice to' போன்றவை.

*4.* ஒரே அர்த்தமுள்ள இரண்டு சொற்களையும் சேர்த்து எழுதுவதும் அர்த்தமற்றது. உதாரணம், null and void.

**குறிகள்** (Punctuations): கூடுமானவரையில் கமா, செமி கோலன் போன்றவற்றின் உதவி இல்லாமல் கருத்தைத் தெளிவாக்க வேண்டும். அவை உபயோகிக்கப்படும் தருணத்திலும், அவை தவறுதலாகவிடப்பட்டு வாசிக்கப்பட்டாலும் அர்த்தம் மாறிவிடாமல் இருக்கவேண்டும்.

**நடை** (Style): உணர்ச்சி, வண்ணம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நடையே வெகு காலமாகச் சிறந்ததெனக் கொள்ளப்பட்டுவருகிறது. அவை செயல்களையும் (facts) உண்மைகளையும் மட்டும் குறிப்பதாக இருக்கவேண்டும். உவமான உவமேயங்கள், சொல் வழக்குகள் போன்றவற்றிற்குச் சட்டத்தில் இடமில்லை. தயக்கங்களோ சந்தேகங்களோ நடையில் ஏற்படக் கூடாது.

ஒவ்வொரு வாக்கியமும் எழுதப்படும்போது, அவை வழக்கறிஞர்களாலும், நீதிபதிகளாலும், மற்றும் பலராலும் பலவிதப் பொருள் கொள்ளப்படக்கூடும் என்பதை மனத்தில் கொண்டு, கூடுமானவரை தெளிவைக் கடைப்பிடிக்க வேண்டும். காலப் போக்கில் பலவிதப் பொருள் கொள்வதால் சிதைந்து போவதற்கு இடமளிக்கக் கூடாது.

பகுதி நான்கு

# 1. சட்டத் தீர்வழிகள்
## (Legal Remedies)

### அரசியலமைப்புத் தீர்முறைகள்
### (Constitutional Remedies)

*தீர்வழிகள் பற்றிப் பல்வேறு இடங்களில் படிப்பதற்கு வாய்ப்பு இருப்பதால், இப் புத்தகத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.*

*அரசியலமைப்புத் தீர்வழிகள், இந்திய அரசியலமைப்பின் 32ஆவது பிரிவின்கீழ் அடிப்படை உரிமைகளாகக் கொடுக்கப் பட்டுள்ளன.*

*இந்திய உச்ச நீதிமன்றத்துக்கும்* (Supreme Court) *மற்றும் மாநில உயர் நீதிமன்றங்களுக்கும், அரசியலமைப்பின்கீழ்க் கீழ்க் கண்ட நீதிப் பேராணைகள் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :*

**(அ) ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை** (Writ of Habeas Corpus)

*இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் எவ்விதத் தடையுமின்றிச் சுதந்திரமாக எங்கும் செல்வதற்கு உரிமை இருக்கிறது. ஒருவரைச் சிறைப்படுத்தச் சட்டப் பிரிவுகள் முழுமையாக அனுசரிக்கப்பட வேண்டும். ஒருவர் தாம் சட்டவிரோதமாக முறையற்ற விதத்தில் சிறைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதினுல் இப் பேராணையின் உதவியை உயர் நீதிமன்றங்களின்மூலம் நாடலாம். அவை சிறை வைத்திருப்போரை எந்த அதிகாரத்தின் கீழ், அல்லது எந்த முகாந்திரங்களின்கீழ் அவ்வாறு செய்திருக்கிருர்கள் என்பதை விளக்கும்படி ஆணையிடும். அவ் விளக்கங்கள் திருப்தி அளிக்காத தருணத்தில் முறையீட்டாளரை விடுவிக்கும்படி உத்தரவிடலாம்.*

**(ஆ) செயலுறுத்தும் நீதிப் பேராணை** (Writ of Mandamus)

உயர் நீதிமன்றம் ஒன்று, பொதுக் கடமைக்கேற்பச் சட்டப் படி செய்யவேண்டிய ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அரசாங்கத்திற்கோ, கீழ் நீதிமன்றத்துக்கோ, அல்லது கார்ப்பரேஷனுக்கோ, அல்லது ஒரு பொது அதிகாரிக்கோ இடும் கட்டளை செயலுறுத்தும் நீதிப் பேராணை என்பதாகும்.

**(இ) தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை** (Writ of Quo Warranto)

பொது அதிகாரப் பதவி வகிக்கும் நபர் ஒருவரை அவர் எந்த உரிமையின் அடிப்படையில் அதைப் பாத்தியதை கொண்டாடுகிறார் என்பதை வினவ இந்த ஆணை பிறப்பிக்கலாம். அவருடைய விளக்கங்கள் சட்டமுறையான தகுதிகள் பெற்றிருக்கவில்லையானால் அவரை அப் பதவியிலிருந்து நீக்கி உத்திர விடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருக்கிறது.

**(ஈ) நெறிமுறை உறுத்தும் நீதிப் பேராணை**

கீழ் நீதிமன்றம் அல்லது பேராயம் ஒன்றின்முன் இருக்கும் வழக்கில் சட்டத்தை அல்லது அதிகார வரம்பைப் பின்பற்றுவதில் தவறு ஏதும் இருக்குமானல் அதை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கென அந்த நடவடிக்கை ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு இடப்படும் ஆணை, நெறிமுறை உறுத்துவதாகும்.

**(உ) தடையுறுத்தும் நீதிப் பேராணை** (Writ of Prohibition)

இது, ஒரு கீழ் நீதிமன்றம் அதன் அதிகார வரம்பை மீறியோ, நாட்டின் பொதுச் சட்ட முறைக்கு முரணகவோ குறித்த ஒரு நடவடிக்கையை எடுக்காதவாறு பிறப்பிக்கப்படும் ஆணையாகும்.

**தகைமை முறை தீர்வழிகள்** (Equitable Remedies)

சட்டங்கள் எழுதப்பட்டு நிலையாக்கப்பட்ட காலத்திற்கு முன்னல், தகைமை முறையிலேயே வழக்குகள் தீர்க்கப்பட்டன. ஒவ்வொரு வழக்கிலும் இரு கட்சியினரின் செயல்கள் இயற்கையான நீதி முறைகளின் வழியிலேயே ஆராயப்பட்டன. எழுத்து வடிவில் நிலைப்படுத்தப்பட்ட பொதுவான (generalised) நியதிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் அக் காலத்தில் இல்லை. இயற்ருச் சட்டத்தின் சில நீதிநெறிகள் இன்றும் பின்பற்றப்பட்டு

வருகின்றன. தகைமை, நீதியின் மேல் கட்டப்பட்டுள்ள அவை, அசைக்கப்பட முடியாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை.

**இழப்பீடு பெறுவதற்கான தீர்வழிகள் (Remedies relating to Recovery of Damages)**

இழப்பீடுகள் பொதுவாக நீதிமன்றங்களின் யுக்தானுச் சாரப்படி வழக்குகளின் தன்மையைப் பொறுத்து வழங்கப்படுமாறு தீர்ப்புக் கூறப்படுகின்றன. செய்சட்டங்களும் பல சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைகளைக் குறிப்பிடுகின்றன. இழப்பீட்டுத் தொகை கீழ் வருமாறு வகைப்படுத்தப்படலாம்.

**1. சாதாரண அல்லது பொது இழப்பீடுகள் (Ordinary or General Damages)**

இது, ஒருவருக்கு ஏற்பட்ட உண்மை இழப்பு (actual losses) அல்லது ஒரு செயலினால் ஏற்படும் நேரடி இழப்பு முழுவதும் ஈடு செய்யப்படும் வகையில் அளிக்கப்படுவதாகும். இது பெரும்பாலும் ஒப்பந்த முறிவு சம்மந்தமான வழக்குகளிலும், சில உரிமைத் தீங்கு வழக்குகளிலும் அளிக்கப்படுகிறது.

**2. பெயரளவு இழப்பீடுகள் (Nominal Damages)**

இதில் இழப்பீட்டுத் தொகை மிகக் குறைந்து, பெயரளவினதாக இருக்கும். இது பாதிக்கப்பட்ட நபரின் உரிமையை நீதிமன்றம் நிலைநாட்டுகிறது. அவருடைய நிலை நியாயமானது என்பதைக் காட்டுவதற்காகவே அளிக்கப்படுகிறது. இவ்வகையான இழப்பீடு பணம் அல்லது பொருள் நஷ்டம் சம்மந்தப்படாத வழக்குகளில், ஆனால் அதே சமயத்தில் அதி முக்கியமற்ற வழக்குகளில் அளிக்கப்படுவதாகும்.

**3. சிறப்பு இழப்பீடுகள் (Special Damages)**

முன்னர்க் கூறப்பட்ட இருவகை இழப்பீடுகளும் பொருத்தமற்ற முறையில் இருக்கும் வழக்குகளில் சிறப்பு இழப்பீடு வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவரின் உண்மை இழப்பைத் தவிர அவருக்கு அதனடியாக ஏற்படும் உடனடிக் கஷ்டங்கள் பலவும் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இழப்பீடு வழங்கப்படுகிறது.

**4. வெகு சிறப்பான இழப்பீடுகள் (Exemplary Damages)**

உரிமைத் தீங்கு வழக்குகளில் வழக்குகளின் தன்மையைப் பொறுத்துப் பாதிக்கப்பட்ட விஷயம் சிறிதாகவோ அல்லது

பணம் பொருள் சம்மந்தமற்றதாகவோ இருப்பினும், அவற்றினால் ஏற்படும் விளைவுகள் (மனித உணர்வுகள், சமுதாய நிலை) கடுமையானவையாக இருக்கும்பட்சத்தில் வெகு சிறப்பான இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன.

**திருமணத் தீர்வழிகள்** (Matrimonial Remedies)

*1954*ஆம் வருடத்திய திருமணச் சட்டம், இந்தியக் குடிமக்களுக்குச் சாதி, மத, வேறுபாடின்றி எந்தவிதச் சடங்குகளுமற்ற ஒரு வகையான திருமணத்திற்கு வழி செய்கிறது. இச் சட்டம் திருமண உறவுகளைப் பலப்படுத்தும் வகையிலும், முறிவுகளை கடைசிப் பட்சத் தீர்வழியாகத் தரும் முறையிலும் அமைந்துள்ளது.

**சேர்ந்து வாழும் உரிமைகள்** (Restitution of Conjugal Rights)

தகுந்த காரணமில்லாமல் பிரிந்துவாழும் கணவனையோ மனைவியையோ கூடிவாழ எண்ணுபவர் நீதிமன்றத்தில் மனுச் செய்து கூடிவாழும் உரிமையை நிலைநாட்டலாம்.

**மனுதாரருக்கு எதிரான வாதங்கள்** (Defence to Petition of Restitution)

(அ) பிரிந்து வாழ வேண்டியதற்கான தகுந்த காரணங்கள்.

(ஆ) முறையீட்டாளரின் திருமண மீறல்கள் (matrimonial offences).

(இ) வழக்காடக் கூடாது என்ற முந்தைய ஒப்பந்தம்.

(ஈ) பித்துநிலை (Insanity).

(உ) பிரிந்து வாழ்வதற்கான ஒப்பந்தம்.

**தீர்ப்பு வழிப் பிரிவுறைவு** (Judicial Separation)

பிரிந்து வாழ்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்குக் கணவனோ மனைவியோ ஜில்லாக் கோர்ட்டுகளில் முறையிடலாம்.

**முறையீட்டாளரின் வாதங்கள்** (Grounds for Judicial Separation)

(அ) கற்பு நெறியின்மை (Adultery).

(ஆ) மூன்று வருடத்துக்குமேல் பிரிந்து வாழ்தல்.

(இ) I.P.C.-யினால் ஆறுவருடச் சிறைத் தண்டனை.

(ஈ) பித்துநிலை.

(உ) குரூர புத்தி (Mental cruelty).

(ஊ) பால்வினை நோய் (Veneral disease). தொழு நோய் (Leprosy).

(எ) கற்பழிப்பு, ஓரினப் புணர்வு, மிருகத்தன்மை ஆகிய குற்றங்கள் (ஆண்கள் பிரதிவாதியாயிருந்தால் மட்டும்).

**விவாக ரத்து (Divorce)**

பிரிவு 27, விவாக ரத்துக் கோரி விண்ணப்பிக்கும் விஷயம் குறித்தது.

பிரிவு 28, இரு தரப்பினரின் மனம்ஒத்த நிலையில் பெறும் விவாக ரத்துப் பற்றியது.

**குறித்த வகை மாற்றீட்டுச் சட்டத்தின்மூலம் தீர்வழிகள் (Remedies under Specific Relief Act, 1877)**

இவை, ஒரு குறிப்பிட்ட மாற்றீடு செய்து தரப்படல் வேண்டும் என்று தொடரப்படும் வழக்குகள் சம்மந்தப்பட்டவை. இவை இழப்பீடு வகைப் பரிகாரத்திலிருந்து வேறுபட்டவை.

**1. இழந்துபட்ட சொத்தைத் திருப்பப் பெறுதல்**

சட்டத்தின் வழியல்லாமல், வேறு முறையில் ஒரு நபர் அவருடைய சொத்துகளின் பாத்தியதையை இழக்க நேரிட்டால், மேற்படி சட்டத்தின் 9ஆம் பிரிவின்மூலம் சொத்துகளைத் திரும்பப் பெறுவதற்கு வழக்குத் தொடரலாம். இதுபோலவே அசையும் சொத்துகளின் உரிமையையும் திரும்பப் பெறலாம்.

**2. ஒப்பந்தங்களின் குறித்த நிறைவேற்றம் (Specific Performance of Contracts)**

ஒப்பந்தம் (contract) என்பது சட்டத்தின்மூலம் செல்லுபடியாக்கத் தக்க ஒப்பந்தங்களாகும். எனவே, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (Indian Contract Act) பூர்வாங்க முறைகளை நிறைவேற்றும் அனைத்தும் முறையான ஒப்பந்தங்களாகும். ஒப்பந்தம் செய்துகொள்ளும் இருதரப்பினர் அவரவர் செய்வதாக ஏற்றுக்கொண்ட செயல்களைச் செய்து முடிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றனர். ஒரு தரப்பினர் அவர் ஏற்றுக்கொண்ட செயலைச் செய்யமுடியாத நிலை, அல்லது செய்ய மறுக்கும் நிலை ஒப்பந்த முறிவு (Breach of Contract) ஆகும்.

குறித்தவகை மாற்றீட்டுச் சட்டத்தின் பிரிவு 12, எந்த வகையான ஒப்பந்த முறிவுகளைக் குறித்த வகையில் நிறைவேற்றம் செய்வதற்கான தீர்ப்புகள் வழங்கலாம் என்பதை விளக்குகிறது.

**3. வருமுன் தீர்வழி (Preventive Relief)**

பிரிவு 52 முதல் 56 வரை தடையுறுத்துக் கட்டளை பற்றி (Injunction) விவரிக்கின்றன. இது ஒன்றைச் செய்ய முற்பட்டிருக்கும் நபரை, அச் செயல் மேலும் செய்யப்படாமல் அத்துடன் நீதிமன்றத்தின் பார்வை முடியும்வரை நிறுத்திவைக்குமாறு இடப்படும் கட்டளையாகும்.

**இசைவுத் தீர்ப்புமுறைச் சட்டத்தின் தீர்வழிகள் (Remedies under the Arbitration Act, 1950)**

இரு தரப்பு நபர்களிடையே எழும் தற்கால அல்லது எதிர்காலப் பிரச்சினைகள், சச்சரவுகள் ஆகியவற்றைப் பெயர் குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத நடுவர்கள் (arbitrators) மூலம் தீர்த்துக்கொள்வது என்ற ஒப்பந்தம் இசைவுத் தீர்ப்புமுறை ஒப்பந்தம் (Agreement for Arbitration) எனப்படும். இந்த ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரிவுகளுக்கு இணங்க செய்யப்படல் வேண்டும். ஒப்பந்தம் எழுத்தில் இருக்க வேண்டும். இதைப் 'பஞ்சாயத்து' என்றும் கூறலாம்.

இரு தரப்பினரும் நடுவர்களைப் பற்றி ஒருமுக எண்ணம் ஏற்படாத நிலையில் நீதிமன்றம் நடுவர்களை நியமிக்கலாம்.

அல்லது நடுவர்கள் இறப்பு, கடமை ஆற்ற மறுக்கும் அல்லது இயலாத நிலைகளிலும் நீதிமன்றம் நடுவர்களை நியமிக்கலாம்.

நடுவர்களின் தீர்ப்பு, அவர்கள் ஆராய்ச்சிக்கு அளிக்கப்படாத ஒன்றை உள்ளடக்கி இருக்கும்போது அது சம்மந்தமான தீர்ப்பை மறுபார்வை செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

தவறுகளையும், விடுதல்களையும், தீர்ப்பு முற்றிலும் மாறுபடாத வகையில் திருத்துவதற்கும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும் ஒரு வழக்கு சம்மந்தப்பட்ட நபர்கள், தீர்ப்புக் கூறப்படுவதற்கு முன்னால், எந்தச் சமயத்திலும், நடுவர்களின் பார்வைக்கு வழக்கை ஒப்படைக்க விரும்பினால், வழக்கைத் திரும்பப் பெற நீதிமன்றத்தில் விண்ணப்

பிக்கலாம். மேலும் பிரிவு 39 நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கக் கூடிய சூழ்நிலைகளைக் கூறுகிறது. அவை பஞ்சாயத்தைத் தவிர்க்கவும், பஞ்சாயத்தைக் கட்டாயப்படுத்தவும், பஞ்சாயத்து ஒப்பந்தம் இருக்கும்போது நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்கை நிறுத்தவும், பஞ்சாயத்தாரின் தீர்ப்பைத் திருத்தவும், தள்ளவும், தள்ளாமல் இருக்கச் செய்யவும், பஞ்சாயத்தாரின் தீர்ப்பைச் செயல்படுத்தவும் விண்ணப்பம் செய்யலாம்.

**சொத்து மாற்றச் சட்டத்தின் கீழுள்ள தீர்வழிகள்** (Remedies under Transfer of Property Act)

அடைமானப் பணத்தைச் செலுத்திய பின்னர் அடைமானம் வைத்தவர், அடைமானதாரரை

(அ) அடைமானப் பத்திரத்தைத் திரும்பக் கொடுக்கும்படியும்,

(ஆ) சொத்தின் அனுபவபாத்தியதையை (possession) அல்லது உடைமையைக் கொடுக்கும்படியும்,

(இ) பதிவு செய்த அடைமான மீட்பைப் பெறவும் வற்புறுத்தலாம்.

இதுபற்றி 60ஆம் சட்டப் பிரிவு கூறுகிறது.

பிரிவு 91 அடைமானம் வைத்தவரைத் தவிர மற்றச் சிலருக்கும் அடைமானத்தைத் திருப்புவதில் உரிமைகளைத் தருகிறது.

(அ) அடைமானச் சொத்தில் எந்தவிதமான நலன் (interest) உள்ளவர்.

(ஆ) அடைமானச் சொத்தில் பற்றுப் பொறுப்பு (charge) உள்ளவர்.

(இ) அடைமானப் பணம் கொடுபடுவதற்குப் பிணையானவர் (Surety).

(ஈ) அடைமானம் வைத்தவருக்குக் கடன் கொடுத்த நபர் நீதிமன்றத்தின்மூலம் சொத்து விற்பனைக்கு ஆணை பெற்றிருக்கும் சமயத்தில்.

**சரக்கு விற்பனைச் சட்டத்தின்கீழ்த் தீர்வழிகள்** (Remedies under Sale of Goods Act)

சரக்கு விற்பனைச் சட்டத்தின்கீழ், சட்டத்தின் மற்றப் பிரிவுகளுக்கு உட்பட்டுப் பணம் கொடுக்கப்படாத ஒரு விற்பனையாளருக்குப் (unpaid seller) பின்வரும் தீர்வழிகள் உள்ளன.

(அ) சரக்கு விற்கப்பட்டு ஆனால் கைமாறாத ஒரு தருணத்தில் (possession of goods still with the seller) பணம் கொடுக்கப்படும் வரையில் பொருள்களை வைத்துக் கொள்ளும் உரிமை விற்பனையாளருக்கு உண்டு.

(ஆ) வாங்குபவர் (buyer) திவாலாகிவிட்டார் என்று தெரிந்தால், சரக்குகள் அவருக்குப் போய்க்கொண்டிருக்கும் வழியில் கைப்பற்றி மீண்டும் தன்னுடைமையாக்கிக் கொள்ளும் உரிமை விற்றவருக்கு உண்டு.

(இ) சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு, மறுவிற்பனை (right of resale) செய்யும் உரிமை விற்பனையாளருக்கு உண்டு.

விற்கப்பட்ட பொருளை ஏற்க மறுக்கும் தருணத்தில் விற்பனையாளர், இழப்பீடுகளுக்காக (Damages) வழக்குத் தொடரலாம்.

அதுபோலவே விற்ற பொருளை டெலிவரி தர மறுக்கும் விற்பனையாளரை இழப்பீடு கோரி வாங்கியவர் வழக்குத் தொடரலாம்.

**உரிமை இறக்கச் சட்டத்தின்கீழ்த் தீர்வழிகள் (Remedies under Indian Succession Act, 1925)**

ஒரு நபர் இறந்தபின் அவருடைய சொத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் பாத்தியதை கொண்டாடும் ஒருவர் ஜில்லா நீதிபதிக்குப் பாத்தியதைச் சான்றிதழுக்காக மனுச் செய்து கொள்ளலாம்.

**விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate)**

இது இறந்தவர் ஏற்படுத்திச் சென்ற உயிலை மெய்ப்பித்துப் பெறப்படும் சான்றிதழாகும்.

உயிலில் ஒரு நிர்வாகி (Executor) நியமிக்கப்பட்டிருந்தால், அவரே இச் சான்றிதழைப் பெறத் தகுதியுள்ளவர்.

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600 031

★

## தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1977 ஏப்ரல் முடிய 779 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

### மேலும் விரைவில் வெளிவருபவை

| | | | |
|---|---|---|---|
| பொறியியல் | — | 4 | நூல்கள் |
| மருத்துவவியல் | — | 1 | ,, |
| இயற்பியல் | — | 5 | ,, |
| வேதியியல் | — | 1 | ,, |
| விலங்கியல் | — | 2 | ,, |
| கணிதவியல் | — | 2 | ,, |
| வணிகவியல் | — | 3 | ,, |
| பொருளியல் | — | 2 | ,, |
| புவியியல் | — | 1 | ,, |
| வரலாற்றியல் | — | 9 | ,, |
| அளவையியல் | — | 1 | ,, |
| வானியல் | — | 1 | ,, |
| உளவியல் | — | 1 | ,, |
| புள்ளியியல் | — | 3 | ,, |
| கல்வியியல் | — | 2 | ,, |
| அரசியல் | — | 2 | ,, |
| கூட்டுறவியல் | — | 1 | ,, |

*கிடைக்குமிடம்:*

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை-600 006.

*கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்*